# உரிமைத் தமிழ்த் தேசம்

உரிமை: 4தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2052 பங்குனி / மார்ச் 2021 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா

தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be


## தேசத்தின் குரல்

## மக்கள் இயக்கங்களின் ஒற்றுமை வளர்க! பணி தொடர்க!




நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலில் வாக்குப்பதிவு நிறைவு பெற்று விட்டாலும் முடிவுகளுக்காகக் காத்திருக்க வேண்டிய நிலை! யார் அல்லது எந்தக் கட்சி அல்லது கூட்டணி வெற்றி பெற்றாலும் தமிழ்நாட்டின் வரலாற்றில் அது ஒரு திருப்புமுனையாகவோ மக்கள் வாழ்வில் ஒரு விடியலாகவோ

## உள்ளே...


1. தேசத்தின் குரல் 1
2. குறைந்தபட்சம் நமக்கு, அதிகபட்சம்அவர்களுக்கு-4
3. மநீம கமலின் கைவிளக்கு இருட்டரசியல் போக்குமா?-12
4. தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கை - 16
5. தமிழ்த் தேசிய நோக்கில் நாதக சீமான் அரசியல்!- 19
6. சூழலியல் வகுப்பு(4)-24
7. தமிழ்த்தேசிய அரசியலாளர்கள் வாக்களிக்க மறுப்பது ஏன்? -35
8. நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில் (17) - 55
9. களம் காலம் -60
10. கியூபாவின் புரட்சிப்பெண்கள்(13) -65
11. ஓய்ந்தது நீதியின் குரல்! -73
12. சாவினால் ஓய்வு பெற்றார் ஆனைமுத்து! -75
13. செங்காட்டான் குறிப்பு-80


பதிவு எண் :R.Dis. No. 1964/2014

அமையும் என்று நாம் நம்பவில்லை.

அதே போது இந்தத் தேர்தலைத் தமிழ்நாட்டில் காலூன்றும் வாய்ப்பாக பாரதிய சனதா கட்சி கருதியது. எனவே பாசிச எதிர்ப்புக் களத்தில் போராடும் மக்கள்-இயக்கங்கள் பாசக போட்டியிடும் 20 தொகுதிகளிலும் அதனைத் தோற்கடிக்கப் பாடுபடுவது என்று முடிவெடுத்தோம். நம்மைப் பொறுத்த வரை யாருக்கு வாக்களிப்பது பாசகவைத் தோற்கடிக்கப் பயன்படும் என்ற முடிவை வாக்காளர்களிடமே விட்டு விட்டோம். நம்மிற்சிலர் பாசகவைத் தோற்கடிக்க எதிர்த்தரப்பிலுள்ள திமுக கூட்டணிக்கு வாக்குக் கேட்க முடிவெடுத்தாலும் அது பாசிச பாசக எதிர்ப்பியக்கத்தில் சிக்கலைத் தோற்றுவிக்கவில்லை.

தமிழ்த் தேசிய நோக்கில் பெரும்பான்மைத் தொகுதிகளில் ஒரு கட்சி அல்லது கூட்டணியை ஆதரிப்பது இறைமையில்லாத மாநிலச் சட்டப் பேரவையையும் அரசுரிமையற்ற மாநில ஆட்சியையும் தேர்ந்தெடுப்பதில் பங்கேற்பதாகும் என்ற முறையில் 214 தொகுதிகளில் நாம் தேர்தலில் பங்கேற்கவில்லை (அல்லது நோட்டாவுக்கு வாக்களித்தோம்). இதிலும் சில தோழமை அமைப்புகள் அதிமுக கூட்டணிக்கு எதிராக வாக்களிக்க முடிவு செய்தாலும் அதுவும் கூட பாசிச பாசக எதிர்ப்பியக்கத்தில் எவ்வித சிக்கலையும் தோற்றுவிக்கவில்லை.

பாசிச பாசக எதிர்ப்பியக்கத்தின் போராட்ட ஒற்றுமையைக் காத்துக்கொண்டே வேறுபட்ட உத்திகளைக் கையாண்ட அரசியல் முதிர்ச்சிக்காக மக்கள் இயக்கங்களைப் பாராட்டத்தான் வேண்டும். இருபது தொகுதிகளில் மக்கள் இயக்கங்கள் பன்னிரண்டு நாட்களுக்கும் மேலாக நடத்திய பாசக எதிர்ப்புப் பரப்புரை எவ்வளவு திறம்பட அமைந்தது என்பதைத் தெரிந்து கொள்ள மே 2 வரை காத்திருக்கத் தேவையில்லை. சென்னையிலும் கோவை தெற்கிலும் மக்கள் இயக்கங்களின் பரப்புரையைத் தடுக்க பாசக ஆர்எஸ்எஸ் வன்முறையாளர்கள் செய்த முயற்சியை நம் தோழர்கள் பொறுமையாக எதிர்கொண்டு முறியடித்தார்கள். இறுதியில் பாசக எந்த அளவுத் தோல்வி கண்டாலும் அந்தத் தோல்வியில் மக்கள் இயக்கங்களின் பங்கும் உறுதியாக இருக்கும்.

20 தொகுதிகளில், அல்லது அவற்றுள் பெரும்பாலானவற்றில் பாசகவைத் தோற்கடித்து விட்டால் பாசிசத்தை வீழ்த்தி விட முடியும் என்ற மயக்கம் நமக்கில்லை. இந்திய வல்லரசு




பாசிசத் தலைமையில்தான் நீடித்து வரும், தமிழ்நாட்டிலும் கூட யார் ஆட்சிக்கு வந்தாலும் பாசிசம் தொடர்ந்து கேடுகளைச் செய்து வரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால் தமிழ்நாட்டு மக்கள் பாசிச பாசகவை எவ்வளவு கடுமையாக வெறுத்தொதுக்குகிறார்கள் என்பதை சற்றொப்பக் காட்டும் அளவுகோலாக இந்தத் தேர்தல் முடிவு அமையக் கூடும்.

பாசிச பாசகவைத் தோற்கடிக்கும் மக்கள் இயக்கங்களின் பரப்புரையில், குறிப்பாக திருவையாறு, கோவை தெற்கு, சென்னை ஆயிரம்விளக்கு ஆகிய தொகுதிகளில் முனைப்புடன் பாடாற்றிய தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் தோழர்களுக்குப் புரட்சிய வாழ்த்து! அனைத்துத் தொகுதிகளிலும் உழைத்த மக்கள் இயக்கங்களின் தோழர்கள் அனைவரையும் பாராட்டுகின்றோம்!

பாசிச பாசக எதிர்ப்பு மக்கள் இயக்கங்கள் இத்தேர்தலில் கட்டிய ஒற்றுமையையும் காட்டிய செயல்முனைப்பையும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும்! பாசிச எதிர்ப்பின் இறுதிக் களங்களான மக்கள் பெருந்திரள் போராட்டங்களின் பாதையில் முன்னேறிச் செல்ல உறுதியேற்போம்!

# குறைந்தபட்சம் நமக்கு, அதிகபட்சம் அவர்களுக்கு:

**சமந்தா**

உலகெங்கும் மீயுயர் சொத்து மதிப்பு கொண்ட நபர்களின் எண்ணிக்கை 3)கோடி அமெரிக்க டாலருக்கு மேல் 2020 (முதல் 2025 வரையிலான 5 ஆண்டுகளில் 27 சதவீதம் அதிகரிக்கும் என்றும் ஆனால் இந்தியாவில் அதி உயர் சொத்து மதிப்பு கொண்ட நபர்களின் எண்ணிக்கை 5 ஆண்டுகளில் 63 சதவீதம் உயர்ந்து 11,198 ஆக அதிகரிக்கும் என நைட் ஃபிராங்க் இந்தியா என்ற சொத்து ஆலோசனை நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது .இந்தியாவில் அதிகரித்து வரும் பொருளாதார சமமின்மையையே இது வெளிப்படுத்துகிறது.

ஐக்கிய முடியரசின் உச்ச நீதிமன்றம் சமீபத்தில் உபெர் தொழில்நுட்ப நிறுவனம் ,அதன் ஓட்டுநர்களை" தொழிலாளர்களாக "கருத வேண்டும் என்றும் அவர்களுக்கு விடுமுறை ஊதியம் , ஓய்வு இடைவெளி ,குறைந்தபட்ச ஊதியம் ஆகியவற்றை உறுதிசெய்ய வேண்டும் என தீர்ப்பளித்துள்ளது .இதன் பிறகு ,சர்வதேச தொழிலாளர் கூட்டமைப்பானது இணைய தொழில் நுட்பங்களால் ஊழியர்களுக்கும் ,சுயதொழில் முனைவோருக்குமான வேறுபாடு மழுங்கடிக்கப் பட்டுள்ளதாகவும் ,தொழிலாளர் நலன்களை உறுதிசெய்யும் வகையில் முறைசாரா பொருளாதாரத்தை ஒழுங்குமுறை செய்ய வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளது.ஆனால் இந்தியாவில் பாஜக ஆட்சியில் வரலாறு காணாத அளவிற்கு தொழிலாளர்களையும் , விவசாயிகளையும் சட்டப் பூர்வமாக ஒடுக்குமுறை செய்யும் படுபிற்போக்கான நிலை தான் உள்ளது.

உலகிலே இந்தியத் தொழிலாளர்கள் மிக நீண்ட நேர உழைப்பில் ஈடுபடுபவர்களாக இருக்கிறார்கள் என்றும் உலகளாவிய ஊதிய அறிக்கையின்படி, சில சஹாராவின் கீழுள்ள ஆப்பிரிக்க நாடுகளைத் தவிர, இந்தியாவின் குறைந்தபட்ச ஊதியம் உலகிலேயே மிகக் குறைவாக உள்ளதாக சர்வதேச தொழிலாளர் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஏழைகளின் எரிபொருள் மண்ணெண்ணெய் மீதான மானியத்தை பாஜக அரசு நீக்கியுள்ளது ,பொது

விநியோக முறையிலும் சந்தை விலையிலே வழங்கப்படுகிறது .சமையல் எரிவாயு உருளையின் விலை200 ரூபாய்க்கு மேல் அதிகரிக்கப்பட்டுள்ளது.பெட்ரோலின் விலை பல இடங்களில் 100 ரூபாய்க்கு மேல் அதிகரித்துள்ளது .பெட்ரோல் ,டீசல் விலையை எண்ணெய் நிறுவனங்கள்தான் நிர்ணயிக்கின்றன ,அரசின் கையில் ஒன்றுமே இல்லை என நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். இப்போதைய எரிபொருள் விலை உயர்வுக்கு தமிழக அரசின் வரி விதிப்பு காரணம் அல்ல என தமிழக அரசின் நிதித்துறை செயலாளர் கிருஷ்ணன் தெரிவித்துள்ளார். மத்திய அரசு 21-2020 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்டதை விட 80 விழுக்காடு அதிகமாக ரூ . 2.3லட்சம் கோடி வருவாயை பெட்ரோல் ,டீசல் மீதான கூடுதல் வரி மூலம் திரட்டியுள்ளது .எரிபொருள் விலையை நியாயமான அளவில் கட்டுப்படுத்த பெட்ரோல் ,டீசல் மீதான மறைமுக வரிகளை குறைக்கவேண்டும் என மத்திய வங்கி ஆளுநர் சக்தி காந்தா தாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

கோடிக்கணக்கான மக்கள் வேலை இழந்துள்ளனர், பெரும் எண்ணிக்கையில் சிறுகுறு, நடுத்தர தொழிலகங்கள் பல மூடப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஒரு துரும்பை கூட நகர்த்தாத பாஜக அரசின் நிதியமைச்சர் இது ஏழைகளுக்கான அரசு; பணக்காரர்களுக்கான அரசு எனத் தவறாக பிரச்சாரம் செய்யப்படுகிறது என எதிர்க்கட்சிகளை சாடுகிறார். உண்மை தான் ஏழை, பணக்காரர் ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதற்கான எந்த திட்டமும் அளிக்காது, ஏழைகளை மேலும் ஏழைகளாக்கும் பாஜக அரசு ஏழைகளுக்கான அரசு தானே!. விடுதலை என்பது வெளி நாட்டுக் கருத்தியலாம் கூறுகிறது பாஜக அரசு.'புதிய நேரடி அன்னிய முதலீடு என்ற பெயரில் வெளிநாட்டு அழிக்கும் கருத்தியலில் இருந்து இந்தியா காப்பாற்றப்பட வேண்டும் என்கிறார் பிரதமர் நரேந்திர மோடி.சோசியலிஸம் போன்ற வெளிநாட்டுக் கருத்தியல்களை நமது நாட்டில் பொருத்த முயற்சிக்கும் போது, அது அமைப்பை இறுக்கமானாதாக ஆக்கிவிடுகிறதாம் கூறுகிறார் நிதியமைச்சர். அதனால் தான் ‘சோசலிச சுமை’ என்று கூறி மக்களின் பொதுத்துறை சொத்துக்களை எல்லாம் விற்றுவருகிறார்கள்.

குறைந்தபட்ச அரசு ,அதிகபட்ச ஆளுகை என்று கூவிவரும் பிரதமர் நரேந்திர மோடி பணமாக்குதல் ,நவீனமயமாக்குதல் என்ற மந்திரத்துடன் நான்கு மூலோபாயத் துறைகளைத் தவிர்த்து 100 பொதுத்துறை நிறுவனங்களை விற்று பணமாக்கப்படும் என்றும் ,அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பல பயன்படுத்தப்படாத சொத்துக்களை விற்று2.5 லட்சம் கோடி திரட்டப்படும் என்பதையும் உறுதிபடுத்தியுள்ளார் .

1.அணுசக்தி ,விண்வெளி ,பாதுகாப்பு .2 ;போக்குவரத்து ,தொலைத்தொடர்பு .3 ;ஆற்றல் , பெட்ரோலியம் ,நிலக்கரி ,பிற தாதுக்கள் .4 ;வங்கி ,காப்பீடு ,நிதி சேவைகள் ஆகிய நான்கு மூலோபாய துறைகளை தவிர அனைத்துமே தனியார்மயமாக்கப்படும் என்று அறிவித்துள்ளார் . இது பேராசையை தவிர வேறொன்றுமில்லை சென்ற ஆண்டில் தனியார்மயத்தின் மூலம் 2.1லட்சம் கோடி திரட்டப்படும் என இலக்கு நிர்ணயித்திருந்தார்கள்.ஆனால் 40355 கோடி மட்டுமே திரட்ட முடிந்தது' .பிஸினஸ்-'வணிக அலுவல் மேற்கொள்வது அரசின்' பிஸினஸ்-'வணிக அலுவல் அல்ல என பிரதமர் கூறியுள்ளார் .தனியார்மயம் என்ற பெயரில் பொதுச் சொத்துக்களை விற்பதும் வணிக அலுவல் தானே.

அரசு பங்குகளை தனியாரிடம் விற்பது நிதி பற்றாக்குறையை குறைப்பதற்காக அல்ல , வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டே செய்யப்படுவதாக முதலீடு,பொதுச் சொத்து மேலாண்மை துறையின் செயலாளர் கூறுகிறார் .இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவே பொதுத் துறை நிறுவனப் பங்குகள் விற்பனை செய்யப்படுகிறது என பாஜக தேசிய மகளிரணி தலைவர் வானதி சீனிவாசன் மோசடியான ஒரு அப்பட்டமான பொய்யை கூறியுள்ளார்.!

23 விழுக்காடு இந்தியக் குடும்பங்களில் மட்டுமே இணைய-கல்விக்கான வாய்ப்பு உள்ளதாக யுனிசெப் அறிக்கை தெரிவித்துள்ளது. ஆனால் பெருந்தொற்று காரணமாக எந்தக் குழந்தையும் இணையக் கல்வி பெறுவதில் இழப்பைச் சந்திக்கவில்லை என்று பிரகாஷ் ஜவடேகர் பெருமிதம் கொள்கிறார்.

அரசு தொடர்பான வங்கி பரிவர்த்தனைகளை மேற்கொள்வதில் தனியார் வங்கிகள் மீதான கட்டுப்பாடுகளை நீக்கியுள்ளதாக நிதியமைச்சர் அறிவித்துள்ளார். தனியார் துறையானது பொருளாதார வளர்ச்சியின் முக்கிய உந்து சக்தியாக இருப்பதாகவும் ,வர்த்தகத்தை எளிமைப்படுத்துவதற்கான சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளதை பயன்படுத்தி தனியார் துறை அதிக முதலீடுகளை செய்து இந்தியாவை உலகின் மிக வேகமாக வளரும் பொருளாதாரமாக மாற்ற வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார் .ஆனால் தனியார்துறை செவி மடுத்ததா ? இல்லையே...

வேளாண் உள்கட்டமைப்பு ,மேம்பாட்டு செஸ் மூலம் வசூலிக்கப்படும் ரூ . 30,000கோடி மாநிலங்களுக்குச் செல்லும் ,என்றும் இதனால் வேளாண் உள்கட்டமைப்பை மேம்படுத்த முடியும் என்று நிதியமைச்சர் கூறியுள்ளார். இதை எப்படி நம்புவது நிதியமைச்சர் அவர்களே ! முதலில் மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளக் கூடாது என்பதற்கு தான் செஸ் அளவை அதிகரித்து வருகிறது பாஜக அரசு .தனியார் மயப்படுத்துவதன் மூலம் கிடைக்கும் வருவாயானது தேசிய முதலீட்டு நிதியாக) NIF) சேமிக்கப்படுகிறது ,இதிலிருந்து கிடைக்கும் வருவாயை மக்களுக்கான சமூகத் துறைகளுக்காக செலவு செய்யவேண்டும் என்பதே நியதி . ஆனால் இதிலிருந்தே நெடுஞ்சாலைகளை ஏற்படுத்துவதற்கான நிதி பெறப்படுகிறது .மத்திய சாலை உள்கட்டமைப்பு நிதியில் )CRIF) இருந்து குடிநீர் வழங்கும் ஜல்ஜீவன் திட்டத்திற்கான நிதி அளிக்கப்படுகிறது .!இப்படியிருக்கையில் வேளாண் உள்கட்டமைப்பு ,மேம்பாட்டு செஸ் நிதி மட்டும் என்ன இதில் விதிவிலக்கா.

"மின்சாரம் என்பது பொதுப்பட்டியலில் உள்ளது. இலவசமாகவோ சலுகை விலையிலோ மின்சாரம் வழங்குவது மாநில அரசின் பொறுப்பு என மக்களவையில் மத்திய இணை அமைச்சர் ஆர்.கே.சிங் தெரிவித்துள்ளார்.பிறகு எதற்காக மின்சாரத் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு மாநிலங்களை மத்திய அரசு வலியுறுத்துகிறது. பொதுப்பட்டியலிலுள்ள விவசாயத் துறையின் மீதான மாநில அரசுகளின் உரிமைகளை பறிக்கும் விதமாகவே புதிய வேளாண் சட்டங்களை இயற்றியுள்ளது மத்திய அரசு.

கிரெட்டா துன்பெர்க், பாடகர் ரிஹானா என உலகெங்கிலும் பலர் டெல்லி விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவளித்துள்ளனர். கேடு கெட்ட பாஜக அரசு கிரெட்டாவின் மேல் வழக்கு பதிவு செய்துள்ளது. ஒரு கருத்தை பகிர்ந்ததற்காக சூழலியல் ஆர்வலர் திஷா ரவியை சிறையில் அடைத்துள்ளது. நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து, போராட்டக்காரர்களைத் தடுக்க சாலையில் ஆணிகளை அறைந்து தடுக்கும் முறையை தான் கண்டதில்லை. இப்போது, இந்தியாவுக்கு வெளியே இருக்கும் மக்களும் விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள். ஆதலால், மத்திய அரசு தன்னை சுயபரிசோதனை செய்ய வேண்டும் என சரத்பவார் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சிறு குறு நடுத்தர நிறுவனங்களின் பங்களிப்பை 30சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக உயர்த்த வேண்டும் என பல முறை நிதின் கட்காரி தெரிவித்துள்ளார் .காதி ,கிராமத் தொழில்கள் தொழில்நுட்ப மாற்றங்களின் மூலம் வருவாயை உயர்த்த வேண்டும் என்றும் 5 ஆண்டுகளுக்குள் ரூ. 5லட்சம் கோடிக்கு வருவாயை உயர்த்த வேண்டும் என்றும் நிதின் கட்காரி அறிவுறுத்துகிறார் .ஆனால் இந்தாண்டு சிறு ,குறு ,நடுத்தர தொழில் துறைக்கு ஒதுக்கப்பட்டது வெறும் ரூ. 15,700கோடி மட்டுமே.

மத்திய அரசு தன் வருவாயை குறைத்து மதிப்பிட்டுள்ளதே ஒழிய அதிகமாக மதிப்பிடவில்லை என்றும் 2021 நிதிநிலையறிக்கையில் 5.54 லட்சம் கோடி அளவிற்கு அதிகமாக மூலதன செலவுகளுக்கான ஒதுக்கீடானது பொருளாதார வளர்ச்சிக்கான பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் இந்தியாவை 5 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என பொருளாதார விவகார செயலாளர் தருண் பஜாஜ் தெரிவித்துள்ளார்.

ஆனால் நிதி நிலை அறிக்கையில் மூலதன முதலீடுகளுக்காக 4.39 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்படுவதான அறிவிப்பு ஒரு தோற்ற மாயை என்கிறார் .முன்னாள் நிதிச் செயலாளர் கார்க் . நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தனது நிதி நிலையறிக்கை உரையில் 22-2021 மூலதன செலவுக்கான ஒதுக்கீட்டை சென்ற ஆண்டை விட 34.5 விழுக்காடு உயர்த்தி ரூ . 5.54லட்சம் கோடியாக அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்21-2020 .ஆம் ஆண்டிற்கான ரயில்வே துறைக்கான ரூ. 108,398 கோடி மூலதனச் செலவினங்களில் ,ரயில்வே துறையில் ஏற்பட்ட வருவாய் இழப்புக்காக அளிக்கப்பட்ட 79,398 கோடி ரூபாய் தொகையும் மூலதன செலவினமாகக் காட்டப்பட்டுள்ளது .இதைக் கழித்தோமானால் வெறும் ரூ . 29,000கோடி மட்டுமே21-2020 ல் ரயில்வே துறைக்கு மூலதன செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார் .இது அல்லாமல் 12,000 கோடி கடன் தொகையும் மூலதன செலவினமாக குறிப்பிடப்பட்டுள்ளது . இவற்றை எல்லாம் நீக்கிப் பார்த்தால் திருத்தப்பட்ட மூலதன செலவு மதிப்பீடு ரூ . 347,765 கோடியாகக் குறைகிறது ,எனவும் தெரிவித்துள்ளார்.

2020-21ல் அரசு செலவினங்களின் உயர்வு கணக்கிடப்பட்டதைப் போல் 28.4 சதவீதமாக இருக்காது , 17.3சதவீதமாக இருக்கலாம் .ரூ . 30.4லட்சம் கோடி அரசு செலவிற்கான ஒதுக்கீடாக 21-2020 நிதி

நிலை அறிக்கையில் நிர்ணயிக்கப்பட்டது ,இது திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் ரூ. 34.5 லட்சம் கோடியாக உயர்த்தப்பட்டது ,ஆனால் 20-2019 ல் 26.9 லட்சம் கோடி மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளது எனவும்2021 ,ல் அரசு செலவினம் திட்டமிடப்பட்டதை விட மிகக் குறைவானதே என்றும் அது வேண்டலை தூண்டாது என்றும் இந்தியப் பொருளாதாரத்தை கண்காணிக்கும் மையம் தெரிவித்துள்ளது.

2020-21 ஆம் ஆண்டில் உணவு மானியமாக அளிக்கப்பட்ட ரூ. 2.4லட்சம் கோடியில் பகுதியளவு , இந்திய உணவு கழகத்துக்கு ஏற்கெனவே செலுத்த வேண்டிய கடன் தொகையே என்பதையும் குறிப்பிடவேண்டும்.

**பணவீக்கம்:**

டிசம்பர் மாதத்தில் நுகர்வோர் குறியீடு அடிப்படையிலான சில்லறை பணவீக்கத்தின் அளவு 4.06 விழுக்காடு அதிகரித்துள்ளது ,உணவுப் பொருட்களின் விலைவாசி1.89

விழுக்காடு அதிகரித்துள்ளது .காய்கறிகளின் விலைவாசி15.84 விழுக்காடு குறைந்துள்ளது . தானியங்களின் விலைவாசி 0.07 விழுக்காடு அதிகரித்துள்ளது .பருப்பு வகைகளின் விலைவாசி 13.39விழுக்காடு அதிகரித்துள்ளது .முட்டையின் விலை 12.85 விழுக்காடு உயர்ந்துள்ளது.எண்ணெய் ,கொழுப்பு ஆகியவற்றின் விலைவாசி 19.71 விழுக்காடு அதிகரித்துள்ளது .மீன்,இறைச்சியின் விலை 12.54 விழுக்காடு உயர்ந்துள்ளது .தமிழ்நாட்டில் பணவீக்கம்5.27 விழுக்காடு உயர்ந்துள்ளது.

**டிசம்பரில் தொழில்துறை வளர்ச்சி:**

புள்ளியியல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தொழில்துறை உற்பத்திக் குறியீட்டு அறிக்கையின் படி நவம்பரில் மொத்த உற்பத்திக் குறியீடு ஒரு விழுக்காடு சரிவடைந்துள்ளது . முதன்மைத் துறைகளில் சுரங்கத் துறையில் உற்பத்தி 4.8 விழுக்காடு சரிவடைந்துள்ளது . செய்பொருளாக்கத் துறையில் உற்பத்தி 1.6 விழுக்காடும் ,மின்சார உற்பத்தி 5.1 விழுக்காடும் அதிகரித்துள்ளது .

பயன்பாட்டு அடிப்படையிலான வகைப்பாட்டில் முதன்மை பொருட்களின் உற்பத்தி 0.3 விழுக்காடு சரிவடைந்துள்ளது .மூலதனப் பொருட்களின் உற்பத்தி 0.6 விழுக்காடும் கட்டுமானப் பொருட்களின் உற்பத்தி 0.9 விழுக்காடும் ,நீடித்த நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 4.9 விழுக்காடும் அதிகரித்துள்ளது .உடனடி நுகர்வுப் பொருட்கள் ,(%2.0) இடைநிலைப் பொருட்கள் ,(%0.4) ஆகியவற்றின் உற்பத்தியும் அதிகரித்துள்ளது .

2020-21 நிதியாண்டின் தேசிய வருவாய் :

தேசிய புள்ளியியல் அலுவலகம் 21-2020 நிதியாண்டின் தேசிய வருவாய் குறித்த இரண்டாவது மதிப்பீடுகளையும் மூன்றாம் காலாண்டில்) அக்டோபர்-டிசம்பர் (மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளையும் வெளியிட்டுள்ளது.

2020-21ல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பு 134.09 லட்சம் கோடி ரூபாயை எட்டும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது20-2019 .ல் 4.0 விழுக்காடாக அதிகரித்த வளர்ச்சி விகிதம்21-2020 ல் 8 விழுக்காடு குறுக்கமடையும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது .தனிநபர் வருவாய் 9.1 விழுக்காடு குறுக்கமடையும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

2020-21 நிதியாண்டின் மூன்றாம் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 0.4 விழுக்காடு வளர்ச்சியுடன் 36.22 லட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மூன்றாம் காலாண்டில் மொத்த மதிப்புக் கூட்டலின் மதிப்பு 6.5 விழுக்காடு வீழ்ச்சியடைந்துள்ளது . விவசாயம் சார்ந்த தொழில்களின் வளர்ச்சி 3.9 விழுக்காடும் ,உற்பத்தித் துறையின் வளர்ச்சி 1.6 விழுக்காடும் ,மின்சாரம்,நீர் வழங்கல் ,பிற சேவைகளின் வளர்ச்சியானது 7.3 விழுக்காடும் அதிகரித்துள்ளது .சுரங்கத் தொழில்துறையின் வளர்ச்சி 5.9 விழுக்காடு வீழ்ச்சியடைந்துள்ளது , வர்த்தகம் ,போக்குவரத்து ,ஹோட்டல் ,தகவல் தொடர்புதுறைகளின் வளர்ச்சி 7.7 விழுக்காடும் , பொது நிர்வாகம் ,பாதுகாப்புத் துறையின் வளர்ச்சி 1.5 விழுக்காடும் வீழ்ச்சியடைந்துள்ளது.

ஜனவரியில் தொழில்துறை வளர்ச்சி:

தொழில்துறை ,உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத்துறை வெளியிட்ட எட்டு முக்கிய தொழில்களின் ஒருங்கிணைந்த உற்பத்திக்குறியீடு ஜனவரியில் 0.1 விழுக்காடு அதிகரித்துள்ளது . ஜனவரியில் நிலக்கரி உற்பத்தி 1.8 விழுக்காடும் ,கச்சா எண்ணெய் உற்பத்தி 4.6 விழுக்காடும் , இயற்கை எரிவாயு உற்பத்தி 2.0 விழுக்காடும் குறைந்துள்ளது. பெட்ரோலிய சுத்திகரிப்பு தயாரிப்புகள் 2.6 விழுக்காடு குறைந்துள்ளது.உரங்கள் உற்பத்தி 2.7 விழுக்காடு அதிகரித்துள்ளது.எஃகு உற்பத்தி 2.6 விழுக்காடு அதிகரித்துள்ளது. சிமெண்ட் உற்பத்தி 5.9 விழுக்காடு குறைந்துள்ளது. மின்சார உற்பத்தி 5.1 விழுக்காடு அதிகரித்துள்ளது.

.குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு அதிக உதவி கிடைக்காவிட்டால் ஒரு

தலைமுறையையே இழக்க நேரிடும் என சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டாலினா ஜார்ஜீவா எச்சரித்துள்ளார் .கோவிட் 19-தாக்குதலுக்குப் பிறகு வளர்ந்து வரும் நாடுகளில் 6 விழுக்காட்டிற்கும் ,குறைந்த வருவாய் கொண்ட நாடுகளில்2 விழுக்காட்டிற்கும் , வளர்ந்த நாடுகளில் 24 விழுக்காட்டிற்கும் நிதி அளிக்கப்பட்டுள்ளன 50 .விழுக்காடு வளரும் நாடுகள் பின்தங்கியிருக்கும் அபாயம் உள்ளது .பெரிய சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு ,பணக்கார நாடுகளும் சர்வதேச நிறுவனங்களும் உதவி செய்ய முன்வரவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். ஆனால் ஏழை நாடுகள் குறைந்தபட்சமாக கோவிட் 19-தடுப்பு மருந்துகளை கிடைக்கப்பெறச் செய்வதைக் கூட பணக்கார நாடுகள் தடுத்துள்ளன .கொரோனா தடுப்பு மருந்து நிறுவனங்களுடன் பணக்கார நாடுகள் நேரடியாக செய்து கொள்ளும் ஒப்பந்தத்தால் ஏழை நாடுகளுக்கு கரோனா தடுப்பு மருந்து வழங்கப்படுவது பாதிக்கப்படுகிறது என்று உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.வெறும் 10 நாடுகளுக்கு மட்டும் சுமார் 75 விழுக்காடு கரோனா தடுப்பு மருந்துகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

கோவிட் - 19தொற்றுநோய்களின் போது இந்தியா மனிதகுலத்திற்கு சேவை செய்ய முடிந்தால் , அது தனியார் துறையின் பங்கே காரணமாகும் என்று கூறுகிறார் பிரதமர் .அதனால் தான் பாஜக அரசு இந்தியன் ட்ரக்ஸ் அண்ட் பார்மாசூட்டிகல்ஸ் லிமிட் ,ராஜஸ்தான் ட்ர்கஸ் அண்ட் பார்மாசூட்டிகல்ஸ் என்ற இரு அரசு பொதுத்துறை மருந்து நிறுவனங்களை மூடவும் 3 , பொதுத்துறை மருந்து நிறுவனங்களின் பங்குகளை விற்கவும் திட்டமிட்டுள்ளது .

பொதுத்துறை முக்கியமானது என்றால் ,தனியார் துறையின் பங்கும் மிக முக்கியமானது என்ற பிரதமர்" , தனியார் துறைக்கு எதிராக முறையற்ற சொற்களைப் பயன்படுத்துவது கடந்த காலங்களில் ஒரு சிலருக்கு வாக்குகளைப் பெற்றிருக்கலாம் ,ஆனால் அந்த காலம் கடந்து போய்விட்டது வாக்குகளுக்காக தனியார் துறையை" அவதூறு" "துஷ்பிரயோகம் செய்யும் " கலாச்சாரம் இனி ஏற்றுக்கொள்ளப்படாது தனியார் துறையை துஷ்பிரயோகம் செய்யும் கலாச்சாரம் இனி ஏற்றுக்கொள்ளப்படாது என்கிறார் நரேந்திர மோடி.

குறைந்தபட்ச அரசு ,அதிகபட்ச ஆளுகை என்னும் பாஜக அரசின் கொள்கையானது ,குறைந்தபட்சம் மக்களுக்கு ,அதிகபட்சம் பெரும் தனியார் துறைக்கு என்பதையே குறிப்பிடுகிறது .

# மநீம கமலின் கைவிளக்கு இருட்டரசியல் போக்குமா?

**தியாகு**



இன்று (5/4/2021) இந்து தமிழ் திசை நாளேட்டில் ”காலமும் மக்களும் கொண்டுவந்து விட்ட இடம் இது!” என்ற தலைப்பில் மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் திரு கமல் ஹாசனின் பேட்டி வெளிவந்துள்ளது, மையவியம் அல்லது செண்ட்ரிசம் (centrism) என்ற தமது கட்சியின் கருத்தியலுக்கு அவர் இந்தப் பேட்டியில் விளக்கமளிக்க முயன்றுள்ளார்:

“தமிழில் சொல்ல வேண்டுமானால் நடுநிலைமை. அரசியலற்ற நிலையல்ல. இது வள்ளுவர் போற்றும் நிலை. ஒரு திறந்த மனப்பாங்கு மரபோ நவீனமோ பகுத்தறிந்து நமக்கான விஷயங்களை எடுத்துக் கொள்வோம்.”

திருக்குறள் பேசும் நடுவுநிலைமை (அதிகாரம் 12) என்பதைக் கொண்டு தன் மய்ய அரசியலுக்கு கமல் முட்டுக்கொடுக்க முயல்வது போல் உள்ளது. வள்ளுவர் சொல்லும் நடுவுநிலைமை என்பது பக்கச் சார்பின்மையைக் குறிக்கும். அதற்கும் கமல் முன்மொழியும் மையவியம் அல்லது செண்ட்ரிசத்துக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. நடுவுநிலைமை அதிகாரத்தில் இடம்பெற்ற பத்து குறட்பாக்களையும் தக்க உரையோடு கமல் படித்துப் பார்ப்பாரானால் தன் மய்யக் கொள்கைக்கு திருவள்ளுவர் உதவ மாட்டார் என்பது அவருக்கு விளங்கி விடும்.

நல்லதற்கும் கெட்டதற்கும் இடையே, உண்மைக்கும் பொய்மைக்கும் இடையே, நீதிக்கும் அநீதிக்கும் இடையே, பாசிசத்துக்கும் குடியாட்சியத்துக்கும் இடையே, புதுமைத் தேடலுக்கும் பழமைக் காப்புக்கும் இடையே, உழைப்புக்கும் சுரண்டலுக்கும் இடையே, குமுகியத்துக்கும் முதலியத்துக்கும் இடையே, சமூக நீதிக்கும் சாதியத்துக்கும் இடையே, பாட்டாளி அறத்துக்கும் பார்ப்பனிய (அ)தர்மத்துக்கும் இடையே... நடுநிலை என்ற ஒன்றே இருக்க முடியாது. நடுநிலை என்பது மையமன்று, மாயம்! அந்த நடுநிலையைத்தான் கமல் தேடிப் புறப்பட்டுள்ளார். அநீதிக்கும் நீதிக்கும் நடுவில் நிற்கும் நடுநிலை என்பது இறுதிநோக்கில் அநீதியின் பக்கத்தில்தான் கொண்டுபோய் நிறுத்தும். கமலின் மையவியமும் இப்படிப்பட்டதே என்பதை இதுவரை காணவில்லை என்றால் விரைவில் காணலாம்.

மையவியம் என்பதற்கு வன்முறை தவிர்த்துப் போராடுவதெனப் புது விளக்கம் கொடுக்கிறார் கமல். போராட்டத்தில் வன்முறை கூடாது, அத்துமீறல் கூடாது என்கிறார். "புரட்சி என்பது வன்முறை வடிவத்திலிருந்து வெளியேறி நிறையக் காலம் ஆகி விட்டது" என்கிறார். சரிங்க கமல், அரசு வன்முறை வடிவத்திலிருந்து வெளியேறி விட்டதா? அடக்குமுறை அரசின் வன்முறை பற்றிப் பேசமாலிருப்பதுதான் உங்கள் மையவியமா? காசுமீரத்திலும் பஸ்தாரிலும் இந்தியப் படை குவித்து வைக்கப்பட்டிருப்பதை உங்கள் செண்ட்ரிசம் கண்டு கொள்ளாதா?

நடுநிலைமைக்குப் பேருதாரணம் காந்தி என்கிறார் கமல். இந்துத்துவக் கொடுமையை உறுதியாக எதிர்த்து நின்று அதற்காகவே உயிரும் கொடுத்தவர் காந்தியார். இன்றைய இந்தியாவில் பாசிச இந்துத்துவம் கோலோச்சும் போது நீங்கள் அதற்கு எதிராகப் போராட முன்வருவீர்களா? சென்ற நாடளுமன்றத் தேர்தல் பரப்புரையில் கூட நீங்கள் மாநில ஆட்சியாளர்களின் ஊழல் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தீர்கள், இந்த முறை பாசகவுடன் கூட்டுச்சேரத்தான் முதலில் ஆசைப்பட்டீர்கள். அது நனவாகாத நிலையில் கோவை தெற்கில் பாசகவை எதிர்த்தே போட்டியிடும் நிலைக்கு ஆளானீர்கள். இப்போதும் இந்தியப் பாசிச அரசைச் சாடுவதை விடவும் பெரும்பாலும் உள்ளூர்ச் சிக்கல்களைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கின்றீர்கள். திருவள்ளுவர் போலவே காந்தியாரும் உங்கள் செண்ட்ரிசத்துக்கு 'செண்ட்ரிங்' செய்ய உதவ மாட்டார்.

பிறப்புக்கு முன்பே குழந்தைக்குப் பெயர் வைத்தாயிற்று என்பது போல் கமல் சொல்கிறார்: "இன்னும் எங்கள் கொள்கையைச் செழுமைப்படுத்த வேண்டியிருக்கிறது, பணி தீராத வீடு' என்று மலையாளத்தில் சொல்வார்கள். வேலை நடந்து கொண்டிருக்கிறது என்ற அர்த்தத்தில். கிரகப்பிரவேசம் வந்து விட்டீர்களே என்று கேட்டால் என்னுடைய தேவைக்காக வந்திருக்கிறேன்...."

ஆகவே கட்டிமுடிக்காத வீட்டில் குடி புகுந்துள்ளீர்கள். சரியாகக் கட்டி முடியுங்கள். மையம் மையம் என்று உழன்று கொண்டிருக்காமல் மக்களைக் கவனியுங்கள், நீதியிலும் கண் வையுங்கள். மக்கள் நீதி மய்யம் இனி எதிர்காலத்தில் என்ன செய்யும் என்று ஊகம் சொல்ல விரும்பவில்லை. ஆனால் இந்திய நடுவண் அரசை, அதிலும் இப்போதுள்ள பாசக அரசை நீங்கள் எதிர்த்துப் பேச விரும்பவில்லை எனபதற்கு உங்கள் பேட்டியே சான்றாக உள்ளது.

பேட்டியாளர் சமஸ் கேட்கிறார்: "இந்தியாவில் மாநிலங்களுக்கான அதிகாரம் ஒரு சூப்பர் மாநகராட்சி அளவுக்குத்தான் இருக்கிறது. அதுவும் மாநிலங்களை மாவட்டங்களைப் போல் வெறும் நிர்வாக அலகாக மாற்றிவிட எண்ணும் ஒரு ஆட்சியின் கீழ இந்தியா இன்று இருக்கிறது. உங்கள் கட்சி அதிகமாக அரசாங்க நிர்வாகம், ஊழல் இவற்றை முன்னிறுத்தியே பேசுகிறது. இது அரசியலை வெறும் நிர்வாக விஷயமாக சுருக்கி விடாதா?"

இந்தப் பேட்டியின் மிக முக்கியமான கேள்வி இது. இந்தக் கேள்வியின் ஒவ்வொரு சொல்லியமும் சொல்லும் பொருள்பொதிந்தவை. சிறப்பு சமஸ்! கமல் தன் மநீம கொள்கையைத் தெளிவாக்க இதுதான் நல்ல வாய்ப்பு. இந்திய அரசமைப்பு குறித்த பார்வை என்ன? மாநிலங்களின் தகுநிலை பற்றிய கருத்து என்ன? கமல் முதலமைச்சர் ஆனாலும், வெறும் சட்டப் பேரவை உறுப்பினர் ஆனாலும், இந்த அரசமைப்புதான், இந்தச் சட்டப் பேரவைதான்! இவற்றை வைத்துக் கொண்டு என்ன செய்வதாக எண்ணம்?

ஊருக்கு நடுவில் இருக்கும் நடுவண் சிறையை ஊருக்கு வெளியே மாற்றி விட்டு அங்கு பேரங்காடி அமைப்பது போல் இந்திய அரசமைப்புச் சிறையையும் வெளியே அனுப்பி விட்டுக் கமல் ராச்சியம் அமைத்து விடலாமா? மாநிலங்களையும் மாவட்டங்களைப் போல் நிர்வாக அலகாக மாற்றி விட எண்ணும் ஆட்சி என்று கேள்வியாளர் சொல்வது யாரை என்று கமலுக்குத் தெரியாமல் இருக்க முடியாது. மொழிவழி மாநிலங்களைக் கலைத்து விட்டு ஜன்பத் மண்டல்கள் என்ற பெயரில் 100 நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிப்பது குருஜி கோல்வால்கர் முதல் மோகன் பகவத் ஈறாக ஆர்எஸ்எஸ் கனவுத் திட்டம் என்பதும், நரேந்திர மோதி அரசாங்கத்தின் முனைந்த முயற்சி என்பதும் கமலுக்குத் தெரியாதா? தமிழ்நாட்டை ஒழித்து பாசக தக்சின் பிரதேஷைக் கொண்டுவரத் துடிப்பது மநீம தலைவர்கள் யாருக்கும் தெரியாதா? கமலின் மனத்தில் துளியளவேனும் ஆர்எஸ்எஸ் எதிர்ப்புணர்வு இருக்குமானால் அதை இந்த வினாவிற்கான விடையில் வெளிப்படுத்தியிருக்க வேண்டும். தமிழ்நாட்டுப் பற்றைக் காட்ட இந்த வாய்ப்பைப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

கமல் சொல்லும் விடையைக் கவனியுங்கள்:

“இல்லை. ஒரு விரிவான அரசியலின் ஒரு பகுதியாகவே நிர்வாகத்தைப் பேசுகிறோம். மாநில சுயாட்சி என்பதும் நிர்வாகத்தோடு பிணைந்ததுதான் இல்லையா? இந்தியா எப்படி ஆளப்பட வேண்டும் என்பதை நிர்வாகமாகவும் பார்க்கலாம். அரசியலாகவும் பார்க்கலாம்.”

கமல் அவர்களே! இது ஆர்எஸ்எஸ்சின் குரல்! காசுமீரத்தை அழித்ததைப் போல் நாளை பாசிச ஆட்சியாளர்கள் தமிழ்நாட்டை அழித்தாலும் நீங்கள் இப்படித்தான் நிர்வாக விளக்கம் தந்து கொண்டிருப்பீர்கள்! உங்கள் மய்ய வாதத்தின் சாயம் இந்த ஒரு விடையில் கலைந்து விட்டது! இந்தியா எப்படி ஆளப்பட வேண்டும் என்பதை பத்மஸ்ரீ கமல்ஜி சொல்கிறார்! மோதிஜி! கேட்டுக் கொண்டீர்களா?

முழுக் கூட்டாட்சி நாடாக இந்தியா அமைய வேண்டும் என்ற அண்ணாவின் நிலைப்பாட்டில் மநீம கமலுக்கும் முழு உடன்பாடுதானாம்! அண்ணாவை அவருக்குப் பிடிக்குமாம்! அரசியலமைப்புச் சட்டம் உயிருள்ள ஆவணமாம்! அதனை மாற்றி எழுத முடியாத நூலாக மாற்றி விடக் கூடாதாம்! நடப்பிலுள்ள ஆவணம் நமக்குக் காட்டும் வழிமுறைகளிலிருந்து ஆட்சியாளர்கள் வழுவக் கூடாதாம்! அரசியலதிகாரத்திலிருந்தே எல்லா மாற்றங்களும் தொடங்குகின்றனவாம்! இது பிளேட்டோவாக கமல் எடுக்கும் பதினொன்றாவது அவதாரம்!

ஆனால் சில கேள்விகளுக்குத்தான் விடை கிடைக்கவில்லை: அரசமைப்புச் சட்ட வழிமுறைகளிலிருந்து வழுவும் ஆட்சியாளர்கள் யார்? பூடக மொழியை விட்டு விட்டதாகச் சொல்லி விட்டு பூடகமாகக் கூட நீங்கள் அடையாளம் காட்டவில்லையே? சரி, அரசமைப்புச் சட்டத்தை மாற்றுவது யார்? எப்படி? மநீம 234 தொகுதிகளிலும் வெற்றி பெற்றாலும் அதைச் செய்ய முடியாதே? இதில் மையமாக ஏதாவது வழி இருந்தால் சொல்லுங்கள்.

மநீம சின்னம் என்று ஒரு கைவிளக்கோடு அலையும் கமல் தனக்குள் தானே கொஞ்சம் வெளிச்சம் பாய்ச்சி இருள் நீங்கி வருவாரா? ஒளிக்கும் இருளுக்கும் நடுநிலை வகிக்கிறேன் என்று இருட்டரசியலுக்கே துணைபோய் விடுவாரா?

# தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கை(2021-22):

**சமந்தா**

தமிழ் நாட்டின் துணை முதல்வரும் நிதியமைச்சருமான ஓ.பன்னீர்செல்வம் ,ஃபிப்ரவரி23 ஆம் நாள்2022-2021 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதி நிலை அறிக்கை என்ற பெயரில் முழு ஆண்டுக்கான நிதி நிலையறிக்கையை சட்டப்பேரவையில் தாக்கல் செய்துள்ளார் .!வரும் மே மாதத்தில் அ.தி.மு.க அரசின் ஆட்சிக் காலம் நிறைவடைகிறது.அடுத்த அரசு அமையும் வரை மேற்கொள்ளவேண்டிய அரசின் செலவினங்களுக்குப் பேரவையின் ஒப்புதல் பெறுவதற்காகவே இடைக்கால நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படவேண்டும் என்ற நியதியை மீறி வர இருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலை மனதில் கொண்டு அ.தி.மு.க அரசிற்கான பிரச்சார அறிக்கையை வெளியிட்டுள்ளார் .மத்திய அரசின் நிதி நிலை அறிக்கை ,திருத்தப்பட்ட நிதி நிலை அறிக்கை ,பொருளாதார வளர்ச்சி சார்ந்த தரவுகள் அனைத்துமே அதில் நம்பகத்தன்மை இல்லாத போதும் அனைவரும் அறியும் வண்ணம் இணைய தளத்தில் வெளியிடப்படுகிறது .ஆனால் தமிழ் நாடு மற்றும் பிற மாநிலங்களின் பொருளாதார நிலை ,நிதி நிலை குறித்த அறிக்கைகள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் வெளியிடப்படாதது பெரும் குறைபாடாக தொடர்கிறது .இதனால் நிதிநிலை அறிக்கையில் அளிக்கப்படும் நிதி ஒதுக்கீடுகளுக்கான வாக்குறுதிகள் எந்தளவிற்கு நிறைவேற்றப்படுகின்றன என அறிய முடியாத வெளிப்படைத்தன்மையற்ற நிலையே தொடர்கிறது.

அ.தி.மு.க அரசு பயிர்க் கடன் தள்ளுபடிக்கு ரூபாய் 12 ஆயிரத்து 110 கோடி நிதி ஒதுக்குவோம் என அறிவித்தது ஆனால் அதில் 5,000 கோடி மட்டுமே நிதியமைச்சர் ஒதுக்கியுள்ளார் .வேளாண் துறைக்கு ரூ. 982 ,11கோடியும் ,ஊரக வளர்ச்சித்துறைக்கு ரூ. 218.58 ,22கோடியும் ,பயிர்க் கடன் தள்ளுபடிக்கு ரூ. 5,000கோடியும் ஒதுக்கிடப்பட்டுள்ளது .நீதி ,நிர்வாகம் - ரூ. 1,437கோடி உயர் கல்வித்துறைக்கு ரூ. 5,478கோடியும் ,மின்துறைக்கு ரூ. 7,217கோடியும் மீன்வளத்துறைக்கு ரூ. 580 கோடியும் ,கோவை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ரூ. 6,683கோடியும் ,காவல் துறைக்கு ரூ. 9,567 கோடியும் ,தீயணைப்பு மீட்புத்துறைக்கு ரூ. 436.68கோடியும் ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் நலனுக்கு ரூ. 688.48கோடியும் ,பிற்படுத்தப்பட்டோர் ,மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ,சீர்மரபினர் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி உதவித்தொகை

திட்டத்திற்கு ரூ. 374.88கோடியும் ,ஆதிதிராவிடர்களுக்கான திட்டங்களுக்கு ரூ. 13ஆயிரத்து 967.58 கோடியும் ,பழங்குடியினருக்கான துணை திட்டத்திற்கு ரூ. 1,276.24கோடியும் ,உயர்கல்வி உதவித்தொகை திட்டத்திற்கு ரூ. 1,932.19கோடியும் ,பழங்குடியினர் வசிக்கும் தொலைதூரப் பகுதிகளில் பள்ளிகள் தொடங்க முன்வரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்திற்கு ரூ. 4.07கோடியும் ,மதிய சத்துணவுத் திட்டத்திற்கு ரூ. 1,953.98கோடியும் , ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ. 2,634கோடியும் ,கைத்தறி,துணிநூல் துறைக்கு ரூ. 1,224.26கோடியும் இளைஞர் நலன் ,விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு ரூ. 229.37 கோடியும் ஒதுக்கிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது .

2022ல் தமிழக அரசின் கடன் ரூ.5.7 லட்சம் கோடியாக உயரும் என்று அறிவித்த நிதியமைச்சர் ஊரடங்கு காரணத்தால்20-2019 ,ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் எதிர்பார்த்த வருவாய் இலக்கை மாநில அரசால் அடைய முடியவில்லை. அரசுக்கு வரிகளின் மூலம் வரக்கூடிய வருமானம் ,ஏறத்தாழ 18 விழுக்காடு குறைந்துள்ள நிலை உள்ளது. இதன் விளைவாக20-2019 ,ஆம் ஆண்டின் நிதிப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.24 விழுக்காடு அதிகரித்துள்ளது.அதற்கேற்ப 2003ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் நிபந்தனைகளின் படி வணிகம் மேற்கொள்வதை எளிதாக்குதல் ,ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை திட்டம் ஆகிய இவ்விரண்டு சீர்திருத்த நடவடிக்கைகளை அ.தி.மு.க அரசு நிறைவேற்றியுள்ளது.மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவில் 2 விழுக்காடு கூடுதல் கடன் பெறுவதற்கு மத்திய அரசு அளித்த அனுமதியின்படி ,தமிழக அரசு கடன் பெற்றுள்ளது.

2021-22 ஆம் ஆண்டில் மூலதனச் செலவினம் 14.41 சதவீதமாக உயர்ந்து 43 ஆயிரத்து 170.61 கோடி ரூபாயாக இருக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

பெருந்தொற்று பரவலால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை மீட்டெடுக்க இந்திய தலைமை வங்கியின் முன்னாள் ஆளுநர் சி.ரங்கராஜன் தலைமையில் பொருளாதார வல்லுநர்களைக் கொண்ட உயர்மட்டக் குழுவை அரசு அமைத்தது. இந்தக் குழு ,பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகள் ,மாநில அரசின் கொள்கை முடிவுகள் குறித்து பகுப்பாய்வை மேற்கொண்டது.

இக்குழு 21-2020 ,ஆம் ஆண்டில் தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சி ,மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 1.31 விழுக்காடாகக் குறையும் அல்லது 0.61 விழுக்காடு குறுக்கமடையும் எனவும் கணித்துள்ளது. பல்வேறு துறைகள் சார்ந்த 413 பரிந்துரைகளையும் குறிப்புகளையும் இக்குழு வழங்கியது. 21-2020 ஆம் ஆண்டில் ,குறைந்தபட்சம் 10 ஆயிரம் கோடி ரூபாய் கூடுதல் மூலதனச் செலவினங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் பரிந்துரைத்துள்ளது .

15-வது நிதிக்குழு அதன் அறிக்கையில் ,மத்திய அரசால் விதிக்கப்பட்ட மேல்வரிகள் ,கூடுதல் கட்டணங்கள் தொடர்ந்து அதிகரித்து வரும் போக்கைக் குறிப்பிட்டுள்ளது. இவை , மாநிலங்களுடன் பகிர்ந்துகொள்ளக் கூடிய வரி வருவாயின் பங்காக இல்லை. மத்திய அரசின் மொத்த வரி வருவாயில் ,மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்களின் பங்கானது12-2011 ,ஆம் ஆண்டில் 10.4 சதவீதத்திலிருந்து 20-2019 ,ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் 20.2 சதவீதமாக அதிகரித்துள்ளது என அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

மத்திய அரசிடமிருந்து ,மாநிலத்திற்கான வரிப் பகிர்வு 41 சதவீதமாகப் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது.-14 வது நிதிக்குழுவில் ,மாநிலங்களுக்கு இடையேயான நிதிப்பகிர்வில் தமிழ்நாட்டின் பங்கு 4.023 சதவீதத்திலிருந்து-15 ,வது நிதிக்குழுவின் இடைக்கால அறிக்கையில் 4.189 சதவீதமாக ஓரளவிற்கு உயர்ந்து ,தற்போது இறுதி அறிக்கையில் 4.079 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.-14 வது நிதிக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட தொகையை விட ,தமிழ்நாட்டின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்த மானியத் தொகை-15 வது நிதிக்குழுவின் பரிந்துரைகளில் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு தேசிய பேரிடர் துயர்தணிப்பு நிதியில் இருந்து தமிழகத்திற்குப் போதிய நிதி வழங்கவில்லை என்றும்-15 ,வது நிதிக்குழுவின் பரிந்துரைகள் தமிழ்நாட்டிற்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது என நிதியமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார் என்றபோதும் தமிழ் நாட்டின் இறையாண்மைக்காக குரல் உயர்த்தாமல் மத்தியில் ஆளும் பா.ஜ.க அரசிடம் அ.திமு.க அரசு தேர்தல் கூட்டணிக்காக அடிபணிந்து சரணடைந்துள்ளது.

# தமிழ்த் தேசிய நோக்கில் நாதக சீமான் அரசியல்!

**தியாகு**



இன்று 2021 ஏப்ரல் 2 இந்து தமிழ் திசை நாளிதழில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தோழர் செந்தமிழன் சீமானின் பேட்டி வெளி வந்துள்ளது. யுனைட்டெட் ஸ்டேட்ஸ் ஆஃப் இந்தியா என்பதுதான் தலைப்பு. சீமானிடமிருந்து நாம் எதிர்பார்க்கும் விளக்கங்கள் இந்தப் பேட்டியில் கிடைக்கின்றனவா என்று படித்துப் பார்த்தேன்.

"இந்த இனம் இப்படி அதிகாரம் அற்று இருக்குங்கிறதுதான் வரலாற்று முரணா இருக்கு" என்று பேட்டியின் தொடக்கத்திலேயே சீமான் சொல்கிறார். உண்மை, தமிழ்த் தேசிய இனம் இந்தியாவில் அடிமைப்பட்டுள்ளது. இந்திய அரசமைப்பில் அது இறைமையற்று இருக்கிறது. சீமான் இதைத் தெளிவாக ஏற்றுக் கொள்கிறார். அடிமைப்பட்ட இனம் விடுமை பெறுவதற்கு, இறைமையற்ற இனம் இறைமை ஈட்டுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்ற

வினாவிற்கு விடை எதிர்பார்த்து மேலும் படிக்கிறோம்.

“உங்களுடைய நாம் தமிழர் கட்சியின் இலக்கு என்ன? கடைசியாக அண்ணா விட்டுச் சென்ற கூட்டாட்சி எனும் புள்ளியின் தொடர்ச்சியா? அல்லது தமிழ்த் தேசிய அரசியலின் தொடக்கப் புள்ளியான தனிநாடு கனவா?” என்று பேட்டி கண்ட சமஸ் கேட்கிறார். நாம் தமிழர் கட்சியின் இலக்கு என்ன? என்று தெரிந்து கொள்ள ஆவலாய் சீமானின் விடையைப் படிக்கிறோம்.

இந்த முகன்மைக் கேள்விக்கு சீமானின் விடை “தனிநாடு அல்லது சுயாட்சி அதுஇதுன்லாம் நான் பேசப் போறதில்லை. என் இனத்துக்குத் தேவை அதிகாரம்.”

தனிநாடு என்றும் சொல்லப் போவதில்லை, சுயாட்சி என்றும் சொல்லப் போவதில்லை என்கிறார். ஆனால் அதிகாரம் தேவை என்கிறார். தேசிய விடுதலை என்றோ தேசிய இறைமை என்றோ அவர் சொல்லவில்லை. அப்படியானால் அதிகாரம் என்று எதைச் சொல்கிறார்?

” ’யுனைட்டெட் ஸ்டேட்ஸ் ஆஃப் இந்தியா’ அப்படிச் செய்வோம்!” என்கிறார். ’மத்தியில் சுட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி’ என்பது அண்ணா முன்வைத்த முழக்கம். எல்லா தேசிய இனங்களுக்கும் அதுதான் சரி” என்றும் சொல்கிறார்.

அம்பேத்கரை நிறைய படித்து வரும் தோழர் சீமான் இந்தக் கூட்டாட்சி முன்மொழிவு குறித்து அண்ணல் என்ன சொன்னார் என்பதையும் தெரிந்து கொள்ளலாமே?

ஆக, இந்தியாவையே கூட்டாட்சியாக மாற்றுவதன் மூலம், அமெரிக்க ஐக்கிய நாடுகள் போல் இந்திய ஐக்கிய நாடுகள் அமைப்பது, தமிழ்த் தேசிய இனத்துக்கு மட்டுமல்லாமல் இந்தியாவில் அடங்கிய அனைத்துத் தேசிய இனங்களுக்கும் சுயாட்சி பெறுவது! இதுதான் நாம் தமிழர் கட்சியின் இலக்கு என்று புரிந்து கொள்கிறோம்.

இந்த இலக்கை நோக்கித்தான் நாம் தமிழர் கட்சி பயணம் செய்கிறது என்றால், அது எப்படித் தமிழ்த் தேசியம் ஆகும் என்று விளங்கவில்லை. இந்த இலக்கை நோக்கிய பயணப் பாதை எதையும் சீமான் வரைந்து காட்டவும் இல்லை; அவரது கட்சி ஆவணங்களிலும் இதற்கு விளக்கம் கிடைக்கவில்லை.

அதிகாரம் என்று சீமான் சொல்வது என்ன?

“இப்போதுள்ள ஆட்சிமுறையில் மாநில உரிமைகள் பறிபோய்க்கிட்டே இருக்கு. வட இந்தியர்கள்தான் முதன்மை அமைச்சர்கள் ஆக முடியும்ங்கிற சூழல் போதாதா, இங்குள்ள

அக்கிரமச் சூழலைச் சொல்ல? இந்த நிலை மாற்றப்படணும். என் மக்களுக்கும் அதிகாரம் வேணும் இதைத்தான் நான் பேசுறேன்."

தமிழ்த் தேசிய இனத்துக்கு அதிகாரமில்லை என்பதற்கு அவர் கொடுக்கும் ஒரு சான்று: வட இந்தியர்கள்தான் முதன்மை அமைச்சர்கள் (தலைமையமைச்சர்கள் அல்லது பிரதமர்கள்) ஆக முடியும்:என்கிற அக்கிரமச் சூழல்! வட இந்தியர்களுக்கு மாறாக தென்னிந்தியர்கள் பிரதமராகி விட்டால் தமிழினத்துக்கு அதிகாரம் வந்து விடுமா? ஆந்திரத்து நரசிம்ம ராவும் கர்நாடகத்து தேவ கௌடாவும் பிரதமர்கள் ஆன போது என்ன மாற்றங்கள் வந்தன? இந்திக்கு மாறாகத் தெலுங்கு அல்லது கன்னடம் ஆட்சிமொழியாகி விட்டதா?

2019 பாராளுமன்றத் தேர்தல் ஆட்சி வரைவு என்ற ஆவணத்தில் 'அடிப்படை, அமைப்பு, அரசியல் மாற்றம்' என்ற தலைப்பில் நாம் தமிழர் கட்சி அதிகாரம் பற்றிய தன் புரிதலை வெளிப்படுத்தியுள்ளது. இந்திய வல்லரசியம் (ஏகாதிபத்தியம்) தமிழ்த் தேசத்தையும் பிற தேசங்களையும் அடிமைப்படுத்தியுள்ளது என்ற பார்வையே நாதகவுக்கு இல்லை, யார் பிரதமர் என்ற பார்வையோடு அது தன்னைக் குறுக்கிக் கொள்கிறது என்பதே இந்த ஆவணத்திலிருந்து தெளிவாகிறது. இதற்கு அது சொல்லும் தீர்வு பிரதமர் பதவியை சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்வதுதான்! சரி, இதற்கும் கூட அரசமைப்புச் சட்ட்த்தைத் திருத்த வேண்டுமே, அதற்கு என்ன வழி?

இந்த ஆவணம் இந்தியாவின் இறையாண்மை பற்றி அக்கறைப்படுகிறதே தவிர தமிழ்த் தேச இறையாண்மை பற்றிய கவலை துளியும் இல்லை. தமிழ்த் தேச இறைமைக்கு மாற்றாக சுழற்சி முறையில் பிரதமர் என்ற கற்பனைத் திட்டத்தை முன்வைக்கிறார் சீமான். அந்த ஒரு திட்டம் நிறைவேறவும் கூட தில்லி அரசோடு தமிழ்த் தேசம் புதிதாக ஒப்பந்தம் செய்ய வேண்டும். ஒப்பந்தம் செய்யக் கோருவதானால் அதற்கு முன் இறைமை பெற வேண்டும்.

இந்திய அரசமைப்பு தேசிய இனங்களின் அடிமை முறி என்று தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் கருதுகிறது. தமிழ்த் தேசியப் பேரியக்கம் உள்ளிட்ட மற்றத் தமிழ்த் தேசிய அமைப்புகளின் கருத்தும் இதுதான். தோழர் சீமான் என்ன கருதுகிறார்? இந்திய அரசமைப்பு தமிழ்த் தேசிய இனம் உள்ளிட்ட தேசிய இனங்களின் அடிமைமுறி என்று கருதவில்லை என்றால் தெளிவாகச் சொல்லி விடுங்கள். இந்திய அரசமைப்பு என்ற ஒன்றையே

கண்டுகொள்ளாமல் தமிழ்த் தேசியம் பேசிக் கொண்டிருக்கலாம் என்று நினைக்கின்றீர்களா?. தமிழ்த் தேசியக் குறிக்கோள்களை அடைவது இந்திய அரசமைப்புக்கு உட்பட்டா? அரசமைப்பைத் திருத்தம் செய்தா? அரசமைப்பிலிருந்து வெளியேறியா? இந்தக் கேள்விக்கு நாதக விடை சொல்ல வேண்டும். அல்லது அரசமைப்பைக் கண்டுகொள்ளாமலே இந்தக் குறிக்கோள்களை அடைய முடியும் என்று அது நம்புகிறதா? சீமானின் இந்தப் பேட்டியில் இது குறித்து எந்த விளக்கமும் கிடைக்கவில்லை.

தமிழ்நாட்டில் தமிழர் ஆட்சி என்று பேசும் போதெல்லாம் தமிழ்நாட்டின் மீதான அரசியல் அதிகாரம் என்பது இறுதிநோக்கில் தில்லி அரசிடம் இருப்பதை சீமான் அறிந்தோ அறியாமலோ மறைத்து விடுகிறார். தமிழ்நாட்டைத் தமிழர் ஆள வேண்டும் என்று சீமான் ஓங்கிக் குரல் கொடுக்கும் போதெல்லாம் இந்தியாவின் சார்பில் நரேந்திர மோதி என்ற குசராத்தி நம்மை ஆள்வதற்கு எதிராக அவர் இப்படிச் சொல்வதில்லை. இந்திய அரசமைப்பின் கீழ் நாம் இருக்கும் வரை தப்பித்தவறி ஒரு பச்சைத்தமிழரே தலைமையமைச்சர் ஆனால் கூட அது தமிழர் ஆட்சியாக இருக்காது என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்நாட்டை அயலான் ஆளக் கூடாது என்றால் இந்திய இறைமையிலிருந்து தமிழ்த்தேச இறைமையை மீட்பதற்காகப் போராட வேண்டும்.

தமிழ்நாட்டு முதலமைச்சர் பதவியைத்தான் சீமான் திரும்பத்திரும்ப அரசதிகாரம் என்று கருதிக் கொள்கிறார். அந்தப் பதவியிலும் கூட சீமான் பார்வையில் தூய தமிழரான ஒருவர்தான் அமர வேண்டுமானால் அதற்கான சட்ட வழிவகை என்ன? தமிழ்நாட்டுக் குடிமக்கள் யார்? என்ற வரையறை இல்லாமல், இன்னார் ஆட்சிப் பொறுப்புக்கு வரலாம், இன்னார் வர முடியாது என்று சட்டம் செய்யாமல் தமிழரல்லாதார் முதலமைச்சராவதைத் தடுப்பது எப்படி? தமிழ்நாட்டுக் குடியுரிமை என்ற கோரிக்கை சீமானிடம் உள்ளதா? குடியாட்சியம் (சனநாயகம்) என்பது சட்டத்தின் ஆட்சியே தவிர ஒரு முதலமைச்சர் தன் விருப்பம் போல் ஆட்சி செய்வதன்று என்ற அடிப்படை உணர்வே சீமானிடம் இருப்பது போல் தெரியவில்லை.
“தமிழ்நாட்டைத் தமிழர் ஆள வேண்டும்” என்று தில்லி வல்லாதிக்கத்துக்கு எதிராக முழங்க வேண்டியவர் தில்லி வல்லாதிக்கத்துக்கு அடிபணிந்த முதல்வர் பதவிக்காகவே முழங்குகிறார். இந்த வகையில் அவர் நடத்தும் அரசியல் தமிழ்நாட்டுக்குப் புதியதன்று. ’திராவிட அரசியல்’ இதைதான் செய்தது. திராவிடத்தை எதிர்ப்பதாகச் சொல்லிக் கொண்டு சீமானும்

அதையே செய்கிறார் - செயலளவில்!

மக்களின் செயலாற்றல், அமைப்பின் தேவை எதைப் பற்றியும் அக்கறை இல்லாமல் தனியொரு தலைவன் அல்லது தலைவியை ஏற்றிப் போற்றி அவரையே எல்லாமாக்கி விடும் நோய் திராவிட இயக்கத்திலிருந்து நாம் தமிழர் கட்சிக்குத் தொற்றியுள்ளது. சீமானே அதை வெளிப்படையாக ஊக்கப்படுத்துகிறார்.

இந்தப் பேட்டியில் அவர் சொல்கிறார்:

"எது ஒண்ணுமே சாத்தியத்திலிருந்து பிறப்பது கிடையாது தேவையிலிருந்துதான் பிறந்தது. என்னுடைய அரசியலும் அப்படித்தான். இது தமிழ் மக்களின் தேவையிலிருந்து பிறப்பது. சீமான் பிறந்தது காலத்தின் தேவை. நான் புரட்சியாளன். அடிப்படை மாற்றம், அமைப்பு மாற்றம், அரசியல் மாற்றம்னு பேசுறேன்…."

இதன் உண்மைப் பொருள் என்ன தெரியுமா? சீமான் முதல்வராவது சாத்தியமா? என்று கேட்டுக் கொண்டிருக்காதீர்கள் சீமான் அப்படி இப்படிப் பேசி முதல்வராக வேண்டியது தேவை! ஏனென்றால் அவர் புரட்சியாளர்! நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான்! வாக்களிப்பது ஒன்றுதான்! மற்ற எல்லாவற்றையும் அவரே பார்த்துக் கொள்வார்!

என்ன சொல்வது? தமிழ்நாட்டில் புரட்சி என்ற சொல் மீண்டும் ஒரு முறை காயப்படுகிறது.

பேட்டியின் முடிவில் சீமான் சொல்கிறார்:

(இளைஞர்கள்) "உலகநாடுகளோட தானும் தமிழ்நாடும் எங்கே இருக்கோம்னு ஒப்பிடறாங்க. தமிழனுக்கு அதிகாரம் வேணும்; அப்படின்னா டெல்லியில் உள்ள அதிகாரமும் நிர்வாகமும் உடைஞ்சு பரவலாகணும்னு கருதறாங்க. இதுக்கெல்லாம் நான் பேசுற அரசியல்தான் சரின்னு நம்புறாங்க. அடுத்த அஞ்சு வருசத்துல பாருங்க, என்னோட படைதான் தமிழ்நாட்டுலயே பெரிசா இருக்கும்!"

இளைஞர்களின் கருத்துக்கும் சீமான் மீது அவர்கள் வைத்துள்ள நம்பிக்கைக்குமான முரண்பாடு எப்படித் தீர்க்கப்படப் போகிறது? அவர்களின் கருத்துக்கு ஏற்ப நாம் தமிழர் கட்சியும் சீமானும் தங்கள் அரசியல் வழியை மாற்றிக் கொள்ளப் போகிறார்களா? அல்லது அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைப் பயன்படுத்தி தமிழ்நாட்டில் இன்னுமொரு வாக்கரசியல் படையைக் கட்டப் போகின்றார்களா? தமிழ்நாட்டில் இது ஒன்றும் புதிதல்லவே?

# சூழலியல் வகுப்பு (4):

சமந்தா

## கார்பன் சுழற்சி:

இயற்கையில் சூரியனிலிருந்து வெளிப்படும் ஒளிக் கதிர்வீச்சானது புவியால் உட்கிரகிக்கப்பட்டு கண்ணுக்குப் புலப்படும் ஒளியைவிட அதிக அலைநீளம் கொண்ட அகச்சிவப்புக் கதிரை வெப்பக் கதிர்வீச்சாக வெளியேற்றுகிறது சூரியனிலிருந்து புவியை வந்தடையும் ஒளிக்கதிர்கள் அதிக ஆற்றலுடையதாகவும் ,குறைந்த அலை நீளமுடையதாகவும் உள்ளன.புவியிலிருந்து எதிரொளிக்கப்படும் ஒளி அலைகளானது அகச்சிவப்பு கதிர்களாக அதிக அலை நீளமுடையதாகவும் ,ஆற்றல் குறைவாகவும் ,உள்ளன .இந்த அகச்சிவப்புக் கதிர்களை வளிமண்டலத்தில் உள்ள பசுங்குடில் வாயுக்கள் உட்கிரகித்துக் கொள்வதால் புவியின் வெப்ப நிலை அதிகரிக்கிறது.இந்த பசுங்குடில் விளைவினால் தான் புவியின் வெப்ப நிலை 30 பாகை அளவிற்கு அதிகரித்துள்ளது.இந்த பசுங்குடில் வாயுக்கள் இல்லையென்றால் புவியின் வெப்ப நிலை 19-18(-) பாகைக்கு குறைந்து புவியானது உறைபனியாகக் காணப்படும்.

குளிர் பிரதேசங்களில் தாவரங்கள் வளர்வதற்கான சூழலை உருவாக்கும் விதத்தில் வெப்பத்தை வெளிவிடாத கண்ணாடிக் குடுவைகளில் தாவரங்கள் வளர்க்கப்படுகின்றன .இது பசுங்குடில் என அழைக்கப்படுகிறது .புவியைச் சுற்றி ஒரு கம்பளிப் போர்வை போல் வளிமண்டலத்தில் நீராவி , கார்பன் டை ஆக்சைடு ,மீதேன் ,நைட்ரஸ் ஆக்சைடு உள்ளிட்ட வாயுக்கள் சூழ்ந்துள்ளன ,இவை புவியால் எதிரொளிக்கப்படும் வெப்பக்கதிர்வீச்சை விண்வெளிக்கு செல்லாமல் தடுத்து , உட்கிரகித்து பசுங்குடில் போல் செயல்பட்டு புவியின் வெப்பநிலையை அதிகரிப்பதால் இந்நிகழ்வு பசுங்குடில் விளைவு என அழைக்கப்படுகிறது .பசுங்குடில் விளைவை ஏற்படுத்தும் கார்பன்-டை-ஆக்சைடு ,மீத்தேன் ,நைட்ரஸ் ஆக்சைடு போன்ற வாயுக்கள் பசுங்குடில் வாயுக்கள் என அழைக்கப்படுகின்றன .இன்று மனித நடவடிக்கைகளால் பசுங்குடில் வாயுக்களின் அளவு மிகவும் அதிகரித்து பசுங்குடில் விளைவு மேலும் தூண்டப்படுகிறது இதனால் புவியின் வெப்ப நிலை மேலும் அதிகரிப்பதால் இது தூண்டப்பட்ட பசுங்குடில் விளைவு எனப்படுகிறது.இயற்கையில் ஏற்படும் பசுங்குடில் விளைவு உயிர்கள் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்தியுள்ள நிலையில் தூண்டப்பட்ட பசுங்குடில் விளைவை கட்டுப்படுத்தாவிட்டால் உயிர்ச் சூழலையே அழிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பசுங்குடில் விளைவை ஏற்படுத்துகிற பசுங்குடில் வாயுக்கள் வளிமண்டலத்தில் மிகக்குறைந்த அளவுதான் காணப்படுகிறது .வளிமண்டலத்தில் உள்ள மொத்த வாயுக்களில் முக்கியமான மூன்று வாயுக்கள் கிட்டத்தட்ட 95 விழுக்காடு பங்கு வகிக்கின்றன .வளிமண்டல வாயுக்களில் 78.1 விழுக்காடு நைட்ரஜன் உள்ளது 20.9 .விழுக்காடு சுவாசித்தலுக்கு முக்கியமான ஆக்ஸிஜன் உள்ளது 0.9.விழுக்காடு ஆர்கன் என்ற மந்தவாயுவும் உள்ளது .வளி மண்டலத்தில் பசுங்குடில் வாயுக்களின் அளவு 0.03 விழுக்காடாக உள்ளது .பசுங்குடில் வாயுக்களில் முதன்மையானது கார்பன்-டை-ஆக்சைடு ,இரண்டாவது முக்கியமான பசுங்குடில் வாயுவான மீத்தேன் ,கார்பன்-டை-ஆக்சைடை விட 25 மடங்கு அதிக அளவில் புவியை வெப்பமயமாக்கும் தன்மை கொண்டது . ஆனால் வளிமண்டலத்தில் மீத்தேனின் ஆயுட்காலம் 12 வருடங்கள் தான் .கார்பன்-டை-ஆக்சைடின் ஆயுட்காலம் 200 ஆண்டுகள் ஆகும் .மீத்தேன் ஒரு கார்பனையும் ,நான்கு ஹைட்ரஜனையும் கொண்டுள்ளது .ஆக்சிஜன் இல்லாத சூழலில் கரிமப் பொருட்கள் சிதைவுறும் போது மீத்தேன் உருவாகிறது.மெத்தனோஜென் எனப்படும் பாக்டீரியாக்களே மீத்தேனை உருவாக்குகின்றன .கழிவுகள் ,குப்பைகள் மக்கும் போது மீத்தேன் அதிக அளவில் உருவாகிறது.பொதுவாகவே விவசாய நிலங்கள் ,சதுப்பு நிலங்கள் என எங்கெல்லாம் ஆக்சிஜன் குறைவாகக் காணப்படுகிறதோ அங்கெல்லாம் மீத்தேன் உருவாகிறது.படிம எரிபொருட்களிலிருந்து பெறப்படும் இயற்கை எரிவாயுவிலும் மீத்தேனே உள்ளது.உணவுப் பொருட்கள் வீணாக்கப்படும் போதும் ,அறுவடைக்குப் பின் சேரும் கழிவுகளை முறையாக உரமாக்கி நிலைப்படுத்தாது விட்டோமானால் அதிலிருந்து பெருமளவு மீத்தேன் உற்பத்தியாகும் . கால்நடைகள் மூலமாகவும் மீத்தேன் அதிகளவு வெளியேற்றப்படுகிறது.கடலில் இருந்தும் மீத்தேன் உற்பத்தியாகிறது.இவ்வாறு பல்வேறு நிகழ்வுகளால் மீத்தேனின் அளவும் உயருகிறது.

நைட்ரஜன் டை ஆக்சைடு (N2O) என்று மற்றொரு முக்கியமான பசுங்குடில் வாயு உள்ளது ,இது "சிரிக்கும் வாயு "என்றும் அழைக்கப்படுகிறது ,சில நேரங்களில் மயக்க மருந்தாகவும் பயன்படுத்தப்படுகிறது. இயற்கையாகவே நைட்ரஜன் டை ஆக்சைடு கடல்களிலும் ,சதுப்பு நிலங்களிலும் உருவாகிறது .விவசாயத்தில் அதிகளவில் நைட்ரஜன் உரங்களை பயன்படுத்துவதால் நைட்ரஜன் டை ஆக்சைடின் அளவு அதிகரித்துள்ளது .கார்பன்-டை-ஆக்சைடு , மீத்தேன் ,நைட்ரஜன் டை ஆக்சைடு ,நீராவி ஆகியவை இயற்கையில் காணப்படும் பசுங்குடில் வாயுக்கள் ஆகும்.

இவையல்லாது மனித நடவடிக்கைகளால் செயற்கையாக உருவாக்கப்படும் பசுங்குடில் வாயுக்களும் உள்ளது.சல்பர் ஹெக்சா குளோரைடு ,நைட்ரஜன் ட்ரை ஃப்ளூரைடு ,குளோரோ ஃபுளூரோ கார்பன்கள் ,பெர் ஃபுளூரோ கார்பன் ஆகியவை இதில் அடங்கும் .குளோரோ ஃபுளூரோ கார்பன்கள் ,பெர் ஃபுளூரோ கார்பனும் முக்கியமாக குளுரூட்டிகளில் குளிர்பதன சாதனங்களில் பயன்படுத்தப்படுகிறது .

1958லிருந்து தான் ஹவாயில் உள்ள மௌலானா லோவாவில் பசுங்குடில் வாயுக்களின் அளவானது தொடர்ந்து முறையாக அளவிடப்பட்டு வருகிறது .பல நூறாண்டுகளாக மில்லியனில் 200முதல் 280 பகுதியாக இருந்த கார்பன்-டை-ஆக்சைடின் அளவு இன்று மில்லியனில் 410 பகுதியைத் தாண்டியுள்ளது .படிம எரிபொருட்களை எரிப்பதாலும் ,காடுகளை அழிப்பதாலும் , தொழிற்சாலைகளாலும் ,காற்றிலுள்ள கார்பன்-டை-ஆக்சைடின் அளவு அதிகரித்துக் கொண்டே வருகிறது .கடந்த 150 ஆண்டுகளில் புவியின் வெப்பநிலை 1 பாகைக்கு மேல் அதிகரித்துள்ளது . புவியின் வெப்பநிலையைக் குறைக்கவேண்டுமென்றால் பசுங்குடில் வாயுக்களின் அளவை கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாக உள்ளது.இதில் கார்பன் சமநிலை முக்கியப் பங்கு வகிக்கிறது .

கார்பன்:

உலகில் பல்வேறு பொருட்களில் கார்பன் செறிந்து காணப்படுகிறது .கார்பன் இல்லாமல் உயிர்கள் தோன்றியிருக்கவோ ,உயிர்வாழவோ முடியாது .இந்த உயிர்க்கோளத்தில் கார்பன் மிக முக்கிய பங்கு வகிக்கிறது .புவியில் அதிகமாகக் காணப்படும் தனிமங்களில் நான்காவதாக கார்பன் காணப்படுகிறது .கார்பன் பல்வேறு வடிவங்களில் இருக்கிறது.திட வடிவில் வைரம் ,நிலக்கரியாக கார்பன் காணப்படுகிறது .வாயு வடிவில் கார்பன் ,கார்பன்-டை-ஆக்சைடு ,கார்பன் மோனாக்சைடு , மீத்தேன் போன்ற வாயுக்களாக காணப்படுகிறது .கார்பன்-டை-ஆக்சைடு நீரில் கரைந்து கார்பானிக் அமிலமாக திரவ வடிவத்தில் காணப்படுகிறது .கார்பனிலிருந்து மில்லியன் கணக்கான சேர்மங்கள் பெறப்படுகின்றன .கார்பன் உயிர்ப் பொருட்கள் தோன்றுவதற்கான மிக அடிப்படையான மூலப்பொருளாக உள்ளது .புவியின் கட்டமைப்புக்கான அடிப்படை அலகாகவும் கார்பன் உள்ளது . மண் ,பாறை போன்ற நிலப்பரப்புகளிலிருந்து உயிர் மூலக்கூறுகள் வரை அனைத்திலுமே கார்பன் முக்கிய மூலப்பொருளாக உள்ளது .கார்பனும் ,ஹைட்ரஜனும் ,வெவ்வேறு விகிதங்களில் சேர்ந்த சேர்மங்களே ஹைட்ரோ கார்பன்கள் என்று அழைக்கப்படுகின்றன.மீத்தேன் என்பதும் ஒரு

ஹைட்ரோ கார்பன் தான் .மனித உடலில்18 விழுக்காட்டிற்கு மேல் கார்பன் தான் உள்ளது.மரத்தில்45 விழுக்காட்டிற்கு மேல் கார்பன் உள்ளது.

கார்பன் சுழற்சி:

பருப்பொருட்கள் திடம் ,திரவம் ,வாயு ,பிளாஸ்மா என நான்கு நிலைகளில் காணப்படுகின்றன என நாம் இயற்பியலில் படித்திருப்போம் .கார்பன் என்ற தனிமமும் ஒரே நிலையில் இருப்பதில்லை , திடம்,திரவம் ,வாயு நிலையில் காணப்படுவதுடன் பல்வேறு விதமான பரிமாற்றங்களுக்கும் உயிர்வேதிமாற்றங்களுக்கும் உட்படுகிறது.இவை அனைத்தையும் ஒருங்கிணைத்ததே கார்பன் சுழற்சி என அழைக்கப்படுகிறது .காடுகள் ,மண் ,கடல் ,வளிமண்டலம் அனைத்திலுமே கார்பன் வெவ்வேறு நிலைகளில் காணப்படுகிறது .வளிமண்டலம் ,நிலக்கோளம் ,நீர்க்கோளம் , படிமப்பாறைகளுக்கிடையே கார்பன் தொடர்ச்சியான பாய்வில் உள்ளது.

இரண்டு விதமான கார்பன் சுழற்சிகள் காணப்படுகின்றன .மில்லியன் கணக்கான ஆண்டுகள் தொடரும் நீண்ட கால சுழற்சியை நிலக்கோள சுழற்சி என்கிறோம்)geosphere cycle). நிலக்கோள சுழற்சியில் படிமமாக்கம் ,பாறை உருவாதல் ,கண்டத்திட்டு செயல்பாடு ,எரிமலை செயல்பாடு ஆகியவை அடங்கும் .நிலத்தில் உள்ள கார்பன் பாறையை அடைவதற்கு பல மில்லியன் ஆண்டுகள் தேவைப்படுகிறது.இது போல பல மில்லியன் ஆண்டுகளாக தொடரும் மாற்றங்கள் நிலக்கோளசுழற்சி என அழைக்கப்படுகிறது .இன்னொரு கார்பன் சுழற்சி உயிர்க்கோளத்தில் நடைபெறுவதால் உயிர்க்கோள சுழற்சி எனப்படுகிறது) biosphere cycle). உயிர்க்கோள சுழற்சி என்பது ஒரு வினாடி முதல் 100 ஆண்டுகள் வரை நடைபெறும் நிகழ்வுகளை உள்ளடக்கிய குறுகிய கால சுழற்சி ஆகும் .குறுகிய கால உயிர்க் கோள சுழற்சியில் ஒளிச்சேர்க்கை ,சுவாசித்தல் ,சிதைவு , எரித்தல் இந்த நான்கு நிகழ்வுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன .

உயிரினங்களில் பசும்பாசி ,செடி ,கொடி ,மரங்கள் போன்ற தாவர இனமானது பச்சையத்தைக் கொண்டிருப்பதால் தங்களுக்குத் தேவையான உணவைத் தாமே தயாரித்துக் கொள்ளும் முதன்மை உற்பத்தியாளர்களாக செயல்படுகின்றன .முதன்மை உற்பத்தியாளர்கள் பச்சையத்தின் மூலம் சூரிய ஒளிஆற்றலை பயன்படுத்தி ,கார்பன்-டை-ஆக்சைடு ,நீர் ஆகிய மூலப்பொருட்களைக் கொண்டு ஒளிச்சேர்க்கையின் மூலம் உணவுப் பொருட்களை தயாரிக்கிறது .ஒளிச்சேர்க்கையின் மூலம் மாவுப் பொருள் அதாவது ஸ்டார்ச் எனப்படும் கூட்டுச் சர்க்கரை தயாரிக்கப்படுகிறது .

அதிலிருந்து புரதங்கள் ,கொழுப்பு ,நியூக்ளிக் அமிலங்கள் மற்றும் இதர உயிர் மூலக்கூறுகள் தயாரிக்கப்படுகிறது .ஒளிச்சேர்க்கையே உலகில் உள்ள அனைத்து உயிரிகளும் உணவு பெறுவதற்கான அடிப்படை நிகழ்வாகவும் ,உணவுச்சங்கிலியின் முதன்மை மூலமாகவும் உள்ளது . ஒளிச்சேர்க்கையின் போது கார்பன்-டை-ஆக்சைடு பெருமளவு எடுத்துக் கொள்ளப்படுவதால் வளிமண்டலத்தில் உள்ள கார்பன்-டை-ஆக்சைடின் அளவு குறைகிறது.ஒளிச்சேர்க்கையின் மூலமே உயிர்கள் வாழ்வதற்கான சுவாசவாயுவான ஆக்சிஜன் பெருமளவில் பெறப்படுகிறது . தாவரங்கள் எல்லா நேரத்திலும் ஒளிச்சேர்க்கையில் ஈடுபடுவதில்லை.சூரிய ஆற்றல் கிடைக்காத போது தாவரங்கள் மற்ற உயிரிகளை போல் முற்றிலுமாக சுவாசத்தில் ஈடுபடுகின்றன.உயிர் சுவாசத்தின் போது ஆக்சிஜன் எடுத்துக்கொள்ளப்பட்டு கார்பன்-டை-ஆக்சைடானது வெளியிடப்படுகிறது.உயிர்ப் பொருட்களின் உருவாக்கம் ,வளர்ச்சி ,சிதைவு ,இவை அனைத்தையும் ஒருங்கிணைத்ததே உயிர்க்கோள சுழற்சி எனப்படுகிறது .நிலக்கோள சுழற்சியையும் ,உயிர்க்கோள சுழற்சியையும் ஒருங்கிணைத்ததே கார்பன் சுழற்சி ஆகும் .கார்பன் சுழற்சியின் மூலமாகத் தான் வளிமண்டலத்தில் உள்ள கார்பனின் அளவு மாற்றங்களுக்கு உட்படுகிறது .ஆகவே புவியின் வெப்ப நிலையை நிர்ணயிக்கும் முக்கியக் காராணியாகவும் இந்தக் கார்பன் சுழற்சி உள்ளது.

300 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட கார்பனிஃபெரஸ் காலகட்டத்தில் காணப்பட்ட தாவரங்கள் ,உயிரினங்கள் யாவும் பூமிக்கடியில் புதையுண்டு போய் அதிக வெப்பம் ,அழுத்தம் ஆகியவற்றுக்கு உட்பட்டு படிம எரிபொருளாக மாற்றம் அடைந்துள்ளது.அந்த படிம எரிபொருட்களை எரிக்கும் போது கார்பன் டை ஆக்சைடு வெளியேறுவதால் ,வளிமண்டலத்தில் கார்பன் டை ஆக்சைடின் அளவு அதிகரிக்கிறது.சுவாசித்தல் ,எரித்தல் ஆகிய இரு முக்கிய நிகழ்வுகளின் மூலம் திடவடிவில் உள்ள கார்பனானது ,கார்பன்-டை-ஆக்சைடாக வாயு நிலைக்கு மாறுகிறது .

புவியின் வரலாற்றில் ,குறுகிய கால கார்பன் சுழற்சியும் ,வேகமான கார்பன் சுழற்சியும் ஒருங்கிணைந்து செயல்பட்டு கார்பன் சமநிலையானது நிலை நிறுத்தப்படுகிறது .ஆனால் மனித நடவடிக்கைகளால் அதிகரித்துள்ள படிம எரிபொருள் பயன்பாடு ,நகரமயமாக்கம் ,காடுகள் அழிப்பு , மற்றும் பிற நில பயன்பாட்டு மாற்றங்களாலும் ,சூழல் மாற்றங்களாலும் வளிமண்டலத்தில் கார்பன் டை ஆக்சைடின் செறிவு அதிகரித்து கார்பன் சுழற்சியின் சமநிலை சீர்குலைந்துள்ளது.

மண்ணில் அதிக அளவில் கார்பன்-டை-ஆக்சைடு காணப்படுகிறது.ஒரு உயிர் அல்லது ஒரு பொருள் அல்லது ஒரு சூழல் அமைப்பு கார்பன்-டை-ஆக்சைடை உட்கொள்வதைக் காட்டிலும் அதிக அளவு கார்பன்-டை-ஆக்சைடை வெளியிட்டால் அவை கார்பன் மூலங்கள்) carbon sources) என்று அழைக்கப்படுகிறது.

மண் முக்கியமான கார்பன் சேமிப்பகமாக செயல்படுகிறது .உயிர்கள் இறந்த பின் சிதைவுக்குட்படுகிறது,பொருட்கள் சிதைந்து மண்ணோடு மண்ணாகிறது .இத்தகைய சிதைவுறும் நிகழ்வில் மண்ணில் உள்ள நுண்ணுயிர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன .நுண்ணுயிர்கள் சிக்கலான மூலக்கூறுகளை எளியப் பொருட்களாக சிதைவுறச் செய்து கார்பன்-டை-ஆக்சைடாக மாற்றுகிறது .கார்பன்-டை-ஆக்சைடு மண்ணில் நிலைப்படுத்துகிறது .நுண்ணுயிரிகளால் செய்யப்படும் இந்த நிகழ்வு மண் சுவாசம்) soil respiration) எனப்படுகிறது .பொதுவாக மண் உயிரற்றப் பொருளாகப் பார்க்கப்படுகிறது.மண்ணில் நடைபெறும் செயல்பாடுகளில் 90 விழுக்காடு நுண்ணுயிரிகளால் தான் செய்யப்படுகிறது.நுண்ணுயிரிகளும் ,மண் சுவாசமும் கார்பன் சுழற்சியில் முக்கியமான பங்கு வகிக்கிறது.அதன் மூலமாகத் தான் இறந்தப் பொருட்கள் ,இலை தளைகள் இவையெல்லாம் மக்கவைக்கப்பட்டு அதிலிருந்து பெறப்படும் கார்பன் மண்ணில் நிலைப்படுத்தப்படுகிறது .மண்ணின் கரிம கார்பன் (SOC-Soil organic carbon) என்பது மண்ணின் கரிமப் பொருட்களின் (SOM- Soil organic matter) முக்கிய அங்கமாக உள்ளது.மண்ணின் மக்கிய கரிமப்பொருளே ஹியூமஸ் எனப்படுகிறது .மண்ணில் கரிம கார்பனின் அளவு அதிகமாகும் போது அது வளமிக்க மண்ணாக இருக்கும்.மண்ணில் கரிம மக்குப்பொருளான ஹியூமஸ் அதிகமாக இருக்கும் போது அதனால் கார்பனை அதிக அளவில் உட்கிரகித்து நிலைப்படுத்த முடியும் .மக்கிய கரிமப் பொருள் செறிந்த மண்ணால் அதிகமாக தண்ணீரை உட்கிரகிக்க முடியும் .மண் வளமாக இருக்கும் போது நுண்ணுயிர் சுவாசம் மூலமாக வெளியேறும் கார்பன்-டை-ஆக்சைடில் பெருமளவு மண்ணிலே நிலைப்படுத்தப்படும்.மண் கரிம மக்கு இல்லாது வளம் குன்றியிருந்தால் கார்பன்-டை-ஆக்சைடு வளிமண்டலத்தில் சேர்ந்துவிடும்.

வளிமண்டலத்தில் உள்ள கார்பன் டை ஆக்சைடை திட நிலைக்கு மாற்றப்படுவதே கார்பன் நிலைப்படுத்துதல்) carbon sequestration) எனப்படுகிறது .ஒளிச்சேர்க்கையின் மூலம் தாவரங்கள் உணவு தயாரிக்கும் போது போது கார்பன் நிலைப்படுத்தப்படுகிறது .தாவரங்கள் வளிமண்டலத்தில் இருந்து எடுத்துக் கொண்ட எல்லா கார்பன்-டை-ஆக்சைடும்

ஒளிச்சேர்க்கையின் மூலமாக உணவாக தயாரிப்பதில்லை.ஒரு பகுதி வேர்கள் மூலமாக மண்ணை சென்றடைந்து மண்ணில் வாழும் நுண்ணுயிரிகளுக்கு உணவாகிறது. இறக்கும் தாவரங்களில் உள்ள கார்பனும் மண்ணில் தேக்கப்பட்டு நிலை நிறுத்தப்படுகிறது.மண்ணில் உள்ள நுண்ணுயிரிகளே கார்பன் நிலைப்படுத்தலில் முக்கிய பங்கு வகிக்கின்றன .அதுமட்டுமல்லாது வளிமண்டலத்தில் 71 விழுக்காடு நைட்ரஜன் இருந்தாலும் அதை நேரடியாகத் தாவரங்களால் பயன்படுத்த முடியாது.நைட்ரஜனை நிலைப்படுத்தும் பாக்டீரியாக்கள் ,பூஞ்சைகள் அதன் மூலமாகத் தான் தாவரங்களால் நைட்ரஜனை எடுத்துக் கொள்ள முடிகிறது .கார்பன் சுழற்சி என்பது ஒரு தன்னிச்சையான நிகழ்வு கிடையாது .உயிர் சுழற்சியில் நைட்ரஜனும்,பாஸ்பரஸும் முக்கியமான பங்கு வகிக்கிறது.கார்பன் சுழற்சி ,நைட்ரஜன் சுழற்சி ,பாஸ்பரஸ் சுழற்சி ,இவை அனைத்துமே ஒன்றுக்கொன்று தொடர்புடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது .நுண்ணுயிரிகள் இச்சுழற்சிகளில் முக்கியமான பங்கு வகிக்கிறது .

கார்பன் தேக்கம்:

உயிரினங்களோ ,சூழல் அமைப்போ கார்பன்-டை-ஆக்சைடை வெளியிடுவதைக் காட்டிலும் அதிக அளவிற்கு உட்கிரகித்தால் அவை கார்பன் தேக்கம்/தொட்டி) carbon sink) என்று அழைக்கப்படுகிறது.காடுகள் கார்பன்-டை-ஆக்சைடை வெளியிடுவதைக் காட்டிலும் அதிக அளவில் உட்கிரகித்துக் கொள்கிறது .ஆகவே காடுகள் ,மரங்கள் ஆகியவை கார்பன் சேமிப்பகங்களாக செயல்படுகிறது .கார்பன்-டை-ஆக்சைடு கார்பன்மூலங்களிலிருந்து கார்பன் சேமிப்பகங்களுக்கு தொடர்ந்து பரிமாற்றம் செய்யப்படுவது கார்பன் சுழற்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறது .புல்வெளிகள் ,தாவரங்கள்,கடல் நீர் ,மண் ஆகியவை அனைத்துமே கார்பன் சேமிப்பகங்களாக செயல்படுகிறது .

கார்பன் மூலம் :

ஒரு சூழல் அமைப்பு கார்பன்-டை-ஆக்சைடை உட்கிரகிப்பதைக் காட்டிலும் அதிக அளவிற்கு கார்பன்-டை-ஆக்சைடை வெளியிட்டால் அவை கார்பன் மூலம்) carbon source) என்று அழைக்கப்படுகிறது .கார்பன் மூலங்களுக்கும் ,கார்பன் தேக்ககங்களுக்கும் இடையில் கார்பனானது தொடர் பரிமாற்றத்துக்கு உட்படுகிறது.

கார்பன் தேக்ககங்களை எரிக்கும் போது அதிலிருந்து கார்பன்-டை-ஆக்சைடு அதிகம்

வெளியேற்றப்படுகிறது.அப்போது அவை கார்பன் சேமிப்பகமாக செயல்படாமல் கார்பன் மூலமாக செயல்படுகிறது .காடானது கார்பன் சேமிப்பகமாக செயல்படுகிறது .அதே காட்டை எரிக்கும் போது கார்பன் மூலமாக செயல்படுகிறது .இவ்வாறு அக ,புறக் காரணிகளை பொருத்து ஒரு சூழலானது கார்பன் சேமிப்பகமாகவோ ,கார்பன் மூலமாகவோ ,செயல்படுகிறது .நாம் வரலாற்று அடிப்படையில் பார்க்கும் போது படிம எரி பொருட்கள் கார்பன் சேமிப்பகங்களாகத் தான் செயல்பட்டுள்ளன .பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக பூமிக்கடியில் பெருமளவிலான கார்பன் நிலைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது.ஆனால் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட கார்பன் சேமிப்பகங்களை ஆற்றலுக்காக பயன்படுத்தும் போது அவை கார்பன் சேமிப்பகமாக செயல்படாமல் கார்பன் மூலமாக மாற்றப்படுகிறது.அதனால் தான் ஒரு காலத்தில் கார்பன் சேமிப்பகங்களாக செயல்பட்ட படிமப் பாறைகள் மனித நடவடிக்கைகளால் கார்பன் மூலங்களாக மாற்றப்பட்டுள்ளன.

கடலில் கார்பன் சுழற்சி:

உலகில் நான்கில் மூன்று பகுதி கடலால் சூழப்பட்டிருக்கிறது.கடல் நீர் கார்பன் சேமிப்பகங்களாக செயல்படுகிறது .ஒவ்வொரு ஆண்டும் வளிமண்டலத்திலிருந்து சுமார் 92 ஜிகாடன் கார்பன்-டை-ஆக்சைடு கடலால் உட்கிரகிக்கப்படுகிறது 30 .விழுக்காட்டிற்கு மேல் கார்பன்-டை-ஆக்சைடு கடலில் சேமிக்கப்பட்டுள்ளது .

கடல் அலை,கார்பன்-டை-ஆக்சைடின் அளவு ,காற்று அடிக்கும் திசை ,வேகம் ,கடல் நீரின் வெப்ப நிலை ,என பல்வேறு காரணிகள் கடலில் எவ்வளவு கார்பன் டை ஆக்சைடு கலக்கிறது என்பதை நிர்ணயிக்கிறது .கடலின் மேல் பரப்பில் உள்ள தண்ணீரில் கார்பன்-டை-ஆக்சைடு கரைகிறது.நீரில் கலந்த கார்பன் டை ஆக்சைடை கடல் வாழ் உயிரினங்கள் எடுத்துக் கொள்கின்றன.

கடலில் ஏற்படும் கார்பன் சுழற்சியில் மூன்று நிகழ்வுகள் முக்கியப் பங்குவகிக்கின்றன.முதலாவதாக கடலில் காணப்படும் நீர் சுழற்சியில் இரு முக்கிய கீழ்விழும் நீரோட்டமும் ,மேலெழும் நீரோட்டமும் முக்கிய பங்கு வகிக்கின்றன .கீழ்விழும் நீரோட்டத்தின் போது) downwelling) கடலின் மேலுள்ள அடர்த்தி அதிகமான குளிர்ந்த நீர் கீழே பாய்கிறது .கீழிருந்து குளிர்ந்த நீர் வெப்ப பரிமாற்றத்தின் மூலம் வெப்ப சமநிலையை ஏற்படுத்த மேலே எழும்புவதை

மேல்எழும்பும் நீரோட்டம் எனப்படுகிறது .கீழ்விழும் நீரோட்டம் ,மேல்எழும்பும் நீரோட்டம் இரண்டுமே கடலின் நீர் சுழற்சியிலும் ,கார்பன் சுழற்சியிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது . கீழ்விழும் நீரோட்டத்தின் போது கடல் நீரின் மேல் பரப்பில் உள்ள கார்பன்-டை-ஆக்சைடு கீழ்பகுதியை அடைந்து கடல் வாழ் உயிரினங்களால் உட்கிரகிக்கப்படுகிறது .மீதம் உள்ள கார்பன்-டை-ஆக்சைடு கடலின் அடியில் நிலைப்படுத்தப்படுகிறது .கடற்கரையோரப் பகுதிகளில் வெப்பநிலை அதிகமாகும் போது கடல் நீர் விரிவடைகிறது .கீழுள்ள குளிர்ந்த நீர் மேல்எழும்பி வெப்ப பரிமாற்றத்தின் மூலம் வெப்பசமநிலையை ஏற்படுத்துகிறது .இதன் மூலம் கீழுள்ள கரிமப் பொருட்கள் மேற்பரப்புக்கு கொண்டுவரப்பட்டு உணவாக எடுத்துக் கொள்ளப்படுகிறது .கீழ்விழும் நீரோட்டம் ,மேல்எழும்பும் நீரோட்டம் ஆகிய இரண்டுமே கார்பன் சமநிலையையும் ,கடலின் உணவு சங்கிலியின் சமநிலையையும் காப்பதில் முக்கியமான பங்கு வகிக்கிறது .ஆனால் புவிவெப்பமாதலால் தற்போது கடலின் மேலடுக்கு அதிக உப்புடன் அடர்த்தி அதிகமாக உள்ளதால் மேல்எழும்பும் நீரோட்ட நிகழ்வு தடைபட்டு நீர்சுழற்சியும் ,கார்பன் சுழற்சியும் பாதிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவதாக கடலில் பெருமளவில் காணப்படும் பசும்பாசிகளே கடலில் முதன்மை உற்பத்தியாளராக உள்ளன .இவையல்லாது கடல் நீர் தாவரங்களும் முதன்மை உற்பத்தியாளராக செயல்படுகின்றன .உலகளவில் 50 விழுக்காடு ஆக்சிஜன் கடலிலிருந்தே பெறப்படுகிறது .கடலின் முதன்மை உற்பத்தியாளர்கள் தண்ணீரில் கரைந்துள்ள கார்பன் டை ஆக்சடை எடுத்துக் கொண்டு உணவுப் பொருட்களைத் தயாரிக்கிறது .பசும்பாசிகளை பல கடல் வாழ் உயிரினங்கள் உணவாகக் கொள்கின்றன.இது போக இறக்கும் பசும்பாசிகள் கடலுக்கடியில் நிலைப்படுத்தப்படுகிறது .

மூன்றாவதாக ,கார்பன்-டை-ஆக்சைடு கடல் நீருடன் கலக்கும் போது பை கார்பனேட் அயனி உருவாகிறது .கடலில் உள்ள மேலே ஓடுடைய உயிரினங்களான சிப்பி ,கிழிஞ்சல்கள் , நட்சத்திரமீன் போன்ற முட் தோலிகள் ,போன்ற பல்வேறு கடல் வாழ் உயிரினங்களில் கடினமான ஓடு உருவாவதற்கும் ,முட்டை ஓடு உருவாவதற்கும் ,கடல் வாழ் உயிரினங்களின் எலும்பு ,உடல் உள்கட்டமைப்பிற்கும் ,பராமரிப்புக்கும் கால்சியம் கார்பனேட் முதன்மையாகத் தேவைப்படுகிறது . கால்சியம் கார்பனேட் உருவாவதற்கு கார்பனேட் அயனி முக்கிய பங்கு வகிக்கிறது.கார்பனேட் அயனி கால்சியத்துடன் இணையும் போது தான் ஓடு ,எலும்பு ஆகியவை உருவாக்கப்படும் . இத்தகைய ஓடுடைய ,எலும்புகளுடைய உயிரினங்கள் இறந்தபிறகு அவை கடல் ஆழத்தில் போய்

தேக்கப்படுகிறது .இவையே காலப் போக்கில் லைம் ஸ்டோன் எனப்படும் சுண்ணாம்புப் பாறையாக மாறுகிறது .அந்த சுண்ணாம்புப் பாறையிலிருந்து தான் மார்பிள் உருவாகிறது . இத்தகைய மூன்று முக்கிய நிகழ்வுகளால் கடல் ஒரு கார்பன் தேக்ககமாக செயல்படுகிறது.வளிமண்டலத்தில் கார்பன்-டை-ஆக்சைடின் அளவு அதிகமானதால் கடல் நீரிலும் கார்பன்-டை-ஆக்சைடின் அளவு அதிகரித்து கடல் நீர் 30 விழுக்காட்டிற்கு மேல் அமிலமயமாக்கப்பட்டுள்ளது .கடல் நீரின் அமிலமயமாக்கத்தால் கால்சியம் கார்பனேட்டின் அளவு குறைவதால் கடல் விலங்குகளின் மேலோடு ,முட்டை ஓடு ஆகியவற்றின் உருவாக்கமும் , உள்கட்டமைப்பும் ,எலும்புகளின் உருவாக்கமும் வளர்ச்சியும் தடைபடுகிறது .அதனால் கடல் உயிரினங்களின் வளர்ச்சி குன்றியுள்ளது .கடம் அமிலமாக்கத்தால் பவளப்பாறைகள் நிறமிழந்துள்ளன .இவ்வாறு பல்வேறு விதமாக கார்பன் சுழற்சியின் சமநிலை பாதிக்கப்படுவதால் கடல் உயிரினங்களின் இயல்பான வளர்ச்சி அச்சுறுத்தப்பட்டுள்ளது .மேற்குறிப்பிட்ட மூன்று நிகழ்வுகளும் கடல் நீரின் கார்பன் சுழற்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

புவியில் உயிரினங்களும் காடு ,கடல்,மண் போன்ற பல்வேறு உயிர்ச் சூழல்களும் கார்பனை நிலைப்படுத்துதலில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.வளிமண்டலத்தில் முதன்மையான பசுங்குடில் வாயுவான கார்பன்-டை-ஆக்சைடின் அளவைக் குறைப்பதற்கு கார்பன் சேமிப்பகங்களின் எண்ணிக்கையை அதிகரித்து கார்பன் நிலைப்படுத்துதலின் அளவை கணிசமாக உயர்த்தவேண்டும் . அதற்கு நாம் அதிக அளவில் காடுகள் வளர்வதற்கான சூழலையும் ,புல்வெளிகளையும் ஏற்படுத்த வேண்டும் .சதுப்பு நிலங்களை சீரமைத்து பராமரிப்பதனாலும் பவளப்பாறைகளை சீரமைத்து பாதுகாப்பதாலும் கார்பன் நிலைப்படுத்துதலை அதிகரிக்க முடியும் ,மூடாக்கின் மூலம் மண்ணின் கரிம மக்குப் பொருட்களை' ,ஹியூமஸை 'அதிகப்படுத்தி மண் வளத்தை மேம்படுத்துவதன் மூலம் மண்ணின் கார்பன் நிலைப்படுத்தும் ஆற்றலை அதிகரிக்க முடியும் .

கார்பன் சேமிப்பகங்களை செயற்கையாகவும் உருவாக்க முடியும் .தொழில் நுட்பங்கள் மூலமாக வளிமண்டலத்தில் உள்ள கார்பன் டை ஆக்சைடை திட வடிவில் நிலைப்படுத்தி ,புவிக்கடியிலும் ,

பாறை இடுக்குகளிலும் சேமிப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன . நிலக்கரியிலிருந்து மின்னாக்கம் செய்யப்படும் போது வெளியேறும் கார்பன் டை ஆக்சைடை வளிமண்டலத்தில் விடாமல் குழய்களின் மூலமாக சேமித்து பூமிக்கடியில் , பாறைகளுக்கடியிலும் தேக்கப்படுகிறது .இவ்வாறு நிலக்கரியிலிருந்து பெறப்படும் மின்சாரம் தூய ஆற்றல்) Clean energy) என அழைக்கப்படுகிறது .எந்தெந்த இயற்கை நிகழ்வுகளின் மூலம் கார்பன்-டை-ஆக்சைடு குறைக்கப்படுகிறதோ அதே நிகழ்வுகளை செயற்கையாக ஏற்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன .சுண்ணாம்புப் பாறைகள் மூலமாக அதிகளவில் கார்பன்-டை-ஆக்சைடை நிலைப்படுத்த முடியும் என்பதால் செயற்கையான முறையில் சுண்ணாம்புப் பாறைகளின் உருவாக்கமும் தூண்டப்படுகிறது .கடல் நீரில் இரும்புத் தாதுக்களை சேர்ப்பதன் மூலமாக கடல் உயிரினங்களின் வளர்ச்சியை அதிகப்படுத்துவது ,கடல் உயிரிகளின் வளர்ச்சியால் கார்பன்-டை-ஆக்சைடு அதிகளவில் நிலைப்படுத்தப்படுவதால் வளிமண்டலத்தில் உள்ள கார்பன்-டை-ஆக்சைடின் அளவு குறையும் .செயற்கை மரம் ,செயற்கை இலை ,செயற்கையாக ஒளிச்சேர்க்கையை ஏற்படுத்தி அதன் மூலம் கார்பன் டை ஆக்சைடின் அளவை குறைப்பதற்கான முயற்சிகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகிறார்கள்.

காலநிலை மாற்றத்தால் நிகழ இருக்கும் பேரழிவுகளை தவிர்க்க உடனடியாக நாம் பசுங்குடில் வாயுக்களின் வெளியேற்றத்தை பெருமளவிற்கு குறைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் .சுற்றுச்சூழல் அமைப்புகள்,வாழ்விடங்களை அதிக அளவில் கார்பன்-டை-ஆக்சைடை உட்கிரகிக்கும் இயற்கையான கார்பன் தேக்ககங்களாகச் செயல்படுமாறும் ,அவை கார்பன்-டை-ஆக்சைடை அதிகம் வெளியிடும் மூலங்களாக செயல்படாதவாறும் அவற்றை பராமரித்து பாதுகாக்க வேண்டும் .நாம் அனைவரும் கார்பன் சுழற்சியின் சமநிலையை மீட்டெடுத்து உயிர்க்கோளத்தைப் பாதுகாக்க வேண்டும்.

(தொடரும்)

# தமிழ்த்தேசிய அரசியலாளர்கள் வாக்களிக்க மறுப்பது ஏன்?

**பேராசிரியர் த. செயராமன்**

[நெறியாளர், தமிழ் மண் தன்னுரிமை இயக்கம்]



'தேர்தலில் வாக்களிப்பது நம் கடமை' என்றும் 'உரிமை' என்றும் உபதேசங்கள் ஆண்டுதோறும் நடந்து கொண்டே இருக்கின்றன. 'ஊருக்குச் செல்ல பாதை இல்லை, செத்தால் புதைக்க சுடுகாடு இல்லை; அவை கிடைக்கும்போது வாக்களிக்கிறோம்! அது வரை வாக்களிக்கப் போவதில்லை' என்று சாமானிய மக்கள் ஒரு போராட்ட வடிவமாகத் தேர்தலைப் புறக்கணித்து, வாக்களிக்க மறுக்கிறார்கள்.

மற்றொரு புறம், அரசியல் அறிவியல் அறிந்த, வரலாறு அறிந்த, மெத்தப் படித்த, சமூக அக்கறை கொண்டவர்களும் வாக்களிக்க மறுக்கிறார்கள். பலர் 'நோட்டா' வில் தங்கள் வாக்கைப்

பதிவு செய்கிறார்கள். தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுப்பவர்களும், புரட்சிகர இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் வாக்களிக்க மறுக்கிறார்கள். இவர்கள் ஏதும் அறியாதவர்கள் என்பதால் வாக்களிக்க மறுக்கிறார்களா? தமிழ்நாட்டின் பிரச்சினைகளையும், அவற்றுக்கான நிரந்தரத் தீர்வு பற்றியும் அறிந்து கொண்டதாலேயே வாக்களிக்க மறுக்கிறார்கள்.

தேர்தல்களில், மக்களின் ஆதரவைப் பெற நலத் திட்டங்களை ஏராளமாக அறிவித்து, அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுகின்றன. இப்போதும் 2021சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில், அதிமுக 173 நலத்திட்டங்களையும், திமுக 500 நலத்திட்டங்களையும் அறிவித்துள்ளன. இக்கட்சிகளின் தலைமையில் அமைந்த கூட்டணிகள்தான் தமிழகத்தின் பெரிய தேர்தல் கூட்டணிகள். கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளில் பேசப்படுபவை தமிழக மக்களுக்கான நலத்திட்டங்கள் மட்டுமே; அவை தமிழகத்தின் உரிமை மீட்புக்கானவை அல்ல. அப்படி ஏதேனும் உரிமைகள் தொடர்பாக தேர்தல் அறிக்கையில் பேசுவதாக இருந்தால், "நடுவண் அரசிடம் வலியுறுத்தப்படும்" என்று மட்டுமே கூறப்பட்டிருப்பதைக் காணலாம். ஏனென்றால், அரசியல் கட்சிகளுக்கே தெரியும், தாங்கள் உரிமை மீட்டெடுப்பு பற்றிப் பேச முடியாது என்பது. ஏனெனில், மாநில அதிகாரம் என்பது மொட்டையடிக்கப்பட்ட ஒன்று.

வாக்களிக்க மறுப்பதற்குக் காரணம் சனநாயகத்தின் மீதான நம்பிக்கைக் குறைவா? அல்லது தேர்தல் முறையில் அவநம்பிக்கையும் சலிப்பும் கொண்டு விட்டார்களா? அல்லது போட்டியிடும் வேட்பாளர்கள் நேர்மையற்றவர்கள் மற்றும் அக்கறையற்றவர்கள் என்பதாலா? இவை எதுவும் காரணம் இல்லை. நம்மைச் சுற்றியுள்ள அனைத்தையும் தீர்மானிப்பதும், செயல்படுத்துவதும் அரசாங்கம்தான் என்பது தெளிவாகத் தெரிந்திருந்தும், தமிழ்த்தேசியர்கள் வாக்களிக்க மறுப்பதை ஒரு தொடர் போராட்டமாக நடத்தி வருகிறார்கள். வாக்களிப்பதற்கு எதுவும் தேவையில்லை. வாக்களிக்க 18 வயதும், ஓர் ஆட்காட்டி விரலும் இருந்தால் போதுமானது. ஆனால் வாக்களிக்க மறுப்பதற்கு ஏராளமான காரணங்களும், அதற்கான நியாயப்பாடுகளும் இருக்கின்றன.

ஒரு மக்கள் (a people) தங்கள் ஆட்சியாளரைத் தேர்ந்தெடுக்கவும், ஆயுதங்கள் இல்லாமல் அரசை மாற்றியமைக்கவும், தங்களுக்கான சட்டங்களை இயற்றிக் கொள்ளவும், உலகில் தேர்தல் முறைதான் கைக் கொள்ளப்படுகிறது. உலகில் 167 நாடுகளில் மிகுந்த சனநாயகத்

தன்மையுடன், தேர்தல் மூலம் அரசாங்கங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

ஒரு தேசத்தில் தேர்தல் என்பது சனநாயக வழிமுறை ஆகும். அதேநேரம், பல தேசிய இனங்கள் உள்ள இந்தியா போன்ற ஒரு பெரும் நாட்டில், அதே தேர்தல் சனநாயகம் அப்பெருந்தேசிய இனத்தின் மேலாதிக்கத்தை பிற தேசிய இனங்களின் மீது நிறுவவும், சிறிய தேசிய இனங்களின் உரிமைகளை மறுக்கவும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. அத்தகைய நாடுகளில் தேசிய இனங்களின் இருப்பும், சமத்துவமும் உறுதி செய்யப்பட வேண்டும். சாதிகள் இருப்பதையும், சமயங்கள் இருப்பதையும் ஏற்கிற இந்திய அரசியல் சட்டம், இந்தியாவில் தேசிய இனங்கள் என்ற ஒன்று இருப்பதையே ஏற்கவில்லை.

**மாநில உரிமைகள் : ஆங்கிலேயர் ஆட்சியிலும்**

**விடுதலை பெற்ற இந்தியாவிலும்**

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வரைமுறை இல்லாமல் வாள்முனையால் உருவாக்கப்பட்ட இந்தியா இன்றளவும் அப்படியே தொடர்கிறது. மொழிவாரி மாநிலங்கள் (1956) உருவாக்கப்பட்டாலும், அவை அதிகாரமற்ற அரசுகளைக் கொண்ட மாநிலங்களாகவே திகழ்கின்றன.

பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து இந்தியாவில் போராட்டங்கள் மூண்டு விட்ட சூழலில், அரசியல் அதிகாரங்களில் சிறிதளவை இந்தியர்களோடு பகிர்ந்து கொள்ளும் நோக்கில், 1909 முதல் சட்டங்களை இயற்றத் தொடங்கியது ஆங்கிலேய அரசு. மின்டோ -மார்லி சீர்திருத்த சட்டம் (1909), மாண்டேகு- செம்ஸ்போர்டு சீர்திருத்த சட்டம் (1919), இந்திய அரசுச் சட்டம் (1935) ஆகியவை இந்நோக்கில் கொண்டுவரப்பட்டன. 1920ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த மாண்டேகு- செம்ஸ்போர்டு சட்டம் மாகாணங்களில் இரட்டை ஆட்சியை உருவாக்கியது. முக்கியமற்ற சில அதிகாரங்களை தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதவியேற்கும் அமைச்சர்களுக்கு வழங்கியது. அதை வைத்துக்கொண்டு நீதிக்கட்சி சென்னை மாகாணத்தில் சில சீர்திருத்தங்கள் செய்தது. 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் மாகாண சுயாட்சி வழங்கியது. மத்தியில் இரட்டை ஆட்சியை உருவாக்கியது. ஒப்பீட்டளவில், 1935 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்திய அரசுச் சட்டம் மாகாணங்களுக்கு அதிக உரிமைகளை, அதிகாரங்களை வழங்கியது. ஆனாலும்கூட, ஒரு நாட்டை அடக்கி மேலாளுகை செய்வதற்கான ஒரு

சட்டமாகத்தான் ஆங்கிலேய அரசு அதை உருவாக்கம் செய்திருந்தது. மாகாணங்களுக்கு அது மாகாண சுயாட்சி அளித்திருந்தாலும்கூட, மாகாணங்களை "மதிப்பிற்குரிய முனிசிபாலிட்டிகள்" (Honourable Municipalities) என்று காந்தியார் விமர்சித்தார். அப்படி விமர்சிக்கப்பட்ட 1935ஆம் ஆண்டுச் சட்டம் சிறிய மாற்றங்களுடன் 1950ஆம் ஆண்டு இந்திய குடியரசு அரசியலமைப்புச் சட்டமாக நடைமுறைக்கு வந்தது.

அரசியலமைப்பு அவையில் இருந்த கே. சந்தானம் இவ்வாறு கூறுகிறார்:

"பிரிட்டிஷ் அரசை வன்மையாக எதிர்த்து வந்த இந்தியத் தலைவர்கள் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை நிலைநாட்டும் நோக்கத்துடன் உருவாக்கிய ஓர் அரசியல் சட்டத்தை அப்படியே அடிமைத்தனத்துடன் ஏற்றுக்கொண்ட அசாதாரணமான உண்மையை விளக்குவது சுலபமானது அன்று".

உண்மையில் 1935ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் கொண்டுவந்த சட்டத்தில் மாகாணங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை விட, மிகவும் குறைவாகவே இந்திய அரசியலமைப்புச் சட்டம்-1950இல் மாநிலங்களுக்கு வழங்கியுள்ளது. இந்திய ஒன்றியத்தில் மாநிலங்களின் நிலை மிகவும் பரிதாபகரமானது. மிகக்குறைந்த அதிகாரங்களுடன் தட்டுத் தடுமாறி, தள்ளாடி, மாநில அரசுகள் செயல்பட்டு வருகின்றன. புழக்கடையில் நின்று பிச்சை கேட்டுக் குரல்கொடுக்கும் பிச்சைக்காரனின் நிலையில் மாநில அரசுகள் இருப்பதாக பல அரசியல் அறிஞர்கள் முன்னமே விமர்சித்து இருக்கிறார்கள்.

இந்திய அரசியல் சட்டத்தை எழுதத் தகுதியானவர் என்று கருதப்பட்ட சர் ஐவர் ஜென்னிங்ஸ் இவ்வாறு கூறுகிறார்:

"அதிகபட்சம் சட்டசபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி விட்டு, மத்திய அரசைத்தான் மாநில அரசுகள் தொங்கிக் கொண்டிருக்க வேண்டுமே தவிர, மாநிலங்களுக்கு அந்த அதிகாரம் கூட கிடையாது."

இந்தியாவுக்குள் ஓரளவு உரிமையுடன் வாழ்வது என்ற நோக்கில்,1974இல் தமிழக சட்டமன்றம் நிறைவேற்றிய மாநில சுயாட்சித் தீர்மானத்தை இந்திய நடுவண் அரசு

குப்பைக் கூடையில் வீசி 46 ஆண்டுகள் ஆகின்றன

இப்போது, எஞ்சி இருந்த அதிகாரங்களும் மாநிலங்களிடமிருந்து மேலும் பிடுங்கப்பட்டிருக்கின்றன.

தமிழகம் பொருளாதார ரீதியாக சூறையாடப்படுகிறது. பண்பாட்டிலும், சமூகத்திலும் பார்ப்பனியம் மேலாண்மை செய்கிறது. அரசியல் சட்டம் குறைவான அதிகாரங்களை மட்டுமே மாநிலங்களுக்கு வழங்கியிருக்கிறது. அந்த அதிகாரங்களும் கூட நடுவண் அரசால் பறிக்கப்படுகின்றன. தமிழ் மொழி ஆட்சிமொழியாக, வீட்டு மொழியாக, நீதிமன்ற மொழியாக, வழிபாட்டு மொழியாக விளங்க வாய்ப்பில்லாமல் கிடக்கிறது. இந்திய வல்லாதிக்கத்திற்குப் பயந்து தமிழினம் வாழ்கிறது. ஒரு தேசிய இனத்திற்குரிய முழுமையான உரிமை பெற்ற இனமாக தமிழினம் வாழ வேண்டும் என்ற இலக்கைக் கொண்டவர்கள், குறைபாடுள்ள இந்திய அரசியல் சட்டத்தை ஏற்க மறுக்கிறார்கள்.

இந்த அரசமைப்பு மாற்றியமைக்கப்பட்டு, தேசிய இனக் குடியரசுகளின் கூட்டமைப்பாக இந்தியா மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று கோரி தேர்தல் அரசியலில் பங்கேற்க மறுக்கிறார்கள். பிரிந்து போகும் உரிமையோடு கூடிய சுயநிர்ணய உரிமை (தன்னுரிமை) கோருகிறார்கள்.

இறையாண்மையுள்ள தமிழ்த் தேசக் குடியரசை அரசியல் இலக்காகக் கொண்டவர்கள் தமிழ்த்தேசியர்கள். ஆரியத்தின் அரசியல் வடிவமாகிய இந்திய தேசியத்தை ஏற்க மறுத்து, தேசிய இனங்களின் இருப்பையே ஏற்காத இந்திய அரசியலமைப்புக்கு இணங்கி அரசியல் நடத்துவதை மறுத்து, தமிழ்த் தேசிய இனத் தன்னுரிமையை வென்றெடுக்கும் கருத்தியல் தளத்தில் அல்லது தமிழ்நாடு விடுதலையை இலக்காக வைத்துத் தமிழ்த் தேசிய இயக்கங்கள் செயல்படுகின்றன.

பல்வேறு மொழிவழித் தேசிய இனங்களின் தாயகங்களை வலுக்கட்டாயமாகப் பிணைத்து, ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட இந்தியாவுக்கு, விடுதலைக்குப் பின்னர் எழுதப்பட்ட இந்திய அரசியல் சட்டம் பல்தேசிய இனங்களின் அடையாளத்தையும், உரிமைகளையும் ஏற்பதாக இல்லை.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

இந்திய அரசியல் சட்டம் பல்தேசிய இனங்கள் வாழும், அல்லது பல தேசங்களை உள்ளடக்கிய ஒரு நாட்டிற்கு ஏற்றதல்ல. இந்திய அரசியல் சட்டத்தில், 'கூட்டாட்சி' என்ற சொல்கூட இல்லை; வளர்ச்சியடைந்த 18க்கும் குறையாத எண்ணிக்கையில் இருக்கும் தேசிய இனங்களின் இருப்பையும் அது ஏற்கவில்லை.

மொழித் தேசிய இனத் தாயகங்களின் தளராத போராட்டங்களின் விளைவாக, மொழிவழி மாநிலங்கள் உருவாக்கத்தை (1953-1956) வேறுவழியின்றி இந்திய அரசு ஏற்றது. இருந்தாலும், தேசிய இனங்களின் மரபுவழி வாழ்விட நிலப்பரப்பை மொழிவழித் தேசிய இனங்களின் தாயகமாக அது கருதவில்லை. அவற்றை வெற்று நிர்வாகப் பிரிவுகள் போலக் கருதுகிறது.

இந்திய அரசியல் சட்டம் - கூறு 3, மாநிலங்களை உடைக்கவோ, பிரிக்கவோ, வேறு மாநிலங்களுடன் சேர்க்கவோ, மாநிலமே இல்லாமல் ஆக்கவோ இந்திய நாடாளுமன்றத்துக்கு உரிமை இருப்பதாகப் பேசுகிறது.

ஒரு மாநிலத்தையே இல்லாமல் அடிக்கும் சட்டப் பிரிவுகளை உள்ளடக்கிய அரசியல் சட்டத்தை எந்தத் தேசிய இனமும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே தமிழ்த் தேசியர்கள் இந்திய அரசியல் சட்டத்திற்கு இணக்கமான தேர்தல் அரசியலை ஏற்பதில்லை.

**திணிக்கப்படும் ஒற்றையாட்சி முறை**

இந்திய அரசியலமைப்பு என்பது வடிவத்தில் கூட்டாட்சி போன்று தோற்றமளிக்கும் ஓர் ஒற்றையாட்சி ஆகும். அரசியல் அறிவியலாளர் கே.சி.வியர் இந்திய அரசியலமைப்பை "அரைகுறைக் கூட்டாட்சி" (Quasi federal) என்று குறிப்பிடுகிறார்.

ஒற்றைக் குடியுரிமை, ஒற்றை நீதித்துறை, அவசரநிலைப் பிரகடனம் செய்ய உருவாக்கப்பட்டிருக்கும் அரசமைப்புச் சட்டப் பிரிவுகள், நூற்றுக்கு மேற்பட்ட ஆட்சிக் கலைப்புகள், பிற கூட்டாட்சி நாடுகளைப் போலன்றி மேலவையில் (ராஜ்யசபை) மாநிலங்களுக்குச் சமமான உறுப்பாண்மை அளிக்கத் தவறிய நிலை, நடுவண் அரசு மற்றும் மாநிலங்களுக்கு இடையே பாரபட்சமான அதிகாரப் பங்கீடு (ஒன்றிய அரசுப்

பட்டியல்100; பொதுப்பட்டியல் 61; மாநில பட்டியல் 52), மாநிலப் பட்டியலிலிருந்தும், பொதுப் பட்டியலிருந்தும் எந்த அதிகாரத்தையும் எப்போது வேண்டுமானாலும் பறித்துக் கொள்ள உரிமை பெற்ற ஒன்றிய அரசின் மேலாதிக்க நிலை; ராஜ்ய சபை(மேலவை) யின் ஒரே ஒரு தீர்மானத்தின் மூலம் (அரசியல் சட்டக் கூறு 249), மாநில அதிகாரங்களைப் பிடுங்கிக் கொள்ளும் அதிகாரம், அவசரநிலைப் பிரகடனம் செய்து மாநிலப் பட்டியலில் உள்ள துறைகள் தொடர்பாக ஒன்றிய அரசே சட்டம் இயற்றும் மேலாதிக்கம்; இந்திய ஆட்சிப் பணித் துறை மூலம் இந்தியா முழுவதும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளைக் கட்டுப்படுத்துவது, காஷ்மீரில் நிகழ்த்தப்பட்டதைப் போல வரலாறு முழுவதும் தனி அரசுகளாக நிலவி வந்திருக்கும் மாநிலங்களின் மாநிலத் தகுதியையும் பறித்துக்கொண்டு, ஒன்றியப் பகுதியாக மாற்றுவது… என்று வரைமுறை இல்லாத ஒடுக்குமுறைகளைச் செய்வது, தேசிய இன மொழிகளைப் புறந்தள்ளி இந்தியை இந்தியாவின் ஆட்சி மொழியாக ஏற்பளிப்பு செய்திருப்பது… என இந்திய அரசியல் சட்டம் தேசிய இன உரிமைப் பறிப்பு ஆவணமாகத் திகழ்கிறது.

இந்திய அரசியல் சட்டத்துக்கு உட்பட்டு அரசியல் செய்வது தன்மானமுள்ள எந்த தேசிய இனத்திற்கும் ஏற்புடையதல்ல. ஆகவே, தேசிய இனங்கள் மீது ஒடுக்குமுறைகளை நிலைப்படுத்துகின்ற, தேசிய இனங்களுக்கிடையே சமத்துவத்தை மறுக்கின்ற இந்திய அரசியலமைப்புக்கு உட்பட்டு தேர்தல் அரசியலில் பங்கேற்க தமிழ்த் தேசியர்கள் மறுக்கிறார்கள்.

உலக அரங்கில் வரையறுக்கப்பட்டுள்ள ஒரு தேசிய இனத்திற்கான அத்தனை இலக்கணங்களையும் கொண்டு விளங்கும் 8 கோடி தமிழ் மக்களைக் கொண்ட தமிழ்த் தேசிய இனத்தின் தன்னுரிமை அரசியலை தமிழ்த் தேசியர்கள் வலியுறுத்துகின்றனர்.

படிப்பாளர்களுக்கு இக்காரணங்கள் போத மாட்டா என்றால், நடைமுறையில் மேலும் பல சான்றுகளைப் பட்டியலிடலாம்:

தமிழினம் ஓர் அடிமைப்பட்ட இனம் என்பதற்கான சான்றுகள் இவை:

நடைமுறையிலும், தமிழ்மக்கள் அடிமைப்பட்ட மக்களாகவே இந்திய ஒன்றியத்துக்குள் இருந்து வருகிறார்கள் என்பதை இந்திய நடுவண் அரசின் தொடர் செயல்பாடுகள் உணர்த்தி

வருகின்றன:

**#மீனவர்_படுகொலை: கேட்க_நாதியில்லா_அடிமைப்பட்ட_தமிழினம்:**

தமிழக மீனவர்கள் 575 பேரை சிங்களக் கடற்படை தமிழகக் கடற்பரப்புக்குள்ளேயே வைத்துக் கொன்றதை இந்தியா ஏற்கிறது. ஆனால், இலங்கை மீது எவ்வித நடவடிக்கையும் எடுத்ததில்லை. கண்டனம் கூட தெரிவித்ததில்லை.

2021 மார்ச்சு மாதம், நாகை மாவட்ட மீனவர்கள் தொடர்ந்து வெள்ளப்பள்ளம், புஷ்பவனம் போன்ற பகுதிகளுக்கு அருகாமையில் கடலில் மர்ம மனிதர்களால் தாக்கப்பட்டுள்ளனர். இந்தியக் கடற்படையும் கடலோரக் காவல்படையும் இது குறித்து எவ்வித அசைவும் இல்லாமல் இருக்கின்றன. தமிழக அரசு கையறுநிலையில் இருக்கிறது. மீனவர்கள் கொல்லப்பட்டால் உதவித்தொகை என்பதோடு மாநில அரசு நிறுத்திக் கொள்கிறது.

**#ஈழத்தமிழர்_படுகொலை: #அடிமைப்பட்ட_தமிழினத்தால_ஏதும்_செய்ய_முடியவில்லை:**

ஈழத் தமிழர் படுகொலையை தடுத்து நிறுத்தக் கோரிய தமிழ்நாட்டை இந்திய அரசு எட்டி உதைத்தது. தமிழர்களைக் கொன்று குவிக்கும் போரில் இலங்கைக்கு பல்வேறு உதவிகளை செய்தது. இனப்படுகொலை செய்த இலங்கையைப் பாதுகாக்க இன்றுவரை இந்திய அரசு துணை நிற்கிறது. இலங்கை நடத்தியது ஓர் இனப்படுகொலை என்பதை இன்றுவரை இந்தியா ஏற்க மறுக்கிறது. சர்வதேச அரங்கில் இனப்படுகொலை செய்த இலங்கையைப் பாதுகாக்க அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறது.

இலங்கை அரசு நடுநிலையான பன்னாட்டு நீதியாளர்களைக் கொண்டு ஒரு விசாரணை நடத்த வேண்டும் என்று கோரி இங்கிலாந்து, ஜெர்மனி, கனடா போன்ற 6 நாடுகளால் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் கொண்டுவரப்பட்ட ஒரு தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என்று தமிழ்நாட்டின் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, கூட்டணிக் கட்சிகள் என்று அனைத்து தரப்பும் வேண்டுகோள் விடுத்த நிலையில், இந்தியா தீர்மானத்தை ஆதரிக்காமல், வாக்களிக்காமல் புறக்கணித்தது. இது ஒட்டுமொத்த தமிழகத் தமிழர்களையும், ஈழத் தமிழர்களையும், உலகத் தமிழர்களையும் புறக்கணிக்கும் செயலாகும். எட்டு கோடித் தமிழக மக்களை துச்சமாக இந்திய

அரசு கருதுகிறது.

**#தமிழர்கள்_என்பதாலேயே_விடுதலை_மறுக்கப்படும்_ சிறையாளிகள்:**

ராஜீவ் காந்தி கொலையில் நேரடித் தொடர்பற்ற பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை 29 ஆண்டுகளாகச் சிறையிலடைத்து வைத்துள்ள நிலையில், அவர்களைத் தமிழக அரசே விடுவிக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டும், தமிழக அமைச்சரவை அதற்கான தீர்மானத்தை இயற்றி ஏற்பளிப்பிற்காக தமிழக ஆளுநரிடம் (2018) அளித்தும், இன்று வரை ஆளுநர் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறார். சிறையில் இருப்பவர்கள் தமிழர்கள் என்ற ஒற்றைக் காரணத்தாலேயே இந்திய பாசிச பா.ஜ.க வின் முகவர் ஆகிய ஆளுநர் இவ்வாறு செயல்படுகிறார்.

**#அடிமைப்பட்ட_இனத்துக்கு_உள்_இடஒதுக்கீடு_செய்துகொள்ள _உரிமைஉண்டா?**

தமிழக அரசு ஏழை மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் இடம் பெறும் வகையில், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு உள் ஒதுக்கீடு செய்த நிலையில், அதற்கு ஒப்புதல் தராமல் ஆளுநர் தாமதப்படுத்தினார். மாநில அரசு ஒவ்வோர் அசைவிலும் அவமானப்படுத்தப்படுகிறது.

**#கொரோனா_முடக்கத்தில்_அடிமைகள்_மருந்து_வாங்க_அனுமதி _உண்டா?**

கொரோனா வைரஸ் தாக்குதலிலிருந்து மக்களைக் காக்க, சீனாவிலிருந்து ஆய்வுக் கருவிகளை தமிழக அரசு இறக்குமதி செய்யும் நிலையில், தன் அனுமதி இன்றி அக்கருவிகளைத் தமிழக அரசு பெற்று விடக் கூடாது என்று பாஜக அரசு கருவிகளை இடைமறித்துக் கைப்பற்றி தான் விரும்பும் வேறு நாடுகளுக்கு அனுப்பி வைத்தது.

முடக்கக் காலத்தில் பட்டினியில் மக்கள் பரிதவித்த போது, சரக்கு-சேவை வரி என்ற பெயரில் தமிழ்நாட்டின் வரி வருவாயைக் கைப்பற்றிக் கொண்ட இந்திய பா.ஜ.க அரசு தமிழகத்திற்குச் சேர வேண்டிய பங்கைப் பல முறை வேண்டிக் கேட்டுக் கொண்டும் தரவில்லை. இறுதியாக, "பெரிய மனதுடன்" 9,627 கோடி வெளியில் கடன் பெறுவதற்கு தமிழக அரசுக்கு அனுமதி அளித்தது.

#பாசிச_ஆண்டை_அரசு!

2014இல் பதவியேற்றது முதல் நரேந்திர மோடியின் தலைமையிலான பாஜக அரசு மாநில அரசுகளின் உரிமைகளை மொட்டை அடித்து வருகிறது. இந்திய அரசியல் சட்டத்தை மாற்றாமலே, ஒரு சர்வாதிகார பாசிச ஆட்சியை நடைமுறைப்படுத்தி வருகிறது.

இந்துத்துவக் கொலையாளிகளை சிறையிலிருந்து விடுதலை செய்கிறது.

மதசார்பின்மை பேசும் சமூகச் செயல்பாட்டாளர்களை, சிந்தனையாளர்களைச் சிறையில் அடைக்கிறது. இந்துத்துவத்தை எதிர்க்கும் சமூகச் செயல்பாட்டாளர்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள்.

உத்தரபிரதேசத்தில் யோகி ஆதித்யநாத் பதவியேற்ற 2017 மார்ச்சு மாதத்துக்குப் பிறகு, ஒரே ஆண்டில் 1,240 பேர் 'என்கவுன்டர்' செய்யப்பட்டுள்ளனர். இந்து ராஷ்டிரா உருவாக்கத்திற்குத் தடையாக இருப்பவர்களைக் காணாமலடித்து வருகிறது. உத்தரபிரதேச யோகி ஆதித்யநாத் ஆட்சியில் இந்து மத வெறியர்கள் கருவிகளோடு நாடு முழுவதும் வலம் வருகின்றனர். முழு இந்துத்துவ இந்தியாவை ஆர்.எஸ்.எஸ் உருவாக்கத்தின் நூறாவது ஆண்டான 2025ல் படைத்து விட திட்டமிடப்பட்டிருக்கிறது.

# ஆளுநர்_என்ற_அராஜகம்!

மக்களுக்கு எவ்விதத்திலும் தொடர்பற்ற, ஆளுநர் என்ற ஒற்றை முகவரைக் கையில் வைத்துக்கொண்டு, தமிழக மக்களின் அத்தனை உரிமைகளையும் இந்திய ஒன்றிய அரசு முடக்கிப் போடுகிறது.

பா.ஜ.க நேரடியாக ஆளாத மாநிலங்களை ஆளுநர்கள் மூலமாகவோ, துணைநிலை ஆளுநர்கள் மூலமாகவோ பா.ஜ.க ஆளுகிறது. அம்மாநில அமைச்சர்கள் அஞ்சி ஒடுங்குகிறார்கள். உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் காலைத் தொட்டு வணங்குகிறார்கள். அப்படி அஞ்சாத முதலமைச்சர்களின் கால்கள் உடைக்கப்படுகின்றன. டில்லி சட்டமன்றத்தில் ஒரு மசோதாவைக் கொண்டு வருவதாக இருந்தால், டில்லி துணைநிலை ஆளுநரின் அனுமதி பெற வேண்டும் என்று

நாடாளுமன்ற மாநிலங்களவையில் சட்டமியற்றி விட்டார்கள்.

**#மாநிலத்_தகுதியையே_ஒழித்துக்கட்டும்_சர்வாதிகாரம்!**

காஷ்மீர் மாநிலத்துக்குச் சிறப்புத் தகுதியை வழங்கியிருந்த இந்திய அரசியல் சட்ட கூறு 370 நீக்கப்பட்டு, காஷ்மீரின் மாநிலத் தகுதி பிடுங்கப்பட்டு, காஷ்மீரிகளின் தாயகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, 2 ஒன்றியப் பகுதிகளாக ஆக்கப்பட்டுள்ளது. காஷ்மீருக்கு ஏற்பட்ட இந்நிலை தமிழகத்துக்கும் ஏற்படலாம். முழு இந்தியாவும் ஆர்.எஸ்.எஸ் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுகிறது.

**#மக்களால்_தேர்ந்தெடுக்கப்பட்ட_அரசுகளைக்_கவிழ்க்கும்_ கயமை!**

2014இல் 7 மாநிலங்களில் ஆட்சி செய்த பாஜக, சூழ்ச்சிகளின் மூலமாக 2018இல் 21 மாநிலங்களில் ஆட்சி அதிகாரத்தை பிடித்தது. 'அரசியல் ஆபரேஷன்' என்ற பெயரில் மாநில ஆட்சிக் கவிழ்ப்புகளை நடத்தி, ஆட்சியைக் கைப்பற்றி வருகிறது. இப்போது 17 மாநிலங்களில் ஆளுநர்கள் ஆர்.எஸ்.எஸ். காரர்கள். ஆளுநர்களின் இல்லங்கள் ஆர்.எஸ்.எஸ் அலுவலகங்களாகச் செயல்பட்டு வருகின்றன.

**#மாநிலங்களின்_அனைத்துத்_துறைகளையும்_தன்_ அதிகாரத்துக்குக்கீழ்_கொண்டுவரும்_சர் வாதிகாரம்!**

இந்திய ஆட்சிப் பணி மட்டுமின்றி, மாநில அரசுப் பணிகளுக்கும் மத்திய அரசே இனி பொதுத் தேர்வு நடத்தும் என்று பாஜக அரசு அறிவித்துள்ளது. இனி மாநில அரசுப் பணிகளும் பாஜகவின் கையில்தான்.

'நீட்' தேர்வு அறிவிப்பு மாநிலக் கல்வித் திட்டத்தில் படித்த மாணவ மாணவியர்கள் மருத்துவக் கல்வி பெற முடியாத சூழலை உருவாக்கியதைப் போன்றே, இப்போது இந்தியா முழுவதும் அனைத்துக் கலை, அறிவியல் உயர் கல்விகளுக்கும் நுழைவுத் தேர்வை பாஜக அரசு அறிவித்துள்ளது. இனி ஏழை, எளியவர், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோருக்கு உயர் கல்வி வாய்ப்புகள் மறுக்கப்படும்.

இந்திய மருத்துவச் சேவைகள் (Indian Medical Services) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு மொத்த சுகாதாரப் பணியும் இந்திய அரசின் நேரடி கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுகிறது. இனி ஏழைகளுக்கு மருத்துவம் பெறும் வாய்ப்புகள் கிடையாது.

இந்திய நீதிப் பணித்துறை என்ற பெயரில், நீதிபதிகளாக நியமனம் பெறும் வாய்ப்பையும் பாஜக அரசு தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருகிறது. அகில இந்தியப் பொது தேர்வு நடத்தி அதில் தேர்ச்சி பெற்றால் மட்டுமே மாநிலங்களிலுள்ள கீழமை நீதிமன்ற நீதிபதிகளும் நியமனம் பெறுவார்கள் என்று அறிவிக்கிறது. இனி சாமானிய சாதிகளில் இருந்து நீதிபதிகள் வர மாட்டார்கள்.

பல்கலைக்கழகங்களை பாஜக அரசு ஆர்.எஸ்.எஸ்.இன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருகிறது. தமிழ்நாடு அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கும், இசை மற்றும் கவின் கலைகள் பல்கலைக்கழகத்திற்கும், அண்ணா பல்கலைக்கழகத்திற்கும், துணைவேந்தர்களாக ஆர்.எஸ்.எஸ்.காரர்களை ஆளுநர் நியமித்துள்ளார். தமிழகத்தில் உள்ள 22 பல்கலைக்கழகங்களும் ஆர்.எஸ்.எஸ்.காரர்களால் நிரப்பப்பட இருக்கின்றன.

**#இந்துத்துவ_இந்தியா_படைக்க_காவிக்_கல்விக்_கொள்கை!**

கல்வித்துறை முழுவதுமே காவி மயமாக்கப்பட இருக்கிறது. எதிர்கால இந்துத்துவ இந்தியாவைப் படைக்க தேசியக் கல்விக் கொள்கை என்ற பெயரில் ஆர்.எஸ்.எஸ். வகுத்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.

இனி, 30 விழுக்காடு மாணவர்கள் பதிவு குறைந்தால் பள்ளிகளை மூடி விடுவது; ஆயிரம் பேருக்குக் குறைந்தால் கல்லூரிகளை மூடி விடுவது; மூன்றாவது, ஐந்தாவது, எட்டாவது வகுப்புகளுக்கு இனி ”பொருத்தமான அதிகாரிகளால்” நடத்தப்படும் பள்ளித் தேர்வு; எட்டாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரையிலும் பொதுத் தேர்வு நடத்துவது; எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு அளிக்கப்படும் மூன்று வாய்ப்புகளில் அவர்கள் தேர்ச்சி அடையா விட்டால் கல்வியை விட்டு வெளியேறி வேலைகளைக் கற்கப் போய்விட வேண்டும் என்று பரிந்துரைக்கிறது நிபுணர் குழு அறிக்கை.

குறைகூலித் தொழிலாளர்களை உருவாக்குவது, சமூகநீதியை ஒழித்துக் கட்டுவது, இந்தி-சமஸ்கிருத மொழிகளைத் திணித்து இந்து இந்தியாவைப் படைப்பது; ஐந்தாம் வகுப்புக்கு மேல் தமிழை ஒழித்துக் கட்டுவது; 8ஆம் வகுப்பிலிருந்து சமஸ்கிருதத்தைக் கட்டாயமாக்குவது. இந்து வேத, புராண, இதிகாச, சாஸ்திர, வர்ணாசிரம , சாதியச் சிந்தனைகளால் மாணவர் மண்டைகளை நிரப்பி, பார்ப்பனிய மேலாண்மையை நிரந்தரப்படுத்துவது என்று திட்டம் வகுத்து செயல்படுகிறது.

#மூலத்தை_இழந்து_சீரழிந்துபோன_தமிழக_அரசியல்!

இதுவரை தமிழ்நாட்டின் அரசியல் என்பது ஆரியப் பார்ப்பனியத்தை எதிர்கொள்வதை மையமாகக் கொண்டிருந்தது. பார்ப்பனியத்தின் அரசியல் வடிவமான இந்திய தேசியத்தை தமிழக அரசியல் ஆளுமைகள் எதிர்த்து நின்றன. ஆரியத்தை எதிர்த்து களத்தில் நின்ற திராவிடக் கட்சி தேர்தல் களத்திற்கு வந்தபிறகு தன் மூலத்தை இழந்தது. ஆரியத்தை எதிர்த்து அறிவூட்டிய அண்ணா, 1967இல் ஆரியத்துடன் உறவாடத் தொடங்கினார். ராஜாஜியின் சுதந்திரா கட்சியுடன் தேர்தல் கூட்டணி அமைத்தார். தமிழக தன்மான அரசியலின் சரிவு தொடங்கியது. மூலத்தை இழந்த திராவிடக் கட்சி இந்திய தேசியத்துடன் உறவாடியது. நாடாளுமன்ற உறுப்பினர் இடங்களை தேர்தலில் கூட்டணி வைத்து இந்திய தேசியக்கட்சியான காங்கிரசுக்கு விட்டுப் கொடுப்பதும், அதிக சட்டமன்ற இடங்களைத் தனக்குப் பெற்றுக் கொள்வதும் என இந்திய தேசியக் கட்சியோடு பேரம் பேசும் ஓர் அரசியலை திமுக தொடங்கி வைத்தது.

நடுவண் அரசில் இருந்த காங்கிரஸ் ஆனாலும் ,அடுத்து வந்த பாஜக ஆனாலும் ,ஆரியத்தை ஏற்காத ,எதிர்க்கின்ற தமிழ்நாட்டின் மீது கேடுகளை அள்ளித் திணித்து வந்திருக்கின்றன. இந்திய அரசு ஊழல் மிக்க தமிழக ஆட்சியாளர்களை அச்சுறுத்தி ,பணிய வைத்து ,மேலாண்மை செய்து வருகிறது.

#கங்காணிகளையும்_நீக்கிவிட்டுநேரடியாக_ஆளுகை_செய்ய_முற்படும்_RSS_பா_ஜ_க!

2014 க்குப் பிறகு தமிழக ஆட்சியாளர்களை அடிமைகளாக நடத்தி பா.ஜ.க.வின் இந்திய ஒன்றிய அரசு ,தன் விருப்பப்படி ஆட்டி வைக்கத் தொடங்கியது. இதுவரை தேர்தல் மூலம் பதவியில் அமர்ந்த கங்காணிகளின் மூலமாக மாநிலங்களை ஆட்சி செய்து வந்த பார்ப்பனிய

இந்திய அரசு ,இப்போது2021 ,ல் மாநில அரசில் சமமான பங்காளியாக இருந்து அதிகாரம் செலுத்த விரும்புகிறது. தமிழகத்தில் அதிமுக என்ற மாநில கட்சியிடம் கேட்டு 20 தொகுதிகளைப் பெற்று பாஜக போட்டியிடுகிறது.

திமுக மற்றும் அ.தி.மு.க. இவற்றில் தேர்தலில் வெல்லும் கட்சி எதுவாக இருந்தாலும் , எதிர்காலத்தில் ,பாஜகவின் ஒன்றிய அரசுக்கு அஞ்சி ,நடுங்கி ,பணிந்து ,உடன்பட்டு நடப்பார்களா அல்லது உடன்படாமல் எதிர்த்து நிற்பார்களா என்று நாம்எதையும் உறுதியாகக் கூற முடியாது.

ஆனால் ,அதிமுக கூட்டணியில் 20 இடங்களைப் பெற்று பாஜக போட்டியிடுவது தமிழகத்திற்கு பின்னால் விளைய இருக்கும் பெருங்கேட்டின் முன்னறிவிப்பாகும். தமிழக மண்ணில் இந்துத்துவ நச்சு செடி நேரடியாக வேர் பிடித்து வளர முயற்சிக்கிறது. இதுவரை தமிழ்நாடு என்ற மாநிலத்தில் தமிழகக் கட்சித் தலைவர்கள் இந்திய அரசின் கங்காணிகளாகச் செயல்பட்டார்கள். இதுவரை கங்காணிகளின் மூலமாக ஆரியம் தமிழகத்தை ஆண்டது. ஆனால் இப்போது நேரடியாகவே மாநில அளவில் அதிகாரத்தைக் கைப்பற்றி ஆள முயற்சி செய்கிறது.

'நடுவண் அரசு ஒன்றே போதும் ,மாநில அரசு என்ற ஒன்று தேவையேயில்லை 'என்ற கருத்தைக் கொண்டிருக்கும் கட்சி பா.ஜ.க. மாநிலங்கள் என்பவைஅரசியல் அலகுகள் ;அவற்றை வெறும் நிர்வாக அலகுகளாக மாற்றும் நோக்கத்தோடு செயல்படும் கட்சி பாஜக. இந்தியாவில மொழிவாரி மாநிலங்களை ஒழித்துக்கட்டி' 200 ஜனபதா'க்களாக (நிர்வாக அலகுகளாக) மாற்றிவிடும் திட்டத்தை வைத்திருக்கிறது. அவ்வாறு செய்ய இந்திய அரசியல் சட்டத்தில் இடம் இருக்கிறது) அ.ச.கூறு.(3

**#நெருங்கிவரும்_இந்து_ராஷ்டிரத்_திட்டம்**

இந்தியாவை இந்து ராஷ்டிரம் ஆக அறிவித்து விட வேண்டும் என்பதற்காக ,சிறுபான்மை சமயங்களை ஒழித்துக் கட்டும் திட்டத்தை கையில் வைத்திருக்கிறது ,இஸ்லாமியர் ,கிறிஸ்தவர் ஆசியோரின் குடியுரிமையைப் பறித்து அவர்களை நாட்டை விட்டு விரட்டுவது அல்லது முகாம்களில் அடைத்து விடுவது என்ற கொடூரத் திட்டத்தை வைத்திருக்கிறது. அச்சத்தினால் சிறுபான்மை மதத்தவர்கள் தம் மதத்தைக் கைவிட்டு இந்துமதத்திற்கு வருவதாக இருந்தால் , அவர்களுக்கு சூத்திரத் தகுதி வழங்கி நாட்டில் வாழ அனுமதி அளிப்பதாக இருக்கிறது. இந்திய அரசியல் சட்டத்தின் சமூகநீதிக் கூறுகள் முற்றிலுமாக வெட்டப்பட இருக்கின்றன.

ஆரியப் பார்ப்பனிய பேரரசாக இந்தியாவை மாற்றியமைக்கும் திட்டத்துடன் ,மாநில அரசுகளையும் கைப்பற்றிக் கொள்ள விரிவான திட்டத்தோடு களமிறங்குகிறது பாரதிய ஜனதா கட்சி.

தமிழர்களை ஒரு தேசியஇனம் என்று ஏற்காத இந்திய அரசியல் சட்டத்தை தமிழகத் தலைவர்கள் எப்படி ஏற்றுக் கொள்கிறார்கள்?

நாங்கள் ஒரு தேசிய இனம் ;ஒரு தேசிய இனத்திற்கென உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட தகுதியையும் ,உரிமைகளையும் அளிக்கிறாயா ,இல்லையா - ?என்று உரிமை முழக்கத்தை எழுப்பாமல் ,இந்திய த்துக்குக் கட்டுப்பட்டு ,மாநிலத்திற்குள் கங்காணி அரசை அமைக்க ஆளாய்ப் பறப்பது அவமானகரமானதாகும்.

இந்திய அரசியல் சட்டத்துக்கு விசுவாசமாக இருப்பதாக உறுதிமொழி கொடுத்து மாநிலத்தில் அதிகாரத்திற்கு வரக்கூடியவர் எவராக இருந்தாலும் ,கங்காணியாக இருக்க முடியுமே ஒழிய ,தேசிய இனஉரிமை எதையும் பெற்றுவிட முடியாது.

கடந்தகாலத்தில் தேர்தல் அரசியலுக்குள் புகுந்து மூலக் கொள்கையை இழந்தவர் அறிஞர் அண்ணா. ஆனால் ,பிரச்சினைகளை நன்கு உணர்ந்தவர்.

1961இல் இப்படிப் பதிவு செய்தார்:

“அடிப்படைப் பிரச்சினை தமிழ்நாடா?திராவிட நாடா ?என்ற அளவு ,முறை ,வகை என்பதுதானா ?அல்ல. அடிப்படைப் பிரச்சினை இந்தியப் பேரரசு என்ற ஒன்றின் கீழ் அடிமையாக இருக்கத்தான் வேண்டுமா ?அல்லது விடுபட்டுத் தனிஅரசு ஆகவேண்டுமா என்பதுதான்“…

“அடிப்படை பிரச்சினை’ ஏக இந்தியா ‘எனும் பொறி உடைக்கப்பட்டாக வேண்டும். இந்தியப் பேரரசு எனும் திட்டம் தகர்க்கப்பட்டாக வேண்டும் என்பதுதான் என்பதை மறத்தல் ஆகாது.“
(தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள் ,எண்.(18.6.1961 ,144

இந்திய சனநாயகம் பார்ப்பன - பனியா – இந்தி - இந்து மேலாதிக்கத்தை சனநாயக

முறையிலேயே நிலைநிறுத்துகிறது. இந்திய மக்களாட்சி இந்தி மொழியின மேலாதிக்கத்தை பிற மொழி இனங்கள் மீது உறுதிப்படுத்துகிறது. இத்தகைய பிரச்சினைக்கு உலகளாவிய அளவில் ஏற்கப்பட்ட தீர்வுதான் என்ன?

சிறியதோ பெரியதோ ஒரு தேசிய இனம் தனக்கான தேசத்தை உருவாக்கிக்கொள்ள உரிமை படைத்தது. உலக ஒப்பந்தங்கள் மற்றும் மனித உரிமைப் பிரகடனம் ஆகியவற்றின்படி தேசிய இனங்களுக்கு இவ்வுரிமை அதன் பிறப்புரிமை. ஆனால் இந்திய அரசியல் சட்டம் இந்தியாவில் தேசியஇனங்கள் இருப்பதாகவே ஏற்கவில்லை. ஆகவே ,இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள தேசிய இனங்கள் தங்களுக்கான உரிமைகளை இந்திய அரசியல் சட்டப்படி ஒரு போதும் நிலைநாட்டிக் கொள்ள முடியாத நிலை இருக்கிறது.

**#இந்திய_சனநாயகத்தின்_பெயரில்_நிலை_நிறுத்தப்படும்_சர்வாதிகாரம்**:

இந்திய நாடாளுமன்றத்தில் லோக்சபை எனப்படும் கீழவையில் உள்ள 543 உறுப்பினர்களில் 255பேர் இந்திக்காரர்கள். வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ,இந்தி மாநிலங்களைச் சேர்ந்த இவர்கள் இந்தி மற்றும் சமஸ்கிருத மேலாண்மையை நிலைநிறுத்துவதில் ஒன்றுபட்டு நிற்கிறார்கள். நாடாளுமன்றக் கீழவைக்கு தமிழகம் 39உறுப்பினர்களை அனுப்பி வைக்கிறது. புதுச்சேரியில் இருந்து ஒருவர் என தமிழர்களுக்காகப் பேச 40 உறுப்பினர்கள் உள்ளனர். தமிழர்களான இவர்கள் 543 ,பேர் உள்ள இந்திய நாடாளுமன்றத்தில நிரந்தரச் சிறுபான்மையர். நாடாளுமன்ற மேலவையில் (ராஜ்யசபை) உள்ள 245 உறுப்பினர்களில் 114 பேர் இந்திக்காரர்கள். இந்திக்காரர்கள் நிரந்தரப் பெரும்பான்மையர். 18 பேர் மட்டுமே தமிழர்கள். இவ்வாறு இந்திய நாடாளுமன்றத்தில் இந்தி மாநிலங்கள் நிரந்தர மேலாதிக்கத்தைப் பெற்று விளங்குகின்றன. மேலும் ,இந்துத்துவ ,இந்துமதவாத உணர்வுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி வரம்பு கடந்து ஒன்றுபட்டு நிற்கின்றனர். தற்சமயம் இந்திய நாடாளுமன்றக் கீழவையில் பா.ஜ.கவுக்கு 303 உறுப்பினர்கள் உள்ளனர். ஆகவே எந்தக் கட்சியின் ஆதரவையும் எதிர்பார்க்காமல் தன்னுடைய பாசிசச் சட்டங்களை பாஜக நிறைவேற்றி வருகிறது.

இந்த நாசகாரச் சட்டங்களுக்கு தமிழகத்தில் இருந்து செல்லக்கூடிய உறுப்பினர்கள் பார்வையாளர்களாக இருந்து ,அல்லது பலவீனமான எதிர்ப்பை மட்டும் தெரிவித்து ,இந்தியச் சர்வாதிகாரத்துக்கு ஒரு சனநாயக முகமூடியை அணிவிக்கும் வேலையை மட்டுமே செய்து வர

முடிகிறது. நாடாளுமன்றச் சட்டப்படியே மாநிலங்களை மொட்டையடிக்க முடிகிறது. ஆகவே , மொழியினங்களின் உரிமைகளை வாக்குச் சீட்டு காத்து விடவில்லை. சனநாயகமான தேர்தல் முறை மூலமாகவே ஒரு இந்திமொழியினத்தின் சர்வாதிகாரத்தைப் பிறமொழியினங்கள் மீது இந்திய அரசியல் சட்டம் நிலைப்படுத்தி இருக்கிறது.

ஆகவே ,தமிழ்த் தேசிய இனமாகிய எங்களுக்கு இந்தித் தேசிய இனத்துக்கு இணையாக உரிமையும் ,அதிகாரமும் வழங்கப்படவில்லை என்பதால் இத்தேர்தல் முறையை ஏற்க முடியாது , இதில் பங்கெடுக்க முடியாது என்று கூறுவது சரியானதே ஆகும். இந்தியாவை ஓர் உண்மையான கூட்டாட்சியாக மாற்றிவிட்டு ,மாநிலங்கள் அவையில் அனைத்து மாநிலங்களுக்கும் சமமான உறுப்பாண்மை அளித்துவிட்டு ,தேர்தலில் பங்கேற்கக் கூறுவதே நியாயமானதாகும்.

#உலக_ஒப்பந்தங்களும்#,தமிழ்த்தேசிய_இனத்தின்_தன்னுரிமையும்

தமிழ்த் தேசிய இனம் தன் தகுதியை உணர்ந்திருக்கிறது. இதுவரை வரையப்பட்டுள்ள அனைத்து அரசியல் அறிவியல் வரையறுப்புகளின்படி ,தமிழர்கள் ஒரு தேசிய இனம் ஆவர்.

முதல் உலகப்போரின்போது வெளியிடப்பட்ட அட்லாண்டிக் சாசனப்படியும் ,முதல் உலகப்போரின் இறுதியில் உருவாக்கம்பெற்ற பன்னாட்டு மன்ற (League of Nations) விதிகளின்படியும் ,இரண்டாம் உலகப் போரின் இறுதியில் உருவாக்கம் பெற்ற ஐக்கிய நாடுகள் சாசனப்படியும் ( ,(1945ஐ.நா மனித உரிமைப் பிரகடனப் படியும்(1966 ,(1948ம் ஆண்டின் பன்னாட்டுக் குடிமை மற்றும் அரசியல் உரிமை ஒப்பந்தப்படியும் (International Covenant on Civil and Political Rights, 1966), தமிழர்கள் ஒரு தேசிய இனம் ;தன்னுரிமைக்குத் தகுதியானவர்கள் ;தனித் தேசத்தை அமைத்துக்கொள்ள உரிமை படைத்தவர்கள்.

ஒரு தேசிய இனம் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அது இறையாண்மையுள்ள தேசத்தைப் படைத்துக்கொள்ளலாம். அல்லது ,பிரிந்து போகும் உரிமையுடன் பிற தேசங்களுடன் சேர்ந்தும் இருக்கலாம்.

போரிட்டுத்தான் ஒரு தேசம் பிரியவேண்டும் என்பதில்லை. செக்கோஸ்லோவேகியா அமைதியாக இருநாடுகளாகப்பிரிந்து சென்றதை" வெல்வெட் டைவர்ஸ்) "Velvet Divorce) என்று

குறிப்பிடுகிறோம். இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு ஏராளமான நாடுகள் இறையாண்மையுள்ள தேசங்களாக உருவெடுத்தன.1991 இல் ஸ்லோவேனியா (மக்கள் தொகை 20 இலட்சம்) 1993 ,இல் மாசிடோனியா ( 20இலட்சம்)1994 ,இல் குரோஷியா ( 44இலட்சம்) ,போஸ்னியா ( 40இலட்சம்) , செர்பியா ( 104இலட்சம்) ,செர்பியாவிலிருந்து பிரிந்து கொசாவோ ( 20இலட்சம்) ,மாண்டிநிக்ரோ ( 8 இலட்சம்) ஆகியவை உருவாயின.

சனநாயகம் செழித்த ஐரோப்பாவில் ,போர்ச்சுகல் - 1 கோடி ,ஸ்பெயின் - 4 கோடி ,போலந்து- 4கோடி ,பிரிட்டன் - 6 கோடி ,பிரான்சு –6கோடி ,ஜெர்மனி - 8 கோடிமக்கள் தொகை கொண்டவை. தமிழகத்தின் மக்கள் தொகை2011 இல்7.21 கோடி.

எந்த ஐரோப்பிய நாட்டை விடவும் தமிழகம் சிறியது அல்ல. இன்று ,உலகில் தமிழகத்தைவிட குறைந்த மக்கள்தொகை கொண்ட நாடுகள் :178 உலகில் தமிழகத்தை விடக் குறைந்த நிலப்பரப்பு கொண்ட நாடுகள் 107 உள்ளன.

**#தேர்தல்_அரசியலால்_தமிழினம்_ஈட்டியதும்_இழந்ததும்:**

தேர்தல் என்று அறிவித்துவிட்டால் ,ஓடிப்போய்ப் போட்டியிட வேண்டும் ;மற்றவர்கள் வாக்களித்துவிட வேண்டும் என்று கருதுவது சரிதானா?

கடந்த 70 ஆண்டுகளில் தேர்தல் அரசியலில் பங்கேற்று தமிழகம் ஈட்டியது என்ன ?இழந்தது என்ன?

சுதந்திர இந்தியாவில் தமிழகம் ஏராளமாக இழந்திருக்கிறது. ஆங்கிலேயர்கள் காலத்தில் கொண்டுவரப்பட்ட இந்திய அரசியல் சட்டம் - 1935 இல் மாகாணங்களுக்கு சுயாட்சி வழங்கப்பட்டிருந்தது. அதைவிட ,இந்தியக் குடியரசு அரசியல் சட்டம்- 1950 மாநிலங்களுக்குக் குறைவான அதிகாரத்தையே வழங்கியது.1950 இல் மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைவிட இன்று மாநிலங்கள் குறைவான அதிகாரங்களையே பெற்றிருக்கின்றன.

ஆங்கிலேயர்கள் பாதுகாத்துக் கொடுத்த காவிரி ஆற்று நீர் உரிமையை இந்திய அரசு இப்போது பறித்தெடுத்துக் கொண்டது. காவிரி ஆற்றை நடுவண் அரசின் கட்டுப்பாட்டில்' ஜல் சக்தி துறை'யின் கீழ் கொண்டுசேர்த்திருக்கிறது. அணைகள் பாதுகாப்புச் சட்டம் என்று சட்டமியற்றி

அணைகளை மாநிலங்களிடமிருந்து பிடுங்கிக் கொள்கிறது. நுழைவுத்தேர்வுகள் மூலம் தமிழ் மாணவர்களின் வாய்ப்புகளைத் தட்டிப் பறிக்கிறது. இப்படி எண்ணற்ற உரிமைகளைப் பறிகொடுத்து இருக்கிறோம்.

தேர்தலில் பங்கேற்கும் வேட்பாளர்" என்னை முதலமைச்சர் ஆக்குங்கள்! தமிழ்நாட்டின் பிரச்சினையெல்லாம் தீர்ந்து போகும்! "என்று கூறினால் ,அது எவ்வளவு பெரிய பித்தலாட்டம்! இதைக் கேட்டு ஆரவாரம் செய்வது எவ்வளவு பெரிய அறியாமை!

#தமிழகக்_கட்சிகள்_உரிமை_மீட்புக்கு_என்ன_திட்டம்_வைத்திருக்கிறார்கள்*?

தேர்தலில் போட்டியிட்டு மாநிலத்தில் ஆட்சியமைக்கும் திமுக ,அதிமுக கட்சிகளிடையே நலத்திட்டங்கள் வழங்குவதில் பெரும் போட்டி நிலவுகிறது. தமிழ்நாட்டின் கடன் 5.70 இலட்சம் கோடியாக வளர்ந்திருக்கிறது. இதற்கு வட்டி கட்டுவதே பெரும் பிரச்சினை. ஆனாலும் இலவசத் திட்டங்களின் விரிவாக்கம் நடந்து கொண்டே இருக்கிறது.

ஆனால் ,தமிழ்நாட்டின் உரிமை எதுவுமே மீட்டெடுக்கப்படவில்லை. அனைத்து உரிமைகளும் இந்திய நடுவண் அரசால் பறிமுதல் செய்யப்படுகின்றன. உரிமை மீட்பு பற்றிய திட்டம் எந்தக் கட்சியிடமும் இல்லை.

இந்திய அரசியல் சட்டம் வர்ணாசிரமத்தை ,சாதியத்தை ஏற்கிறது. சமூகங்களுக்கிடையே இழிவையும் ,ஏற்றத் தாழ்வையும் உத்தரவாதப்படுத்துகிறது. வர்ணாசிரமத்தை ஏற்று உச்ச நீதிமன்றம் இன்றளவும் தீர்ப்புகளை வழங்கி வருகிறது. இந்திய அரசியல் சட்டம் இந்திக்கும் , இந்தி தேசிய இனத்துக்கும் நிரந்தர மேலாதிக்கத்தை உறுதிப்படுத்துகிறது. மாநிலங்களுக்கு எந்த உரிமையும் நிலையல்ல என்பதைப் பட்டயத்தில் எழுதிக் கொடுக்கிறது. அரசியல் சட்டக் கூறு 356 என்ற கொடுவாள் மாநில அரசுகளின் தலைக்குமேலே தொங்கிக் கொண்டே இருக்கிறது. எதன் அடிப்படையில் தேர்தலில் ஈடுபடுவது ?பதவி கிடைக்கும் ,பணம் கிடைக்கும் ,புகழ் கிடைக்கும் என்பதைத் தவிர ,இத்தேர்தலில் பங்கேற்பதில் வேறு எது கிடைக்கும் ?

மாநில முதல்வராக்கிவிட்டால் ,தமிழினத்தின் எல்லா பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்று நெஞ்சாரப் பொய் கூறலாமா?

இன ஒடுக்குமுறையை ,சுரண்டலை ,தொடரும் தீண்டாமையை ,சாதிய வன்மத்தை ஒழிக்க ,

அரசியல் சட்டம் பத்திரப்படுத்தும் வெகுமக்களின் சூத்திர ,பஞ்சமர் பட்டத்தை ஒழிக்க ,அரசியல் அமைப்பை மாற்ற எந்த கட்சி என்ன திட்டத்தை வைத்துள்ளது ?தேர்தல் எதிர்ப்புக்குரல் தேசிய இன விடுதலைக்குரலாக எதிர்காலத்தில் மாறும்.

"கல்லானாலும் கணவன் ,புல்லானாலும் புருஷன்" "இதுதான் நம் விதி "என்று கிடைத்த வாழ்க்கையை ஏற்றுக்கொண்டு வழியற்ற கிராமத்துப் பெண்கள் வாழ்க்கையை ஓட்டுவது போல , பாரபட்சமான இந்திய அரசியல் சட்டத்தை" இதுதான் நமக்கான அரசியல் சட்டம் ;இனி வேறு வழியில்லை "என்று ஏற்றுக்கொண்டு ,அந்த அரசியல் முறைமைக்குள்ளேயே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு இருப்பதாக அனைவரையும் நம்பவைத்து ,தனக்கான செல்வாக்கான அரசியல் வாழ்வை உருவாக்கிக்கொண்டு ,பிழைப்புவாத அரசியல் செய்து காலத்தை ஓட்டுவதைத் தமிழ்த்தேசியர்கள் ஏற்க முடியுமா ?தங்களுடைய தேர்தல் மறுப்பை தேசியஇன விடுதலைப் போராட்டத்தின் ஒரு வடிவமாகக் கருதித்தான் ,தமிழ்த்தேசிய அரசியலாளர்கள் வாக்களிக்க மறுக்கிறார்கள்!

**#தீர்வு_நோக்கி**

கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் ,தமிழ்த் தேச இறையாண்மை அரசியலை முன்னெடுக்க வேண்டிய தேவை தமிழ்த் தேசிய இனத்துக்கு இருக்கிறது. எந்தவொரு தேசிய இனமும் தமிழ்த் தேசிய இனத்துக்கு மேலேயும் இருக்க வேண்டியதில்லை ;கீழேயும் இருக்க வேண்டியதில்லை. ஆனால் ,இந்தித் தேசிய இனம் இங்கே மேலாதிக்கம் செய்கிறது. இந்தியும் சமஸ்கிருதமும் மேலாதிக்க மொழிகளாக இருக்கின்றன. ஆகவே ,சமமற்ற நிலை சுமத்தப்பட்டிருப்பதால் ,தேர்தல்களில் பங்கேற்க மறுக்கிறது.

பட்டினி கிடந்தவன் ஓடிப்போய் பந்தியில் உட்கார்வதைப் போல ,நாம் ஓடிப்போய் தேர்தல் குட்டைக்குள் குதிக்க முடியாது. உலகின் ஏனைய இனங்களைப் போல எம் இறையாண்மையும் ஏற்கப்பட வேண்டும். பதவிக்காகவும் ,பணத்துக்காகவும் பிழைப்புவாத அரசியலை மேற்கொள்ளாமல் ,தமிழ்த்தேச இறையாண்மை அரசியலைக் கைக்கொள்ளத் தமிழகத் தலைமைகள் முன்வரவேண்டும். அதில்தான் தமிழ்த் தேசியஇனத்தின் அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வு அடங்கியுள்ளது.

# நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில்(17)

சமந்தா

**ஆசிரியர் :**சத்யகி ராய்

## தலைப்பு :உலகளாவிய உற்பத்தி அமைப்பு



உலகளவில்1940 களிலிருந்து உற்பத்தி அமைப்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளது .அதற்கு முன்னிருந்த உற்பத்தி அமைப்பில் ஒரு பொருளை தயாரிக்க அதற்கான துறை வாரியான சிறப்புத் தேர்ச்சியும் ,நிபுணத்துவமும் பெற்றிருக்க வேண்டும்1940 .களிலிருந்து உற்பத்தி பணிகளின் அடிப்படையிலான ஒரு புதிய நாடோடித்துவம் ஏற்பட்டுள்ளது .உற்பத்தியில் விற்பனை பொருட்களின் , பகுதிப் பொருட்களை தயாரிக்கும் வெவ்வேறு பணிகள் வெவ்வேறு இடங்களில் செய்யும் முறை ஏற்பட்டுள்ளது . ஒரு பொருளை முழுமையாக உற்பத்தி செய்வது என்ற முறையிலிருந்து ,அதில் ஒரு பகுதி ஆப்பிரிக்காவிலும் , மற்றொரு பகுதி இந்தியாவிலும் தயாரிக்கப்படுகிறது . இதனால் இடம் பெயரும் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன .இத்தகைய உலகமயமாதல் காலகட்டத்தில் ஒவ்வொன்றும் இடைத் தொடர்பு கொண்டதாக உள்ளது .பணிகளை வெளித்தரப்பில் ஒப்படைக்கும் முறை) Outsourcing) ஏற்பட்டுள்ளது .துணை ஒப்பந்த செயல்பாடுகளே உலக வர்த்தகத்தில் 40 விழுக்காடு பங்கு வகிக்கிறது.

உலகின் வட பகுதியிலிருந்து தென் பகுதிக்கு உற்பத்தி அமைப்பானது மாற்றப்பட்டுள்ளது . உலகளவில் உற்பத்தித் துறையில் பணி புரிவோரில் 83 விழுக்காடு தென் பகுதியை சார்ந்தவர்களாக உள்ளனர்.

மொத்தப் பொருளாக்க மதிப்பில் வரும் மதிப்புக் கூட்டல் நடவடிக்கை வெவ்வேறு கட்டங்களாக நடைபெறுகிறது .பணப்பரிவர்த்தனைக்குள் வராத எந்த வேலையும் மொத்தப் பொருளாக்க

மதிப்பின் கணக்கில் சேர்க்கப்படாது.நான் ஒரு விரிவுரையை இலவச சேவையாக அளித்தால் அது மொத்தப் பொருளாக்க மதிப்பீட்டில் வராது .வளர்ந்த நாடுகள் மொத்த மதிப்புக் கூட்டலில் 69 விழுக்காடும் ,வேலைவாய்ப்பில் 17 விழுக்காடும் பங்கு வகிக்கின்றன .உலகின் முதன்மையான மிகப்பெரிய 500 நிறுவனங்கள் ,உலகின் மொத்த வருவாயில் 40-35 விழுக்காடு வரை பெறுகின்றன.

முதன்மையான முதல் பெரும் 100 நிறுவனங்கள் தயாரிப்பு ,விற்பனையில் 60 விழுக்காட்டை வெளி நாடுகளுக்கு பெயர்த்துள்ளனர் .அதில் முதல் 10 நாடுகளில் 7 நாடுகள் வளரும் நாடுகள் . சர்வதேச அளவில் ஓரலகு உழைப்புக்கான கூலி அடிப்படையில் போட்டி ஏற்படுகிறது .உற்பத்தித் திறன் அதிகரிக்கும் போது ,அதற்கேற்ப ஓரலகு உழைப்புக்கான கூலி அதிகரிப்பதில்லை . பெரும்பாலான பன்னாட்டு நிறுவனங்கள் வளரும் நாடுகளிலே காணப்படுகின்றன .தொழிலாளர் செறிந்த தொழிலகங்களை அதிகம் கொண்ட 10 நாடுகளில் சீனா முதல் இடத்தில் உள்ளது .

ஏற்றுமதி சார்ந்த உலகளாவிய உழைப்புச் சக்தி ,அதாவது உழைப்புச் சக்தியின் வளர்ச்சிக்கும் , மொத்த உள்நாட்டு பொருளாக்க மதிப்பில்-ஜிடிபியில் ஏற்றுமதியின் பங்கிற்கும் இடையிலான விகிதம்1980 ஐ காட்டிலும்2003 ல் நான்கு மடங்கு அதிகரித்துள்ளதாக சர்வதேச நிதி நிறுவனம் குறிப்பிடுகிறது .தொழிலாளர்களின் கூட்டுப் பேர சக்தி குறைந்துள்ளது.

உலகளாவிய கூலி ஏற்றத்தாழ்வுகளால் ,பணிகளை வெளி நாட்டுகளுக்கு மாற்றுவதன் மூலம் நிறுவனங்களின் செலவு 60-40 விழுக்காடு வரை குறைக்கப்பட்டுள்ளது .அமைப்புசார் தொழிலாளரின் சராசரி கூலியானது ,முறைசாரா தொழிலாளரின் கூலியைக் காட்டிலும்2 லிருந்து 5மடங்கு அதிகமாயுள்ளது.

மதிப்பு அபகரித்தலும் ,கூலி ஒடுக்குமுறையும்:

ஆப்பிள் ஐபேட் சீன தொழிலாளர்களின் உழைப்பை ஒட்ட சுரண்டுவதன் மூலம் தயார்செய்யப்படுகிறது .சீனாவில் ஆப்பிள் ஐபேட் தயாரிக்கும் ஃபாக்ஸ்கான் நிறுவனத்தில் வேலை செய்யும் சீனத் தொழிலாளர்களின் ஊதியம் அமெரிக்காவுடன் ஒப்பிடும் போது ,தயாரிப்பு பிரிவில் 3.2 விழுக்காடும் ,சில்லறை விற்பனையில் 6 விழுக்காடும் ,தொழில்முறை வேலையில் 1.8 விழுக்காடு மட்டுமே பெறுகிறது.

அமெரிக்காவில் அதிக மதிப்புக் கூட்டல் செய்யப்படுகிறது என்ற பெயரில் லாபத்தில் 64 விழுக்காடு அமெரிக்காவால் அபகரிக்கப்படுகிறது .மதிப்புக் கூட்டல் என்ற பெயரில் உழைப்புச் சுரண்டல் மறைக்கப்படுகிறது .இவ்வாறு சீன தொழிலாளர்களின் கூலியை குறைப்பதன் மூலமே பெரும் லாபம் பெறப்படுகிறது .சீனாவில் உற்பத்தித் திறன் குறைவு என கூலி குறைக்கப்படுகிறது , அமெரிக்க உற்பத்தித் திறன் அதிகம் என்று லாபத்தில் பெரும்பகுதி அமெரிக்காவுக்கு செல்கிறது . அமெரிக்கா ,பன்னாட்டு நிறுவன சொத்துரிமையைக் கொண்டுள்ளது .வங்களாதேசத்தில் தயாரிக்கப்படும் போலோ சட்டையின் மூலம் 1800 விழுக்காடு லாபம் பெறப்படுகிறது.

புதிய தயாரிப்புகளுக்கான வருவாயில் அறிவுசார் சொத்துரிமைக்கு 20 விழுக்காடு அளிக்கப்படுகிறது .ஆனால் தொழிலாளர்களுக்கு 2 விழுக்காடு மட்டுமே அளிக்கப்படுகிறது . நோக்யா தயாரிப்பில் லாபத்தில்51 விழுக்காடு ஃபின்லாந்தைச் சேர்கிறது .சரக்குகளின் உற்பத்திக்கு முந்தைய வடிவமைப்பும் ,உற்பத்திக்கு பிந்தைய திட்டமிடல் ,சந்தைப்படுத்தல் ஆகிய செயல்பாடுகளுமே வருவாயில் பெரும்பகுதியை ஈட்டுகின்றன என்பதையே சிரிப்பு வளைவு)smiley curve) சுட்டிக் காட்டுகிறது .ஆனால் உற்பத்திக்கு குறைந்த கூலியே அளிக்கப்படுகிறது.

ஒ.இ.சி.டி நாடுகளில் உழைப்புக்கான சராசரி பங்கு1990 களில் 66.1 விழுக்காடு இருந்தது , 2000ங்களில் 61.7 விழுக்காடாகக் குறைந்துள்ளது .அமெரிக்காவில் அளிக்கப்படும் கூலியில் வெறும் 1.5விழுக்காடு மட்டுமே இந்தியாவில் கூலிமதிப்பாக உள்ளது.

இந்தியாவில் உற்பத்தித் துறையில் மதிப்பு கூட்டலுக்கான ஊதியப் பங்கானது71-1970 ல் 29 விழுக்காடாக இருந்தது16-2015 ,ல் 12.2 விழுக்காடாகக் குறைந்துள்ளது .உலக பொருளாதாரக் கண்ணோட்டம் மதிப்புக் கூட்டலின் மூலம் பெறப்பட்ட லாபமானது75-1974 ல் 30.6 விழுக்காட்டிலிருந்து16-2015 ல் 40.3 விழுக்காடாக அதிகரித்துள்ளதாகக் குறிப்பிடுகிறது .உலகின் தென்பகுதியிலுள்ள தொழிலாளரின் உழைப்பு வடபகுதிக்கு கிடைக்கிறது .ஆனால் வடப்பகுதியிலிருந்து தொழில்நுட்ப அறிவானது தென்பகுதிக்கு பகிரப்படாமல் தடுத்து பாதுகாக்கப்படுகிறது .இதனால் தென்பகுதி தொழில் நுட்ப அறிவைப் பெற முடியாமல் தடுக்கப்படுகிறது.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

இந்தியாவில் கூலியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது .அடிமைமுறை மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது .வளர்ந்த நாடுகளில் ஒரு நிமிடம் கூட கூடுதலாகப் பணிபுரிய ஒத்துக் கொள்ள மாட்டார்கள் .ஆனால் நாம் கூடுதலாக உழைக்கும் கலாசாரத்தை ஏற்றுக் கொண்டுள்ளோம் .தொழிலாளர் குறைவாக ஊதியம் பெறுவது சர்வதேச போட்டியின் அடிப்படையில் ஒரு நாட்டிற்கு நலம் பயக்கும் என்றே பொதுவாகக் கருதப்படுகிறது.

நிதிமயமாக்கம் ,மூலதனத்தின் மேலாதிக்கம்:

1980களிலிருந்து நிதித்துறையின் பங்களிப்பு இரு மடங்காகியுள்ளது .சுதந்திரத்திற்கு பிறகு நிதித் துறையின் வளர்ச்சி மும்மடங்காகியுள்ளது ,காப்பீட்டுத்துறை ,நிதிசேவைத்துறைகளில் அதிக வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

2013ல் ஸ்வீடனில் உள்ள ஓட்டுநர் ஒரு மணி நேரத்திற்கு 890 ரூபாய் பெறுகிறார் .ஆனால் அதே நேரத்தில் டெல்லி போக்குவரத்து கழகத்தை சேர்ந்த ஒரு ஓட்டுநர் வெறும் 23 ரூபாயே பெறுகிறார் .இருவரும் வாகனம் ஓட்டுவதற்கான ஒரே திறனை தான் கொண்டுள்ளனர் . இவ்விதத்தில் கூலி வேறுபாட்டை உற்பத்தித் திறனிலான வேறுபாட்டால் ஏற்பட்டது என நியாயப்படுத்த முடியாது .உலகமயமாதலில் மக்கள் புலம்பெயர்வதற்கு தடை விதிக்கப்படாமல் இருக்குமானால் லாபம் சமமாக்கப்படும் .

தற்போது உற்பத்தித் துறைகளின் மூலம் லாபம் பெறுவதைக் காட்டிலும் நிதித்துறைகளில் முதலீடு செய்வதன் மூலம் லாபம் ஈட்டும் போக்கே அதிகரித்துள்ளது .வளர்ந்த நாடுகளிலும் , வளரும் நாடுகளிலும் கடனின் மூலமே வளர்ச்சிக்கான நிதி பெறப்படுகிறது .பொருளாதார சமமின்மை அதிகரித்து வருகிறது .நீடித்த வருவாயை உறுதிப்படுத்தும் சொத்துக்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது.நிதி சொத்துக்கள் ,நிதி வருவிப்புகள் ஆகியவற்றின் வழங்கல் குறைவதால் தரம் அல்லாத நிதிச் சொத்துக்கள் உருவாக்கப்படுகின்றன.

1980களிலிருந்து நிதி ,காப்பீட்டுத் துறை நடவடிக்கைகள் இருமடங்காகி உள்ளன .உலகளவில் மொத்த முதலீடுகள் 30 முதல் 40 பில்லியன் அமெரிக்க டாலருக்கு அதிகரித்துள்ளன.விவசாயத் தொழில் புரிந்தவர்களில் 20 விழுக்காட்டினர் விவசாயம் சாராத துறைகளுக்கு மாறியுள்ளனர்2001.லிருந்து வளரும் நாடுகளில் 227 மில்லியன் ஹெக்டேர் அளவிற்கு ,மேற்கு ஐரோப்பாவின் அளவுக்கு நிலமானது குத்தகைக்கு விடப்பட்டும் , விற்கப்பட்டும் உள்ளது .நிலம் என்பது மிகவும் முக்கியமான சொத்தாக மாறியுள்ளது.

வர்க்க நிகழ்முறை என்பது வெறும் பொருளாதார நிகழ்முறை மட்டுமல்ல .சுரண்டல் என்ற வகுப்பு நிகழ்முறையில் இரண்டு வகையான செயல்பாடுகள் உள்ளன .ஒன்று முதலாளிகள் தொழிலாளர்களை சுரண்டல் ,இரண்டாவது வங்கிகள் ,நிதித்துறையின் மூலம் செய்யப்படும் சுரண்டல் .

உலக மூலதனத்தின் கட்டளைக்கிணங்க அபாயங்களை சரக்காக்குதல் ,பாதுகாத்தல் , தரமாக்கல் ஆகியவற்றைக் கொண்ட நிர்வாக அமைப்பு உருவாகியுள்ளது.வருவாய் அதிகரித்தாலும் ,உடனடி செலவினங்கள் குறைக்கப்பட்டு ,எதிர்காலத்திற்காக செல்வத்தை சேமிக்கும் போக்கு அதிகரித்துள்ளது.நிதிமயமாக்கலின் மூலம் வருங்காலத்தில் லாபம் பெறுவதற்கான வருவிப்புகள் பல அடுக்குகளில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன .நிதி மூலதனம் எந்த ஒழுங்குமுறைக்கும் உட்படுத்தப்படவில்லை .

(தொடரும்)

# களம் காலம்

## பாசிசபாசகவைத்தோற்கடிப்போம்!



கடந்த சனவரி 20 அன்று சுமார் 70 அமைப்புகள் ஒன்றுகூடி "பாசிச பாசகவை வருகின்ற சட்டப்பேரவைத் தேர்தலில் தோற்கடிக்க வேண்டும்" என்ற முழக்கத்தை அறிவித்தன. இதன்மீது நடைபெற்றவிவாதத்திற்குப் பின் ஒருங்கிணைந்த அமைப்புகள் "மக்கள் இயக்கங்கள்" என்ற பெயருடன் முன்னகர்ந்தன. அடுத்தடுத்த மண்டலக் கூட்டங்கள் நடக்கத் தொடங்கியிருந்த நேரத்தில், பிப்ரவரி 7ஆம் நாள் இந்தப்பணிகளை ஒருங்கிணைத்துக் கொண்டிருந்த தமிழ்த்தேச மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் பாலன் உள்ளிட்ட தோழர்கள் ஓராண்டுக்கு முன்பு போடப்பட்ட பொய் வழக்கு ஒன்றில் 'ஊபா' பிரிவுகளின்கீழ் கைது செய்யப்பட்டனர். ஆயினும் இந்த கூட்டுச்செயல்பாடு முடங்கிவிடவில்லை. ஈரோடு, தஞ்சை, மதுரை, கோவை என கலந்தாய்வுக்கூட்டங்கள் நடந்தன. பாசிச பாசக எதிர்ப்புப் பரப்புரையைத் தேர்தல் களத்தில் மேற்கொள்வதற்கு ஓர்உத்தியாகமக்கள் இயக்கங்கள் சார்பாக பாசக போட்டியிடும் ஒவ்வொருதொகுதியிலும்ஒருவேட்பாளரை நிறுத்த முடிவு செய்யப்பட்டது.

ஒருகட்டத்தில் பாசக 20 தொகுதிகளில் போட்டியிடுவது உறுதியானது. வேட்பு மனுத் தாக்கலுக்கு வெறும் ஒரு வாரம் மட்டுமே கால அவகாசம் இருந்தது. பாசக போட்டியிடும் 20 தொகுதிகளில் நட்சத்திர வேட்பாளர்கள், பாசிச கொள்கை கொண்டவர்கள் போட்டியிடுவனவற்றில் மக்கள் இயக்கங்கள் வேட்பாளர்களை நிறுத்த முயன்றது.

மார்ச் 17 அன்று சென்னையில் தியாகராய நகரில் மக்கள் இயக்கங்கள் சார்பாக நடத்தப்பட்ட எழுச்சிமிகு பொதுக்கூட்டத்தில் பாசிச பாசகவைத் தமிழக மக்கள் இத்தேர்தலில் தோற்கடிக்க வேண்டும் என்ற அறைகூவல் விடுக்கப்பட்டது. இந்தப்பொதுக்கூட்டத்தில் தமிழ்த்தேசியவிடுதலை இயக்கம் சார்பில் தோழர்அருண்மாசிலாமணி உரையாற்றினார்.

**ஆயிரம்விளக்கு:**

பாசிச பாசக வேட்பாளர் குஷ்பூக்கு எதிராக மக்கள் இயக்கங்கள் செய்த 12 நாள் பரப்புரைக்கு மக்கள் தந்த பேராதரவு !

சென்னை மண்டலத்தில் ஆயிரம்விளக்கு தொகுதியில் பாசக வேட்பாளர் குஷ்பூக்கு எதிராக மக்கள் இயக்கங்கள் சார்பாக தமிழ்த்தேச மக்கள் முன்னணியைச் சேர்ந்த தோழர் பரிமளா வேட்பாளராக களம் இறக்கப்பட்டார்.

மார்ச் 20ஆம் நாள் அன்று நேர்க்காணல் முடிந்தது. 23 முதல் ஆயிரம்விளக்கு

தொகுதியில் ”பாசகவைத் ஏன் தோற்கடித்தாக வேண்டும்?” என்ற பரப்புரை தொடங்கப்பட்டது. மார்ச் 23 முதல் ஏப்ரல் 4 வரை பரப்புரை செய்யப்பட்டது. தாமஸ் ரோடு, டாக்டர் கிரியப்பா சாலை, நமச்சிவாயபுரம், புஷ்பா நகர், கிரீம்ஸ் சாலை, கோபாலபுரம், டிரஸ்ட் புரம், சூளைமேடு, சௌராஷ்டிரா நகர், ஹபிபுல்லா சாலை, ஆர்.கே.புரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் பரப்புரை செய்யப்பட்டது. இவை பெரும்பாலும். அடித்தட்டு மக்கள் வாழக் கூடிய பகுதிகளாகும். அன்றாடம் பெண் தோழர்களின் பங்கேற்பு கணிசமாக இருந்தது. பரப்புரை தொடங்கிய உடனேயே “அரண் செய்” யூடியூப் சேனல் இந்த செய்தியை வெளியுலகம் அறியத் தந்தது.

31-3-2021 அன்று டாக்டர் கிரியப்பா நகர் பகுதியில் நடந்த பரப்புரையில் சைவ, கிறித்தவ, இஸ்லாமிய சமயப் பெரியவர்கள் கலந்து கொண்டு பாசகவை ஏன் தோற்கடிக்க வேண்டும் என்று விளக்கினர். தமிழ் சைவப் பேரவையின் தலைவர் திருமதி கலையரசி நடராஜன், அருட்தந்தை குழந்தைசாமி, இமாம் உலமாக்கள் முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் கமாலுதீன் மன்பஈ மற்றும் இமாம் முகம்மது யாகூப் பைஜி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். அன்றைய பரப்புரை நிகழ்வு ‘ரெட் பிளிக்ஸ்” யூடியூப் சேனலில் வெளிவந்து பரவலான மக்களைச் சென்றடைந்தது.
பரப்புரையின் போது மக்களிடம் துண்டறிக்கை கொடுத்து ”பாசகவுக்கு வாக்களிக்காதீர்கள், குஷ்பூக்கு ஓட்டுப் போடாதீர்கள்” என்று சொன்ன போது, மக்கள் சொன்னவற்றில் சில:

“இலட்ச ரூபாய் கொடுத்தாக்கூட அவுங்களுக்குப் போட மாட்டோம்”

“அவுங்க வந்தா முழுக்க இந்திக்காரங்க வந்துருவாங்க”

“நாங்க போடவே மாட்டோம்”

“குஷ்பூவெல்லாம் வராதுப்பா..”

பாசக மீதான கோபத்தை மக்கள் இப்படிப் பலவிதமாக வெளிப்படுத்தினார்கள். விலைவாசி உயர்வு, 500 ரூ, 1000 ரூ செல்லாக் காசு அறிவிப்பு, சரக்கு சேவை வரி, தமிழர் வேலைவாய்ப்பு

பறிப்பு, கொரோனா கால இரக்கமற்ற ஊரடங்கு முதலானவற்றின் காரணமாக மக்களிடம் பாசக மீது கடுங்கோபம் இருப்பதைக் காண முடிந்தது. மேலும் நடுவண் பாசக அரசு அதிமுக தலைமையிலான தமிழக அரசை அடிமை போல் நடத்துகிறது, அதிமுகவை தன் விருப்பம் போல் வளைக்க முயல்கிறது போன்ற முன்வைப்புகள் அதிமுக ஆதரவாளர்களையும் கூட செவிமடுக்க வைத்தன.

ஹபிபுல்லா சாலையில் உள்ள ஆர்.கே.புரம் என்ற ஒரே ஒரு பகுதியில் மட்டும் பாசக மற்றும் அதிமுகவினரால் சிறு சலசலப்பு ஏற்பட்டது.

சூளைமேடு F5 காவல்நிலையத்தினர் மட்டும் பிஜேபியை விமர்சிக்கக் கூடாது என்று நமக்குப் பாடம் எடுத்தனர். நம் பரப்புரைக்கு இயன்ற வரை இடையூறு செய்தனர். அப்பகுதியில் இருக்கும் ஆர்.எஸ்.எஸ். மற்றும் பாசகவினருகு அந்தளவுக்கு அஞ்சி நடந்தனர்.

மொத்தத்தில், பாசக வேட்பாளர் குஷ்பூ வெற்றிப் பெறுவதற்கான வாய்ப்பில்லை என்பதே கள நிலவரம். பாசகவை தேர்தலில் தோற்கடிப்பதில் இந்த 12 நாள் பரப்புரை ஏற்படுத்தியுள்ள தாக்கம் ஒருபுறம். பாசிஸ்டுகள் அச்சத்தை விதைப்பதன் மூலம் மக்களை வாய்மூடச் செய்யலாம் என்று நம்புபவர்கள். பாசிச பாசகவுக்கு எதிராக ஆயிரம்விளக்கு தொகுதிக்கு உட்பட்ட தெருக்களில் முகமறியாத இளைஞர் கூட்டம் “பாசகவை தோற்கடிப்போம், அம்பானிக்கு நாட்டை விற்கும் மோடி கட்சியை தோற்கடிப்போம், தமிழர்களுக்கு எதிரான பிஜேபியை தோற்கடிப்போம்” என்று முழங்குவது பாசிச பாசகவால் மக்களிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள அச்சத்தைப் போக்கத் துணை செய்திருக்கும் என்பதை உறுதியாக சொல்ல முடியும்.

சங் பரிவார பாசிசத்திற்கு எதிரான நீண்டகாலப் போரில் 2021 சட்டப்பேரவை தேர்தல் என்பது முக்கியமான திருப்புமுனையில் நடந்த சமர் ஆகும். இதில் பகைவன் தோற்கடிக்கப்பட்டால் அது நீண்டகாலப் போருக்கான உத்திசார் வெற்றியாக அமையும்.

இந்த 12 நாள் பரப்புரை பாசிச எதிர்ப்புப் போராட்டத்தின் அடுத்தடுத்த களங்களைச் சந்தித்து முன்னேறிச் செல்வதற்கான ஊக்கத்தையும் பயிற்சியையும் இயக்கங்களிடையிலான நம்பிக்கையையும் செறிவான படிப்பினையையும் களத்தில் பணியாற்றிய உறுப்பு அமைப்புகளுக்கு ஏற்படுத்தியுள்ளது.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

பாசிச பாசக எதிர்ப்பு இயக்கத்திற்கான ஒருங்கிணைவை அடுத்தடுத்தக் கட்டத்திற்குக் கொண்டு செல்வதற்கு இந்தத் தேர்தல் காலக் கூட்டுச் செயல்பாடு உரமிடுவதாக அமையும். முன்னேறிச் செல்வோம்!

பரப்புரையில் பங்குபெற்ற அமைப்புகள்:

மக்கள் இயக்கங்கள், சென்னை மண்டலம்

(தமிழ்த்தேச மக்கள் முன்னணி, பாப்புலர் ஃப்ரண்ட் ஆப் இந்தியா, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம், சிபிஐ(எம்-எல்) செந்தாரகை (ரெட் ஸ்டார்), திராவிடர் ஒன்றிய சமத்துவக் கழகம், மக்கள் குடியரசு இயக்கம், தொழிலாளர் சீரமைப்பு இயக்கம், வெல்பேர் பார்ட்டி ஆப் இந்தியா)

ஆயிரம்விளக்குத் தொகுதியில் ததேவிஇ சார்பில் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் மகிழன் 12 நாள் பரப்புரையிலும் முழுமையாகக் கலந்து கொண்டார். கதிர். சதீஷ் உள்ளிட்ட தோழர்களும் கலந்து கொண்டனர்.

**திருவையாறு:**

திருவையாறு தொகுதியில் தோழர் அருண் மாசிலாமாணி மக்கள் இயக்கங்களை ஒருங்கிணைத்து பாசிச பாசக எதிர்ப்புப் பரப்புரையில் தொடக்கமுதல் கடைசி வரை இயக்கத்தின் சார்பில் முனைப்புடன் பங்காற்றினார். மார்ச் 29ஆம் நாள் பரப்புரையில் தோழர் தியாகு பூதலூரில் பேசினார். அவர் பேசிச் சென்ற பின் அதே இடத்தில் பாசக வண்டியைக் கொண்டுவந்து நிறுத்தி எதிர் பரப்புரை மேற்கொண்டனர்.

**கோவை தெற்கு:**

கோவை தெற்கு தொகுதியில் மக்கள் இயக்கங்கள் சார்பில் மேற்கொள்ளப்பட்ட தொடர் பரப்புரையில் ததேவிஇ பொதுச்செயலாளர் தோழர் தியாகு ஏப்ரல் முதல் நாள் மூன்று தெருமுனைக் கூட்டங்களில் பேசினார். தோழர் சுதா காந்தி, பாரதி, ஆறுச்சாமி ஆகிய தோழர்களும் பரப்புரையில் தொடர்ந்து பங்கேற்றனர், பரப்புரையின் இறுதி இரு நாட்களில் தோழர் பாரதி கலந்து கொண்டு பல கூட்டங்களில் பேசினார்.

# கியூபாவின் புரட்சிப்பெண்கள்(13):

சமந்தா

## கியூபா ,இந்தியாவில் பெண்களின் நிலை:

ஒரு நாட்டின் நாகரிகம் ,வளர்ச்சி ,முற்போக்கு நிலையை ,அங்குள்ள பெண்களின் சமூக நிலையைக் கொண்டு அறிந்து கொள்ள முடியும் என்பது பொதுமொழியாக அறிந்தேற்கப்படுகிறது . பாலின சமத்துவமின்மையும் ,பாலின இடைவெளியும் சமூக முன்னேற்றத்தையும் , வளர்ச்சியையும் முடக்கும் எதிர்மறை ஆற்றலாக செயல்படுகிறது .கியூபப் புரட்சி விளிம்பு நிலையில் இருந்த பெண்களின் புரட்சிகர பங்கேற்பையும் ,ஈடு இணையற்ற தியாகத்தையும் கோரியது.அதுவே பாலின சமத்துவத்துவத்திற்கான புரட்சிக்கு வழிகோலியது .கியூபப் புரட்சியில் பங்கேற்ற முதன்மையான பெண் புரட்சியாளர்களை பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளை இது வரை பார்த்திருந்தோம்.ஒட்டு மொத்த கியூப பெண்களின் சமூக நிலை எந்தளவிற்கு முன்னேறியிருக்கிறது என்பதையும் ,அதோடு ஒப்பிடும் போது இந்தியப் பெண்களின் சமூக நிலை எவ்வாறு உள்ளது என்பதையும் இப்பொழுது பார்ப்போம்.

வரலாற்று அடிப்படையில் கியூபா பெரும்பாலும் ஒரு விவசாய நாடாகவே இருந்துள்ளது , நகர்ப்புறங்களில் சுற்றுலா சார்ந்த பொருளாதாரம் நிலவிவந்தது .புரட்சிக்கு முன்னர் ,பெண்களுக்கு கல்வி வாய்ப்புகள் அளிக்கப்படவில்லை .வேறு வேலைவாய்ப்புகள் கிடைக்காததால் இந்தப் பகுதிகளில் பெண்கள் பணிப்பெண்களாக ,விலைமாதராக வேலை செய்ய நிர்பந்திக்கப்பட்டனர் . உழைப்பு சக்தியில் பங்கேற்ற பெண்களில் 70 விழுக்காட்டினர் வீட்டு ஊழியர்களாக பணி புரிந்தனர்.

1933ல் ,கியூபப் பெண்கள் வாக்குரிமையைப் பெற்றனர்.1940 ல் கியூப அரசியலமைப்பு சட்டம் பாலின அடிப்படையில் பாகுபாடு காண்பிப்பதைத் தடைசெய்தது ,பெண்களின் உரிமைகளான சம ஊதியம் அளித்தலும் ,சம வேலைவாய்ப்பு அளித்தலும் அங்கீகரிக்கப்பட்ட போதும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. கியூப புரட்சிக்குப் பிறகு லத்தீன் அமெரிக்காவின் மற்ற பகுதிகளுடன் ஒப்பிடும்போது கியூபப் பெண்கள் கல்வி ,வேலைவாய்ப்பு பெறுவதில் இணையற்ற உரிமைகளைப் பெற்றனர். 1975 ல் கியூப குடும்ப சட்ட நெறி உருவாக்கப்பட்டது .இது குடும்பத்தில் பெண்குழந்தைகள் ,பெண்கள் மீதான பாகுபாட்டை தடைசெய்தது. கியூப பெண்கள் வீட்டுக்

கடமைகளை தங்கள் வாழ்க்கைத் துணைவர்களுடன் நியாயமான முறையில் பகிர்ந்து கொள்ளும் விதமாகவே 1975 குடும்ப சட்ட நெறி வடிவமைக்கப்பட்டது.கணவன்-மனைவி இருவரும் குடும்பத்தில் சமமான பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்றும் அதுவே இளம் தலைமுறையினருக்கு கல்வி அடிப்படையிலான முன்னுதாரணமாக அமையும் எனவும் 1975 குடும்ப சட்ட நெறி குறிப்பிடுகிறது .

கியூபாவின் வளர்ச்சியில் பெண்களின் முழு பங்கேற்பையும் உறுதி செய்யும் விதமாக சம வாய்ப்புகளை அளிக்கும் வகையில் கியூப அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது.கியூப அரசியலமைப்புச் சட்டம் ,பெண்களுக்கு பொருளாதார ,அரசியல் ,கலாச்சார தளங்களிலும் , குடும்பத்திலும் ஆண்களுக்கு நிகரான சமான அரசியலமைப்பு உரிமைகளை வழங்குகிறது .கியூப அரசியலமைப்பின்44 வது பிரிவில் நாட்டின் வளர்ச்சியில் பெண்கள் தங்கள் முழுப் பங்களிப்பை அளிப்பதற்கு ,ஆண்களுக்கு கிடைத்த அதே வாய்ப்புகளையும் சாத்தியப்பாடுகளையும் அரசு உறுதிப்படுத்தும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது .

கியூபப் பெண்கள் பல்வேறு சமூக இனப் பின்னணியிலிருந்து) ஆ்ப்ரிக்கா ,லத்தீன் அமெரிக்கா ( வந்தவர்கள். சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட விளிம்பு நிலையில் உள்ள கியூப பெண்கள் ,உட்பட அனைத்து பெண்களுக்கும் இலவசமான உயர் கல்வியையும் ,சமமான முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளையும் கியூப அரசு வழங்கியுள்ளது.

1959 கியூப புரட்சிக்குப் பிறகு உருவாக்கப்பட்ட கியூப பெண்கள் கூட்டமைப்பு) எ்ப்எம்சி) 3 மில்லியனுக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டுள்ளது 14 .வயதுக்கு மேற்பட்ட பெண்களில் 85.2 விழுக்காட்டினர் இதன் உறுப்பினர்களாக உள்ளனர்.பெண்கள் சமூக முன்னேற்றத்தை அடைவதற்கான புதிய வாய்ப்புகளை இவ்வமைப்பு அளித்தது .பெண்கள் பல்கலைக்கழக கல்வி பெறவும் ,சம ஊதியம் பெறவும் ,அரசு வேலைகளில் பங்கேற்கவும் உதவியது. கியூப மகளிர் கூட்டமைப்பை கியூப அரசு" கியூபாவில் பெண்களின் முன்னேற்றத்திற்கான தேசிய பொறிமுறையாக "அங்கீகரித்தது. தேசிய அளவில் பெண்களுக்கான பயிற்சி மையமும் ,பெண்களுக்கான பதிப்பகமும் ஏற்படுத்தப்பட்டது .

கியூப மகளிர் கூட்டமைப்பு வீட்டு வேலைக்காரர்களாகவும் ,விலைமாதராகவும் இருந்த

பெண்களுக்கும் ,வறுமையில் வாடும் பெண்களுக்கும் கல்வி கற்பிப்பதற்காக பள்ளிகளை நிறுவியது.இந்தப் பள்ளிகள் பெண்களுக்கு பரந்த அளவிலான திறன்களையும் ,உயர் கல்வியையும் பெறுவதற்கு அவர்களுக்கு உதவியது .

புரட்சியின் வெற்றியின் போது கியூபாவின் மக்கள்தொகையில் கால் வாசி பேர் கல்வியறிவற்றவர்களாகவும், அதில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பெண்களாகவும் இருந்தனர். 1961ல், கிட்டத்தட்ட முழு நாடும் கல்வியறிவு பெற்றிருந்தது. தன்னார்வலர்களால் கல்விச் சேவையால் தான் இந்த சாதனை சாத்தியமானது.அதில் 56 விழுக்காட்டினர் இளம் பெண்கள்.அமெரிக்கா, ஐக்கிய முடியரசு போன்ற வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் கல்வி வணிக சரக்காக விற்கப்படும் நிலையில் சின்னஞ்சிறிய கியூபா கல்வியில் முன்னிலையில் ஓங்கி நிற்கிறது.சோஷலிச கியூபாவின் வளர்ச்சியை முடக்கும் விதமாக அமெரிக்க ஏகாதிபத்தியம் தொடர்ந்து பல பொருளாதாரத் தடைகளை விதித்துள்ள போதும் கியூப அரசு போற்றுதலுக்குரிய முறையில் அனைத்து குடிமக்களுக்கும் பல்கலைக்கழக முதுநிலைக் கல்வி வரை இலவசக் கல்வி சேவையை வழங்குகிறது. ஆனால் இந்திய கல்லூரிகளில் 22 விழுக்காடு மட்டுமே அரசு கல்லூரிகளாக உள்ளன, இவற்றின் மூலம் 32.7விழுக்காட்டினரே கல்வி பெற முடியும்.

2011ஆம் ஆண்டு நிலவரப்படி, 80 விழுக்காட்டிற்கும் அதிகமான பல்கலைக்கழக மாணவர்களாக, 68 விழுக்காட்டினர் பல்கலைக்கழக பட்டதாரிகளாகவும் கியூப பெண்கள் உள்ளனர். மருத்துவ மாணவர்களில் 81 விழுக்காட்டினர் கியூப பெண்களாக உள்ளனர். ஆனால் மற்ற அறிவியல் துறைகளில் குறைவாகவே பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறார்கள். இயற்கை அறிவியல், கணிதத்துறையில் 46விழுக்காடும், தொழில்நுட்பப்பிரிவில் 37விழுக்காட்டினரும், பொறியியல் துறையில் 30 விழுக்காட்டினரும் பெண்களாக உள்ளனர். கியூப தொழில்நுட்ப, தொழில்முறை பணிக்குழுவில், 1979லிருந்து அதிகரித்து வருகிற பெண்களின் எண்ணிக்கை, 2000த்தில் 66 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

1959 புரட்சிக்கு முன்னர் ,கியூபாவில் கருக்கலைப்பு செய்வது சட்டவிரோதமானது1960 .ல் கியூபப் பெண்கள் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் ,கியூபப் பெண்களின் இனப்பெருக்க உரிமைகளை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.1965 ல் ,கருக்கலைப்பு குற்ற நடவடிக்கைகளிலிருந்து நீக்கப்பட்டது1979 .ல் ,கருக்கலைப்பு சேவையை பெண்கள் இலவசமாகவும் எளிதாகவும் பெற

முடிந்தது.

1990 சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட பிறகு ,அங்கிருந்து கியூபா பெற்ற பொருளாதார ஆதரவும் ,நிதியுதவியும் நிறுத்தப்பட்டதாலும் ,அமெரிக்காவின் தொடரும் பொருளாதாரத் தடைகளாலும் ,தவிர்க்க இயலாதபடி கியூபாவில் தனியார்மயம் ஊக்குவிக்கப்பட்டுள்ளது ,இதனால் கியூபாவின் சோசலிச வளர்ச்சியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. .குடும்பம் ,குழந்தை பராமரிப்பு சமூக பராமரிப்பு சேவைகள் மீண்டும் தாய்மார்கள் ,மனைவிகள் பெண்களிடமே திரும்பியுள்ளது .

கியூபப் புரட்சியின் மூலம் கியூபப் பெண்கள் சம உரிமைகள் ,சம வாய்ப்புகள் பெற்று பெரும் முன்னேற்றத்தை அடைந்திருந்த போதிலும் ,கியூப சமுதாயத்தில் பாலின அடிப்படையிலான சமூக ஏற்றத்தாழ்வுகளும் ,ஆணாதிக்கப் போக்கும் இன்னும் முற்றிலுமாகக் களையப்படவில்லை ,ஆன போதும் பல வளர்ந்த நாடுகளை காட்டிலும் பாலின சமத்துவத்தில் கியூபா முன்னிலையில் உள்ளது என்பதையும் மறுக்க இயலாது .

இந்தியாவைப் பொறுத்தவரை அரசியலமைப்புச் சட்டம் பாலின சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான சட்ட நெறிகளைக் கொண்டுள்ளது .இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 14வது உறுப்பு அனைத்து இந்திய பெண்களின் சமத்துவத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது ,அரசின் பாலின பாகுபாடற்ற நடைமுறையை உறுப்பு (1) 15 உறுதி செய்கிறது .உறுப்பு 16 பெண்களுக்கு சம வாய்ப்புகளை அளிப்பதை உறுதி செய்கிறது .சம வேலைக்கு சம ஊதியம் பெறும் உரிமையை உறுப்பு) 39 ஈ (அளிக்கிறது.குழந்தைகளுக்கு ஆதரவாக சிறப்பு ஏற்பாடுகளை செய்ய அரசை உறுப்பு (3) 15அனுமதிக்கிறது ,உறுப்பு51 அ பெண்களின் இறைமையை இழிவுபடுத்தும் நடைமுறைகளுக்குத் தடை விதிக்கிறது .உறுப்பு 42 நியாயமான ,மனித நேயமிக்க வேலை நிலைமைகளைப் பாதுகாக்கவும் ,மகப்பேறு நிவாரணம் அளிக்கவேண்டும் என்றும் அரசைப் பணிக்கிறது .பெண்கள் சொத்துரிமையில் சம பங்குபெற சட்ட அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது . ஆன போதும் இவையாவும் முற்றிலுமாக நடைமுறைப்படுத்தாமல் ஏட்டுச் சட்டங்களாகவே நீடித்து வருகிறது .இந்தியாவின் பிரத்யேக சமூகப் பிரச்சனைகளான பெண் சிசுக்கொலை , வரதட்சணைக் கொடுமை ,குழந்தைத் திருமணம் ,ஆகியவற்றைத் தடுப்பதற்கான சட்டங்கள் இயற்றப்பட்ட போதும் ,இப்பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டு தான் உள்ளது .

தேசிய குற்ற ஆவண காப்பகம், உலகளவில் இந்தியாவில் தான் வரதட்சணை கொடுமையால் ஏற்படும் இறப்புகள் அதிகமாக உள்ளன என்று குறிப்பிட்டுள்ளது. 1961ல் வரதட்சணை தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது என்ற போதும் 2012ல், இந்தியா முழுவதும் 8,233 வரதட்சணை மரண வழக்குகள் பதிவாகியுள்ளன. 2017ல் 7000 பேர் வரதட்சணைக் கொடுமையால் இறந்துள்ளனர்.வரதட்சணையால் ஏற்படும் இறப்புகள் 2001ல் ஒரு நாளுக்கு 19ஆக இருந்தது 2016ல் 21ஆக அதிகரித்துள்ளது.2019ல் 7115 பேர் வரதட்சணைக் கொடுமையால் கொல்லப்பட்டுள்ளனர். வரதட்சணைக் கொடுமைகள் கிராமப் புறங்களில் மட்டுமே காணப்படுவதில்லை, டெல்லி, பெங்களூர் போன்ற நகரங்களிலும் வரதட்சணைக் கொடுமைகள் செய்யப்படுகின்றன.2020ல் பெங்களூரில் 16 நாட்களில் வரதட்சணை கொடுமையால் 17 இறப்புகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இந்தியாவில் பதிவு செய்யாமல் போகும் வரதட்சணைக் கொடுமைகள் பல.

இந்தியாவில் கல்வித்துறையில் அதிகரித்து வரும் தனியார்மயத்தால் பெண்கள் கல்வி பெறுவதில் பெறும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. குழந்தைகள் உரிமைகளை பாதுகாப்பதற்கான தேசிய ஆணையத்தின் 2019ஆம் ஆண்டு அறிக்கையின்படி, 15-18 வயதுக்கு இடைப்பட்ட இந்தியப் பெண்களில் கிட்டத்தட்ட 40 விழுக்காட்டினர் பள்ளிக் கல்வியை இடை நிறுத்தியுள்ளனர். அவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் வீட்டு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் குழந்தைத் திருமணம் ஒரு பெரும் சமூகப் பிரச்சனையாக நீடிக்கிறது. இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும், 18 வயதிற்கும் கீழ் திருமணம் செய்யப்படுகின்ற பெண்களின் எண்ணிக்கை 1.5 மில்லியன் என யுனிசெஃப் மதிப்பிட்டுள்ளது. உலகளவில் குழந்தைத் திருமணம் செய்யப்படும் மூன்றில் ஒருவர் இந்தியாவைச் சேர்ந்தவர். இந்தியாவில் 15 முதல்19 வயதுடைய பெண்களில் கிட்டத்தட்ட 16 விழுக்காட்டினர் திருமணமானவர்கள் என யுனிசெஃப் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் பெண்கள், கர்ப்பிணி, பாலூட்டும் பெண்களிடையே ஊட்டச்சத்துக் குறைபாடு அதிகமாக உள்ளது. குடும்ப அமைப்புகளிலும், வேலையிடங்களிலும், சமூகத்திலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள், குறிப்பாக பாலியல் வன்முறைகள் இந்தியாவில் அதிகரித்து வருகின்றன.பணியிடத்தில் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தலை தடுப்பதற்கான சட்டம்

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

2013ல் நிறைவேற்றப்பட்டது. ஆன போதும் பெண்கள் மீதான பாலியன் வன்முறைகள் இந்தியாவில் தொடர்ந்து அதிகரித்துவருகிறது. தேசிய குற்ற ஆவண காப்பகத்தில், 2017 ல் பெண்களுக்கு எதிராக பதிவுசெய்யப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 3.59 லட்சம் இது 2018 ல் 3.78 லட்சமாகவும், 2019ல் 4 லட்சத்திற்கும் மேலும் அதிகரித்துள்ளது. 2019ல் பதிவுசெய்யப்பட்ட பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளின் எண்ணிக்கை 32,033 . தினமும் 88 பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இந்தியாவில் கணவரால் செய்யப்படும் பாலியல் வல்லுறவு குற்றமாகக் கருதப்படுவதில்லை.

22 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் முதல் கட்டமாக மேற்கொள்ளப்பட்ட தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பின் (என்.எ்.ப்.எச்.எஸ்) முதல் கட்டத்தில் 7 மாநிலங்களில் 25 விழுக்காட்டிற்கும் அதிகமான பெண்கள் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ளனர் .ஒன்பது மாநிலங்களில் குழந்தை பருவத்தில் பாலியல் வன்முறையை எதிர்கொண்ட இளம் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது .எட்டு மாநிலங்களில் பெண்களின் பாலின விகிதம் குறைந்துள்ளது . பெரும்பாலும் பெண்களுக்கு எதிரான சமூகக் குற்றங்கள் ,அதனால் ஏற்படும் சமூகக் களங்கம் குறித்த தப்பெண்ணங்கள் காரணமாக காவல் துறையில் புகாரளிக்கப்படுவதில்லை .இந்தியாவில் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களில் 86 விழுக்காட்டினர் உதவியை நாடுவதில்லை பாதிக்கப்பட்டவர்களில் 77 விழுக்காட்டினர் குற்ற சம்பவத்தை யாரிடமும் குறிப்பிடுவதில்லை. பாதிக்கப்பட்டவர்களில் உதவியை நாடும் 14.3 விழுக்காட்டினரில் 7 ,விழுக்காட்டினர் மட்டுமே காவல்துறை ,மருத்துவர்கள் ,வழக்கறிஞர்கள் அல்லது சமூக சேவை நிறுவனங்களையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் அணுகியுள்ளதாக தேசிய மகளிர் ஆணையத்தின் தரவுகள் குறிப்பிடுகின்றன.

1976ல் சம ஊதியச் சட்டம் இந்தியாவில் நிறைவேற்றப்பட்டது, இது பாலின அடிப்படையில் ஊதியத்தில் பாகுபாடு காண்பிப்பதைத் தடைசெய்கிறது. ஆனால் ஊதிய ஏற்றத்தாழ்வு இன்னும் நடைமுறையில் உள்ளது. 2017ல், மான்ஸ்டர் ஊதியக் குறியீட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்தியாவில் பாலின அடிப்படையிலான ஊதிய இடைவெளி 20 விழுக்காடாகவும் குறிப்பிட்டுள்ளது. பணி அனுபவம் அதிகரிக்கும் போது ஊதிய இடைவெளியும் அதிகரிக்கிறது.11 ஆண்டுகளுக்கு மேல் பணி அனுபவம் உள்ளவர்களிடையே பாலின அடிப்படையிலான ஊதிய

இடைவெளி 25 விழுக்காட்டிற்கு மேல் அதிகரித்துள்ளது. 4-5 ஆண்டு பட்டக் கல்வி அல்லது முது நிலை பட்டம் பெற்றவர்களிடையிலான ஊதிய இடைவெளி 33.7 விழுக்காட்டிற்கும் மேல் அதிகரித்துள்ளது.

இந்தியாவில் சாதி, மத பாகுபாடுகளை கடந்து செய்யப்படும் கலப்புத் திருமணங்களும், காதல் திருமணங்களும் சமூகத்தால் பரவலாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதுடன் அவற்றிற்கெதிராக செய்யப்படும் ஆணவக் கொலைகளின் எண்ணிக்கையும் குறைந்தபாடில்லை. இந்தியக் குடும்ப அமைப்புகளில் காணப்படும் பெண்ணடிமைத்தனத்தால், தங்கள் இணைவரை தேர்ந்தெடுக்கும் உரிமை பெரும்பாலான இந்தியப் பெண்களுக்கு இல்லை. பெற்றோர், குடும்பத்தின் மூலமாக தேர்ந்தெடுக்கும் நபரையே திருமணம் செய்து கொள்ளும் போக்கு இன்னும் பெருமளவிற்கு நீடித்து வருகிறது. சரியான புரிதலுக்கான சூழல் ஏற்படுத்தப்படாமல் செய்யப்படும் இத்தகைய திருமணங்கள் பெண்ணடிமைத் தனத்தை ஊக்குவித்து, பெண்களின் சமூக, அரசியல், பொருளாதார பங்கேற்பிற்கும், அவர்களின் முன்னேற்றத்திற்கும் பெரும் முட்டுக்கட்டையாக உள்ளது.

இந்திய தேசியக் குற்ற ஆவண காப்பகம்2018 ல் 30 ஆணவக்கொலைகள் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகிறது .ஆணவக் கொலைகள் தொடர்பான உச்சநீதிமன்ற தீர்ப்பு தரவுகளின் படி 2014 , முதல் 2016 வரை 288 ஆணவக் கொலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன .எவிடன்ஸ் என்கிற தலித் அமைப்பு 2012 முதல் 2017 வரை தமிழ்நாட்டில் 187 சாதி அடிப்படையிலான ஆணவக் கொலைகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்தியாவில் மருத்துவம், விஞ்ஞானம், அறிவியல் தொழில்நுட்பம் கல்வி, விளையாட்டு, அரசியல், ஊடகத்துறை, கலை, சேவைத் துறைகள், போன்ற பல்வேறு துறைகளில் பெண்களின் பங்கேற்பு அதிகரித்துள்ள போதும் பாலின சமத்துவ நிலையை எட்டுவதற்கு இன்னும் வெகுதூரம் பயணிக்க வேண்டியுள்ளது.

பிறப்பின் அடிப்படையிலான பாலியல் விகிதம் கியூபாவில் 100 பெண்களுக்கு 98.6 ஆண்களாகவும் , இந்தியாவில் 100 ஆண்களுக்கு 91 பெண்களாகவும் உள்ளது .

நாடாளுமன்றத்தில் பெண்களின் பங்கேற்பு விகிதம்2019 ல் கியூபாவில் 53.2விழுக்காடாகவும் ,

இந்தியாவில் 13.5 விழுக்காடாகவும் உள்ளது .உலகளவில் நாடாளுமன்றத்தில் பெண்களின் பங்கேற்பு விகிதத்திற்கான தரவரிசையில் 192 நாடுகளில் கியூபா2 ம் இடத்தில் உள்ளது .இந்தியா 149வது இடத்தில் உள்ளது2020 .ஆம் ஆண்டிற்கான பாலின இடைவெளிக் குறியீட்டின் மதிப்பு கியூபாவில்0.746 ஆகவும் ,இந்தியாவில்0.668 ஆகவும் உள்ளது .பாலின இடைவெளிக் குறியீட்டிற்கான தரவரிசையில் 153 இடங்களில் கியூபா31 ஆம் இடத்திலும் ,இந்தியா112 ஆம் இடத்திலும் உள்ளது2019 .ல் பாலின சமத்துவமின்மையின் மதிப்பு கியூபாவில்0.304 ஆகவும் , இந்தியாவில்0.488 ஆகவும் உள்ளது .பாலின சமத்துவமின்மைக்கான தரவரிசையில் 162 இடங்களில் கியூபா67 ஆம் இடத்திலும் ,இந்தியா123 ஆம் இடத்திலும் உள்ளது .பேறுகால இறப்பு விகிதம் கியூபாவில்100,000 பேருக்கு39 ஆக உலகளவில் மிகக் குறைந்த விகிதத்தைக் கொண்டுள்ளது.இந்தியாவில் பேறுகால இறப்பு விகித்தின் மதிப்பு133 ஆக உள்ளது .பெண்களின் சராசரி ஆயுட்காலம் கியூபாவில் 80.7 ஆண்டுகளாகவும் ,இந்தியாவில் 70.7 ஆண்டுகளாகவும் உள்ளது.

2015-19க்கு இடைப்பட்ட பகுதியில் 25 வயதுக்கு மேற்பட்டவர்களில் கியூப பெண்களில் 85.8விழுக்காட்டினரும் ,ஆண்களில் 89.1 விழுக்காட்டினரும் இடை நிலை கல்வி பெற்றவர்களாக உள்ளனர் .இந்தியாவில் 25 வயதுக்கு மேற்பட்டவர்களில் பெண்களில் 27.7 விழுக்காட்டினரும் , ஆண்களில் 47.0 விழுக்காட்டினரும் இடை நிலை கல்வி பெற்றவர்களாக உள்ளனர்2019 .ஆம் ஆண்டு நிலவரப்படி 15 வயதுக்கு மேலுள்ள நபர்களில் உழைப்புச் சக்தியில் பங்கேற்கும் பெண்களின் விகிதம் கியூபாவில் 40.7 விழுக்காடாகவும் ,இந்தியாவில் 20.5 விழுக்காடாகவும் உள்ளது 15 .வயதுக்கு மேலுள்ள நபர்களில் உழைப்புச் சக்தியில் பங்கேற்கும் ஆண்களின் விகிதம் கியூபாவில் 66.8 விழுக்காடாகவும் ,இந்தியாவில் 76.1 விழுக்காடாகவும் உள்ளது .இவ்வாறு பொருளாதாரத் தடைகளால் முடக்கப்பட்ட போதிலும் சின்னஞ்சிறிய கியூபாவில் பெண்களின் சமூக நிலை ,கல்வியறிவு ,அரசியல் பங்கேற்பு ,உடல் நலம் ,உழைப்புச் சக்தியில் பங்கேற்பு என அனைத்திலும் உலகின்5 வது மிகப்பெரிய பொருளாதாரமாக அறியப்படும் இந்தியாவை விட பெருமளவில் முன்னேறியும் ,மேம்பட்டும் அதிக பாலின சமத்துவத்துடன் காணப்படுகிறது.கியூபாவின் பாலின சமத்துவ நிலையை எட்ட இந்தியா இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டியுள்ளது.

(முற்றும்)

# ஓய்ந்தது நீதியின் குரல்!

**தியாகு**



1,46,679! இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து அறுநூற்று எழுபத்தொன்பது! இந்தத் தொகை இனவழிப்புக்கு நீதி கோரும் ஈழத்தமிழர் போராட்டத்தில் இன்றையமாயாத இடம் பெற்று விட்ட ஒன்று.

2008-09 இனவழிப்புப் போரின் இறுதிக் கட்டத்தில் கொல்லப்பட்டோ வலிந்து காணாமலாக்கப்பட்டோ இல்லாமற்போனவர்கள் எத்தனைப் பேர்? மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் தெளிவாகக் கணக்கிட்டு திட்டவட்டமாகச் சொன்னார்: 1,46,679! போர் தீவிரமடைந்த போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வசித்தவர்கள் என்று சிங்கள அரசு கொடுத்த கணக்கையும், மே 18ஆம் நாள் போர் முடிந்தபின் சிங்கள அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து சேர்ந்தவர்களின் கணக்கையும் ஒப்பிட்டுக் காட்டி, எஞ்சிய 1,46,679 பேர் எங்கே? என்று அரசிடம் கேள்வி கேட்டார் இரயப்பு ஆண்டகை! அரசினால் விடை சொல்ல முடியவில்லை.

ஆயர் இராயப்பு ஜோசப் தமது 81ஆம் பிறந்தநாளுக்கு 15 நாள் இருக்கும் போது 2021 ஏப்ரல் முதல் நாள் யாழ்ப்பாணத்தில் காலமானார். 1940 ஏப்ரல் 16ஆம் நாள் நெடுந்தீவில் பிறந்த இராயப்பு அதிகாரத்துக்கு அஞ்சாமல் உண்மையும் நீதியும் தேடுவதில் தன்னளிப்புடன் ஈடுபட்ட

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

தீரர். அதனாலேயே ஈழத் தமிழர்களிடையே “நீதியின் குரல்” எனப் பெயர் பெற்றவர்.

1992 அக்டோபரில் மன்னார் ஆயராகப் பட்டம் சூட்டப்பெற்ற இராயப்பு பள்ளிப் படிப்புக் காலமுதலே சட்டத்துக்கும் மனிதவுரிமைகளுக்கும் மாந்தக் கண்ணியத்துக்கும் தம்மை ஒப்படைத்துக் கொண்டவர். யாழ்ப்பாணம் புனித பட்ரிக் கல்லூரியில் படித்து முடித்த பின் இத்தாலியில் ரோமாபுரியில் பாண்டிஃபிகல் அர்பேனியானா பல்கலைக்கழகத்திலிருந்து திருச்சபைச் சட்டத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.

2009ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக சிறிலங்கா செய்த செயல்கள் பெருந்திரளான வன்கொடுமைக் குற்றங்களாகும் என்பதை நிறுவுவதில் ஆயர் இராயப்பு ஆண்டகை முகன்மைப் பங்கு வகித்தவர்.. நிகழ்களத்தில் பன்னாட்டுச் சாட்சிகளின்றி நிகழ்த்தப்பட்ட இனவழிப்பின் வலுமிக்க சாட்சியாக அவர் இருந்தார். கொல்லப்பட்டவர்கள் என்று அவர் கொடுத்த கணக்கை யாராலும் மறுத்துப் பேச முடியவில்லை.

2011ஆம் ஆண்டு ஆயர் இராயப்பு ஏனைய உயர்நிலை கத்தோலிக்கக் குருமார்களுடன் சேர்ந்து 'கற்ற படிப்பினைகள்-மீளிணக்க ஆணைய'த்திடம் அரசைக் குற்றக்கூண்டிலேற்றும் நீண்ட விண்ணப்பம் அளித்தார். குற்றவாளிகளான தலைவர்கள் ஏற்படுத்திய ஆணையத்திடமே அவரும் அவரின் கூட்டாளிகளும் துணிந்து இப்படிச் செய்தனர். குற்றம் புரிந்த அரசின் முகத்துக்கு நேராகவே எப்போதும் உண்மை பேசியவர் இராயப்பு. உயிரச்சம் இல்லாமல் இதைச் செய்தார்.

முள்ளிவாய்க்கால் இனக்கொலைக்கு நீதி கோரும் தமிழர்களின் குரல்தான் இராயப்புவின் குரலாக ஒலித்தது. விடுமைக்கும் தன்னாட்சிக்குமான தமிழர் கோரிக்கையை அவர் எதிரொலித்தார். தமிழர் விடுதலை அரசியலில் அவர் ஈழத்தமிழரின் வேட்கையை அஞ்சாது வெளிப்படுத்தினார்.

சிறிலங்காவை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் கொண்டுபோய் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையில் உலகெங்கும் தமிழர்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ஒன்றுபட்டிருக்கும் இந்த நேரத்தில் ஆயரை நாம் இழந்து விட்டோம். தமிழர் வாழ்வில் நெருக்கடியான ஒரு கட்டத்தில் நீதியின் குரலாக ஒலித்தவரை இழந்து விட்டோம். ஓயாத ஒலித்த நீதியின் குரல் ஓய்ந்தே விட்டது.

மறைந்த மாமனிதர் ஆயர் இராயப்பு ஜோசப் அவர்களுக்குத் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் புகழ் வணக்கம்! - தியாகு.

# சாவினால் ஓய்வு பெற்றார் ஆனைமுத்து!

[தியாகு]



மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் தலைவரும் பெரியாரியப் பேரறிஞரும் சமூகநீதிப் போராளியுமான தோழர் வே. ஆனைமுத்து 2021 ஏப்ரல் 6ஆம் நாள் பகல் 11.45 மணியளவில் எழுபதாண்டுப் பொதுவாழ்விலிருந்து சாவின் கருணையால் ஓய்வு பெற்றார்.

தோழமைக்கு முதுமையோ அகவை வேறுபாடோ இல்லை.

வே. ஆனைமுத்து அவரை விட 25 ஆண்டு இளையவனான என்னோடும் அப்படித்தான் பழகி வந்தார். எப்போதும் அவரைத் தோழர் என்றுதான் அழைத்து வந்தேன், அவரும் தோழர் என்றோ காம்ரேட் என்றோதான் என்னை அழைப்பார். மார்க்சிய-பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் அவர் தொடர்ச்சியாக நடத்தி வந்த **சிந்தனையாளன்** ஏட்டில் அவ்வப்போது கட்டுரைகள் எழுதுவேன்.

பாவலர் தமிழேந்தி, முகிலன், வாலாசா வல்லவன் உள்ளிட்ட தோழர்கள் அனைத்து வகையிலும் அவருக்குக் கைகொடுத்துத் துணைநின்றனர், தமிழேந்தி எதிர்பாராமல் நோயில் வீழ்ந்த போதும் மறைந்த போதும் அந்த இழப்பு தோழர் ஆனைமுத்துவை எப்படித் தாக்குமோ என்பதுதான் எனக்கு ஏற்பட்ட முதற்கவலையாக இருந்தது. பெரியார் பெருந்தொண்டர்கள் மறையும் போதெல்லாம் அவர்களின் நினைவைப் போற்றிக் காப்பதில் தோழர் ஆனைமுத்து கவனமெடுத்துக் கொள்வார். அவர்கள் ஒவ்வொருவர் குறித்தும் அவர் எழுதியவையும் தொகுத்தவையும் வரலாற்று ஆவணங்கள்.

அறிவியக்கப் பேரவையில் சாலையாருடன் பணியாற்றி, பிறகு தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்துக்கு வந்த தோழரும் தமிழ்த் தேசம் வெளியீட்டாளருமாகிய தோழர் நாத்திக நந்தன் மறைந்த போது அவருக்கான நினைவேந்தல் நிகழ்வு மாபெபொக சார்பில் தாம்பரத்தில் நடைபெற்றது. தோழர் ஆனைமுத்துவும் நானும் அதில் கலந்து கொண்டு நந்தனாரை நினைவு கூர்ந்தோம்.

ஆண்டுதோறும் சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளிவரும். ஒவ்வொரு பொங்கல் மலரிலும் என் கட்டுரை இடம்பெறும். நான் எப்பொருள் குறித்து எழுத வேண்டும் என்பதை அவரே சொல்வார். அவரோடு ஒவ்வோர் உரையாடலும் அறிவார்ந்ததாக மட்டுமே இருக்கும். ஒரு கட்டுரையில் சோசலிசம் என்பதைக் குமுகியம் என்று தூய தமிழில் சொல்லியிருந்தேன். அது குறித்து என்னிடம் தொலைபேசியில் விளக்கமாகக் கேட்டறிந்தார். ஏன், ஒப்புரவு என்று சொல்லலாமே? என்று கேட்டார். ஒப்புரவு என்பது திருக்குறளில் போற்றப்படும் விழுமியம். சோசலிசம் என்பது குமுக வளர்ச்சிப் போக்கில் எழுந்த புதிய குமுக ஆற்றலாகிய பாட்டாளி வகுப்பின் கருத்தியல், திருவள்ளுவர் காலத்தில் இந்தக் குமுக வகுப்போ அதன்

கருத்தியலோ தோன்ற வாய்ப்பே இல்லை. ஆகவே அறிவியல் நோக்கில் குமுகியத்தை ஒப்புரவு என்று அழைக்க முடியாது என்றேன். இந்த என் விளக்கத்தைக் கவனமாகக் கேட்டுக் கொண்டார். கம்யூனிசத்தைப் பொதுவுடைமை என்பதை விடவும் பொதுமை என்பதே பொருத்தம் என்றும் விளக்கினேன். எல்லாவற்றையும் எழுதி விடுங்கள் என்றார்.

**மார்க்சியம் அனா ஆவன்னா** தூய தமிழ்ப் பதிப்பை வேலூரில் தோழர் குப்பன் முதலான மார்க்சிய-பெரியாரியத் தோழர்கள் விழாவெடுத்து வெளியிட்ட போது, தோழர் ஆனைமுத்துவுக்கான எல்லாச் செய்திகளையும் பேசினேன். அந்நிகழ்ச்சி நேரலையாக ஒளிபரப்பப்பட்டது. பிறகு சந்தித்த போது "உங்கள் உரை முழுவதையும் கேட்டேன்" என்றார்.

சற்றொப்ப ஈராண்டு முன்பு அவரின் வாழ்க்கைத்துணை சுசீலா மறைந்த போது "என் ஜென்னி மறைந்தாரே" என்று உருக்கமாக எழுதியிருந்தார். ஜென்னி என்பது கார்ல் மார்க்சின் வாழ்க்கைத் துணையின் பெயர். மார்க்சுக்காக எல்லாத் துன்பங்களையும் ஏற்றவர் ஜென்னி. சுசீலாவும் ஆனைமுத்துவின் பொதுவாழ்வுக்காகப் பெருந்துன்பங்கள் சுமந்தவர் என்பதை நான் உணர்ந்த போது அவரது துயரத்தைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் அப்போது என் அன்றாட ஒலிப்பதிவான **அறிவுக்குரலில்** பேசினேன். அது கேட்டு அவர் என்னைத் தொலைபேசியில் அழைத்துப் பேசிக் குரல் உடைய நன்றி சொன்னார். தாம்பரத்தில் மகன் வீட்டில் தங்கியிருந்தவரை நண்பர் (முன்னாள் காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர்) பலராமனுடன் சேர்ந்து போய் நலம் வினவி வந்தேன்.

அண்மையில் கோவிட்-19 பெருந்தொற்றில் வீழ்ந்து அவர் மீண்டு வந்த போது பெருநிம்மதி உற்றோம். அந்தோ! அடுத்து சில மாத காலத்துக்குள் இந்த முடிவு வந்து விட்டது. மெலிந்த உடல்! நீண்ட வெண்தாடி! ஒருமுறை அக்குபஞ்சர் மருத்துவத்துக்குப் போயிருந்த போது ஊசி குத்தத் தசையே இல்லையே என்று மருத்துவர் கேட்டராம். அப்படி எலும்பும் தோலுமாக இருப்பார்! அவர் அணிந்திருக்கும் நீண்ட கருந்துண்டின் சுமை தாளாமல் ஒடிந்து விழுந்து விடுவாரோ என்று அச்சப்படும் அளவில் மணிக்கணக்கில் நின்று கொண்டே பேசுவார். இராப்பகல் எழுதிக் குவிப்பார். அமைப்புப் பணிகளிலும் குறியாக இருப்பார்.

தனக்குச் சரியெனப் பட்டதை முகத்துக்கு நேராகச் சொல்வதில் பெரியாரைப் போலத்தான் அவரும்! ஒருமுறை நண்பர் 'அச்சமில்லை' இறைவன் முயற்சியில் வன்னியர் மகாசங்கம்

சார்பில் சில நூல்கள் வெளியிடப்பட்டன. பிற்பட்டோருக்கு இடஒதுக்கீடு கிடைத்தது ஆனைமுத்துவால்தான் என்று அந்நிகழ்வில் பாராட்டிப் பேசப்பட்டதை அவரே மறுத்தார். அம்பேத்கர்தாம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீட்டுக்கு அடித்தளம் அமைத்தவர், அவரை எப்படி அலட்சியம் செய்யலாம் என்று வன்மையாகக் கடிந்து பேசினார். அம்பேத்கர் இல்லை என்றால் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு ஏது? என்று கேட்டார். பெரியார் பெருந்தொண்டராகவே அறியப்பட்டாலும் அம்பேத்கரிடம் அளப்பரிய ஈடுபாடு கொண்டிருந்தார். ஆனால் இந்த ஈடுபாடு இந்திய அரசமைப்பு பற்றிய அவரது கூர்மையான குற்றாய்வைத் தடுத்து விடவில்லை. இந்திய அரசியல் சட்டத்தை மோசடி என்றே கடுமையாகச் சாடினார்.

அரசியல் என்றால் பணத்துக்கும் பதவிக்கும் புகழுக்கும்தான் என்றாகி விட்ட இக்காலத்தில் இறுதி வரை இலட்சிய வாழ்வு வாழ்ந்தவர் தோழர் ஆனைமுத்து. அரசமைப்புச் சட்டத்தில் சமூக நீதிக்கான இட ஒதுக்கீட்டு உரிமையை இடம்பெறச் செய்து நிலைபெறச் செய்து அதன் செயலாக்கத்தை விரிவாக்கியதில் அம்பேத்கர், பெரியார் என்ற வரிசையில் தோழர் ஆனைமுத்துவுக்கும் இடம்தர வேண்டும். சமூக நீதி அன்பர்கள் அவரை 'மண்டல் நாயகன்' என்று போற்றுவதற்கு உறுதியான காரணங்கள் உண்டு. பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டு உரிமைக்கு ஆதரவு திரட்டுவதற்காக வட மாநிலங்களிலும் ஊர் ஊராகச் சென்றவர் அவர்,

பெரியார் பெருந்தொண்டராகிய பெரியார் ஆனைமுத்து. பெரியார் சிந்தனைகளை முழுமையாக மூன்று தொகுதிகளில் தொகுத்தளித்தவர், அதே போது பெரியாரோடு கருத்து மாறுபடும் அறிவுத் துணிவு அவர்க்கிருந்தது. தமிழ்வழிக் கல்வி தொடர்பான பெரியார் நிலையை ஏற்க முடியாது என்றே எழுதினார். பெரியாருக்குச் சிலை வைக்க ஒப்புக் கொண்டது நாங்கள் செய்த பிழை என்றார். பெரியார் தேர்தலில் போட்டியிடா விட்டாலும் யாரையாவது ஆதரிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆனால் தோழர் ஆனைமுத்து சமூகநீதி நோக்கில் திமுக, பாமக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளோடும் நல்லுறவு பேணினாலும் தேர்தலில் யாரையும் ஆதரிக்க மாட்டார். எப்போதும் புறக்கணிப்புதான்! தோழர் ஆனைமுத்து தமிழ்த் தேசியத்தில் சரியான ஈடுபாடு கொண்டிருந்தார்.1996-97இல் கோவையில் தோழர்கள் கோவை ஞானி, மருதுபாண்டியன், இராமன்ராஜு, குமரவேல், இரவிராசன், முருகன் போன்றோரின் முயற்சியில் நிகழ், தமிழ் மைந்தர் மன்றம், தமிழ் இளைஞர் மன்றம் ஆகியவை ஒருங்கிணைந்த

தமிழியம் சார்பில் தொடர் சொற்பொழிவுகள் நடைபெற்றன. தோழர்கள் பூ.அர. குப்புசாமி, எஸ்.என். நாகராசன், மா,லெ, தங்கப்பா, கு.ச. ஆனந்தன், இன்குலாப், கி.வே. தமிழ்நாடன், வே. ஆனைமுத்து, பெ. மணியரசன் ஆகியோருடன் நானும் அந்நிகழ்வில் கலந்து கொண்டு பேசினேன். அந்த நீண்ட பொழிவுகள் அனைத்தும் தொகுக்கப்பெற்று **தமிழ்த் தேசியப் பேருரைகள்** என்ற தலைப்பில் நூலாக்கம் பெற்றன. அதே தொகுப்புடன் இன்னும் சில கட்டுரைகளையும் சேர்த்துத் தோழர் ஆனைமுத்து **தமிழ்த்தேசத் தன்னுரிமை முழக்கம்** என்ற தலைப்பில் வெளியிட்டார்.

ஒரு முறை இந்தியாவைக் கூட்டாட்சிக் குடியரசு ஆக்குவது பற்றிய அவருடைய கருத்தை மறுத்தும், தமிழ்த் தேசிய விடுதலையை வலியுறுத்தியும் அவரிடம் பேசினேன். முடிவில் "நீங்கள் அதைச் செய்யுங்கள், நான் இதைச் செய்கிறேன்" என்றார். அனைத்திந்திய அளவில் சமூகநீதிக்கான போராட்டம் என்பதில் எப்போதும் குறியாக இருந்தார். மாற்றுக் கருத்துகளுக்கு மதிப்பளிக்கும் குடியாட்சியப் பண்பு அவரிடம் இருந்தது. ஒரு முறை பாரதியாரைப் போற்றி அலிகார் பல்கலைக்கழகப் பேராசிரியர் து. மூர்த்தி எழுதிய கட்டுரை சிந்தனையாளனில் இடம்பெற்றது. அதை மறுத்து தோழர் வாலாசா வல்லவன் எழுதிய கட்டுரையும் அடுத்தடுத்த இதழ்களில் வெளிவந்தது.

தோழர் ஆனைமுத்து ஒருமுறை காசுமீர் தொடர்பான இந்திய அரசின் நிலைப்பாட்டை ஆதரிப்பது போல் சிந்தனையாளனில் எழுதி விட்டார். அதே இதழின் பின்னட்டையில் காசுமீர் விடுதலைக்கு ஆதரவான பாவலர் தமிழேந்தியின் கவிதை இடம் பெற்றிருந்தது. ஆனைமுத்துவின் கருத்தை மறுத்து வந்த மடல்களும் அடுத்த இதழில் இடம்பெற்றன.

தோழர் ஆனைமுத்துவை இழந்த மார்க்சிய-பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் துயரத்தில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் பங்கு பெறுகிறது.

செவ்வணக்கம் தோழர் ஆனைமுத்து!

## செங்காட்டான் குறிப்பு

# முத்து நினைவாக…



அன்று மார்ச் 8ஆம் தேதி மாலை 6.00 மணிக்கு தோழர் சமந்தாவை ஏதோ எழுத்துப் பணி குறித்துப் பேசுவதற்காக அழைத்த போது அவர்கள் சொன்ன செய்தி இடிபோல் இறங்கியது: தம்பி முத்து தூக்குப் போட்டுக் கொண்டான்!

தோழர் சமந்தா இமாச்சலில் நடக்கவிருந்த நக்வெய்ன் மார்க்சியப் பள்ளி செல்வதற்காக சென்னையிலிருந்து தில்லிக்குத் தொடர்வண்டியேற வேண்டும். சென்ட்ரல் சென்று வழியனுப்புவதற்காகக் காலையில் நாங்கள் புறப்பட்ட போது முத்துவும் எங்களோடு சேர்ந்து கொண்டார். சுதா காரோட்டினாள். சுட்டிக் குழந்தை பொருநை அம்மா மடியில் உட்கார அடம்பிடித்துக் கொண்டே வந்தாள். முத்துவின் முழுக் கவனமும் பொருநை மீதுதான்! அவளுக்கு ஏதாவது வேடிக்கை காட்டிக் கவனம் ஈர்க்க ஏதேதோ செய்து கொண்டே வந்தார். சமந்தாவை வழியனுப்பி விட்டு வீடு திரும்பும் போதும் பொருநையோடு விளையாடிக் கொண்டும் அவளைப் படம்பிடித்துக் கொண்டுமே வந்தார்.

அவருக்கொரு பெண் குழந்தை இருப்பதையும், அந்தக் குழந்தையைப் பிரிந்திருப்பதையும் அஜந்தாம்மா (தோழர் அஜந்தா) சொல்லி அறிந்திருந்தேன். முத்துவின் முழுப்பெயர் முத்து மூர்த்தி. இருவழிப் பாட்டனார்களையும் சேர்த்து வைத்த பெயர் என்றார்கள்!

தோழர்கள் அஜந்தாவுக்கும் சமந்தாவுக்கும் தம்பி, தீக்கதிரில் பணியாற்றிய கவிஞர் தோழர் ஏதெ சுப்பையனின் கடைப்பிள்ளை... இவரைப் பற்றி இன்னும் தெரிந்து கொள்ள வேண்டும், ஆனால் அவசரமில்லை, கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிந்து கொள்ளலாம் என்றிருந்தேன். தோழர் மங்கையின் நாடகக் குழுவில் இருக்கிறார், அரங்கம் அமைக்கும் கலையில் வல்லவர், என்றெல்லாம் தெரிந்து கொண்டேன். தமிழ் மக்கள் மேடை நிகழ்ச்சியில் பாடிய செய்தி தெரிந்த போது அவர் மீது கூடுதலான அக்கறை பிறந்தது. தமிழ்த் தேசம் இதழ் வேலையாகச் சென்னையில் தோழர் சமந்தாவைப் பார்க்கப் போகும் போது சில நேரம் அவரையும் பார்த்ததுண்டு. தனியறையில் இசைக்கருவியோடு உட்கார்ந்திருப்பார். வெளியில் எட்டிப் பார்த்து “தோழர், நல்லா இருக்கிங்களா?” என்று கேட்டு விட்டு மறைந்து விடுவார்.

புலனத்தில் உரையாடலாம் என்று தொடங்கினேன். முதலில் அவர் சில பாடல் பதிவுகளை

அனுப்பியிருந்தார். "Pearlophony" என்று பெயரும் கொடுத்திருந்தார். ஒரு பாட்டு அதற்கான காட்சியோடு இருந்தது. இது யார் அமைத்த இசை? என்று கேட்டேன். நான்தான் தோழர் என்ற விடையில் வருத்தம் கலந்திருந்தது. அவரே தனியாக அமர்ந்து கையில் இசைக் கருவியோடு பாடுகிற காட்சி மனந்தொடும். பள்ளிக் குழந்தைகளுக்கு இசை கற்பிக்கும் காட்சி: அந்த ஹோசிமின் தாடியும் முடிந்த பின்முடியுமாக… அவரும் அந்தக் குழந்தைகளில் ஒருவராகவே எனக்குத் தெரிந்தார்.

இந்த இளைஞனை விடக் கூடாதென்று நினைத்தேன். அவரது கலைத்திறன், இயற்கை நேயம், குழந்தைப் பாசம், தன்னலமில்லா நட்புணர்வு எல்லாவற்றையும் அவருடன் பிறந்த அக்காமார் இருவரிடமும் தெரிந்து வைத்திருந்தேன். கொரோனாக் காலத்தின் நெருக்கடி ஒவ்வொருவரையும் தாக்கியதுதானே? தொலைபேசியில் அழைத்துக் கேட்டேன்: "என்ன செய்றீங்க?" அவரது பதில் எனக்கு நிறைவளிக்கவில்லை. பள்ளிகளுக்குச் சென்று குழந்தைகளுக்கு இசை கற்றுத் தருவீர்களே? இப்போது அதையே ஆன்லைனில் செய்யலாமே? வாய்ப்பில்லை என்றார். "எனக்காக ஒன்று செய்யுங்கள், நான் பாட்டு எழுதுகிறேன், நீங்கள் இசையமையுங்கள். அல்லது இசை போட்டுக் கொடுங்கள் நான் எழுதித் தருகிறேன்" என்றேன். "சரி தோழர், நேரில் பேசிக் கொள்வோம்" என்றார்.

புலன உரையாடலில் அவருக்குக் கொஞ்சம் மனச்சிக்கல் இருப்பதாக எனக்குத் தோன்றியதால் அவரோடு தொடர்ந்து உரையாட வேண்டும் என்று நினைத்தேன். ஒரு முறை… தான் சுரண்டப்படுவதாக அவர் எழுதிய போது "தற்கழிவிரக்கம் (self-pity) வேண்டாமே" என்றேன். அவர் அதை மறுத்தார். சரி, இல்லையென்றால் விடுங்கள் என்று விட்டு விட்டேன். விட்டிருக்கக் கூடாது! சென்னையை விட்டுத் தொலைவாக வந்து விட்டதால் அவ்வப்போது பார்க்கிற வாய்ப்பும் இல்லாது போயிற்று. ஒருவேளை நெருங்கிப் பழகியிருந்தால் அவர் மனம் போகும் போக்கை உணர்ந்து இந்த முடிவைத் தவிர்த்திருக்கலாமோ என்ற எண்ணம் வந்து போகவே செய்கிறது.

முத்துவின் மறைவு நம் இயக்கக் குடும்பத்தை எதிர்பாராமல் தாக்கிய பேரிழப்பு. தோழர் பட்டுக்கோட்டை இராமசாமியை அழைத்துக் கொண்டு நேரில் பேராவூரணி சென்று

குடும்பத்தினரைச் சந்தித்துத் துயர் பகிர்ந்து திரும்பினேன்.

தளையிடாமல் வளர்த்த தாய்தந்தை! யாருக்குமே கிடைக்காத அக்காமார்கள்! மாமா செல்லங்களான விளாதிமிர், ஜென்னி! உயிருக்குயிரான தன் ஒரே பெண்குழந்தை யாழினி! அக்கணம் எந்த முகமும் உன் கண்முன் தோன்றவில்லையா, முத்து? எந்தத் தன்னலம் உன் கண்ணை மறைத்தது? வந்து சொல்லி விட்டுப் போ! இவன் ஏன் விளைவு கருதாமல் இப்படிச் செய்தான்? என்று கோபப்படுவதும் கூட இப்படியோர் அரிய முத்தைக் காப்பாற்றத் தவறி விட்டோமே என்ற வருத்தவுணர்வை நேர்செய்யாதா?

இந்தக் காலத்தில் இப்படிப்பட்ட முத்துக்கள் கிடைப்பது அரிது. கிடைத்த ஒரு முத்தைத் தொலைத்து விட்டோம் என்ற தவிப்பு அவரை அறிந்து நேசித்த எனக்கும் மற்றவர்களுக்கும் இல்லாமற்போகாது.

முத்து விட்டுப்போன சொத்து கொஞ்சம் இசையும் நிறையப் பாடமும்!